DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker
Homelife/Future Reality Inc., Brokerage
Joy H Selvanayagam, Broker

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam, Broker
RE/MAX
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam, Sales Representative
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel : 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்
சிந்திக்கும் தமிழ் உலகின் உலகில் எத்திக்கும் ஒலிக்கும் அபாய மொழி
$1.00
416-752-1524
416-752-6703
உதயம் 1307
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday April 23, 2021

# 354 பில்லியன் டாலர்கள் துண்டு விழும் தொகையைக் கொண்ட வரவு செலவுத் திட்டமாக இருப்பினும், கனடியர்களில் அனைத்துத் தரப்பினரும் பயனடையும் வாய்ப்புக்கள்



கோவிட்-19 நோயின் தாக்கம் நிறைந்து காணப்படும் உலகில் கனடா தேசமும் இதற்கு விதி விலக்காகவில்லை.தமிழ் மக்கள் அதிகமாக வாழும் ஒன்றாரியோ மாகாணத்தில் நோயின் தாக்கம் அதிகரித்து, மருத்துவ வசதிகள், தடுப்பூசிகள் ஆகியவற்றின் தட்டுப்பாடு காரணமாக வேறு மாகாணங்களிலிருந்து உதவிகள் எதிர்பார்க்கப்படும் நிலையின் கனடாவின் சிறுபான்மை லிபரல் அரசின் இரண்டாவது வரவு செலவுத்திட்டம் இன்று திங்கட்கிழமை ஒட்டாவா மாநகரில் உள்ள பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. *(உள்ளே 5ம் பக்கத்தில் தொடர்ச்சி)*

# ஒன்றாரியோ மாகாணம் யூலை மாதத்தில் 8 மில்லியன் தடுப்பூசிகளைப் பெறவுள்ளது



கனடிய மத்திய அரசு ஏற்கெனவே அறிவித்த அட்டவணையின்படி, ஜூலை தொடக்கத்தில் ஒன்ராறியோ மாதம் கிட்டத்தட்ட எட்டு மில்லியன் குப்பிகள் ஃபைசர் கோவிட் -19 தடுப்பூசிகளைப் பெறுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இ து தொடர்பாக எமக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி விநியோகத்தில் தாமதங்கள் ஏதும் இல்லை என்றும் ஆனால் திட்டமிட்ட படி ஒவ்வொரு வாரமும் 930,000 க்கும் மேற்பட்ட அளவுகள் மே மாதம் தொடக்கம் ஒன்றாரியோ மாகாணத்திற்கு கிடைக்கவுள்ளன என்றும் அறியப்படுகின்றது

ஃபைசர் தடுப்பூசிகள் எதிர்பார்க்கப்பட்ட எண்ணிக்கை, ஜூன் 20 க்குள் முதல் தடுப்பூசி போட்டுக்கொள்ள விரும்பும் ஒவ்வொரு வயதுவந்தோருக்கும் வழங்குவதற்கான அதன் இலக்கை அடைவதற்கு ஒன்ராறியோ தயாராக உள்ளதாகவும் கூறப்படுகின்றது. ஒன்ராறியோவின் கோவிட் -19 தடுப்பூசி விநியோக பணிக்குழுவின் தலைவரான ஹோமர் டியென், ஈவ்லின் குவாங்கிற்கு ஒரு நேர்காணலில் ஃபைசரின் விநியோகங்கள் "மிகவும் வழக்கமானவை, இது நம்பகமானது" என்று கூறியுள்ளார்

அவர் மேலும் கூறுகையில் "அதே எண்ணிக்கையிலான அளவுகள் வாரந்தோறும் கிடைக்கும், அதாவது கிளினிக்குகள் அவற்றின் ஒதுக்கீட்டை எதிர்பார்த்து திட்டமிட முடிகிறது - ஆகவே அதிகமான விநியோகம் மற்றும் வழங்கல் இடம்பெற்றால், அனைத்தும் ஒழுங்காக இடம்பெறும் என்று கூறப்படுகின்றது

மே, ஜூன் கால கட்டத்தில், ஃபைசரின் பெரிய ஏற்றுமதிகளை இப்போதுள்ள அதே வழக்கமான முறையில் வழங்குவதாக சில வாக்குறுதிகள் உள்ளன என்று நான் நினைக்கிறேன், "இதுவரை நாம் கண்டதை விட" கணிசமாக அதிகமான "தடுப்பூசிகள் கிடைக்க வாய்ப்புள்ளது, என்றும் தெரிவித்துள்ளார்.

ஒன்ராறியோ இன்றுவரை அங்கீகரிக்கப்பட்ட அனைத்து **COVID-19** தடுப்பூசிகளில் 5,242,495 அளவுகளைப் பெற்றுள்ளது மற்றும் புதன்கிழமை காலை நிலவரப்படி 4,131,882 மருந்துகளை வழங்கியுள்ளது.

மே 2 க்கு பின்னர் மாடர்னா தடுப்பூசியின் ஒதுக்கீட்டை இந்த அட்டவணை தற்போது கணிக்கவில்லை. டொராண்டோவில் உள்ள கிளினிக்குகளில் நோய்த்தடுப்பு முயற்சிகளை சீர்குலைக்கும் ஏற்றுமதி தாமதங்களை மாடர்னா கண்டிருக்கிறது. "மாடர்னா இன்னும் கொஞ்சம் சிக்கலானது, ஏனென்றால் நாம் செய்திகளில் பார்த்தபடி, இது மிகவும் அரிதாகவே கிடைக்கிறது - அளவுகள் எல்லா நேரத்திலும் குறைக்கப்படுகின்றன," என்று டீன் விளக்கினார்.

## யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் மீண்டும் நிமிர்ந்து எழுந்தது 'முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி'



(உள்ளே 15ம் பக்கத்தில் விபரமான செய்தி)

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404

# COVID-19 தடுப்பூசிகள் பாதுகாப்பானவை என்று நான் அறிந்து கொள்வது எப்படி?

Health Canada பாதுகாப்பான, பயனுள்ள உயர் தரமுள்ள தடுப்பூசிகளுக்கு மாத்திரமே அனுமதி வழங்குகிறது. கனடாவின் உயர் தரத்ததிலான, கடுமையான தடுப்பூசி மீளாய்வுச் செயன்முறைக்கு உலகம் முழுவதிலும் அங்கீகாரம் உள்ளது.

Canada.ca/covid-vaccine இணையத்தளத்தில் **COVID-19 தடுப்பூசிகள் தொடர்பில் மேலும் அறிந்து கொள்ளுங்கள்.**

1-833-784-4397




Government of Canada Gouvernement du Canada

Canada




# கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மக்கள் தொடர்பான பணிகள் எதுவும் இல்லையா?

இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் வாழ்க்கை என்பது ஒரு பிரச்சனையாகவே உள்ளது. வடக்கு கிழக்கு மக்கள், இஸ்லாமியர்கள், சிங்கள மக்கள், தோட்டத் தொழிலாளர்கள் என அனைத்து தரப்பினர்களுக்கும் வாழ்வாதாரம் என்பது கேள்விக்குறியாகவே உள்ளதை நாம் காண்கின்றோம்.

மேல் தட்டு மக்கள் மற்றும் நடுத்தர வர்த்தகத்தைச் சேர்ந்தவர்களில் ஒரு பகுதியினர் போன்றோர், எவ்வகையான தங்கள் பிரச்சனைகளையும் சமாளித்துச் செல்லும் வாய்ப்புக்கள் அவர்களுக்கு உள்ளன. ஆனால் அடித்தட்டு மக்கள் என்ன செய்வார்கள். முக்கியமாக வடக்கு கிழக்கில் யுத்தத்தின் பின்னர் அதிக பாதிப்புக்களை எதிர்நோக்கும் இலட்சக் கணக்கான மக்கள் உள்ளார்கள். அவர்கள் பிரச்சனைகளை தீர்த்து வைக்கவல்ல அரசு சார்ந்த அதிகாரிகள் பலர் இருக்கின்றார்கள். ஆனால் அந்த பாதிக்கப்பட்ட மக்கள் பல்வேறு எதிர்பார்ப்புக்களோடு வாக்களித்து பாராளுமன்ற உறுப்பினர்களாக்கிய எமது தமிழ் பேசும் எம்பிக்கள் பற்றிய பல கேள்விகளே இந்த வாரத்தின் கதிரோட்டத்தின் முக்கிய விடயங்களாக எமக்கு தோன்றுகின்றன.

தற்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமன்றி ஏனைய சிறு கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களாக இலங்கைப் பாராளுமன்றத்தை அலங்கரிக்கும் தமிழ் அரசியல்வாதிகள் கூட எமது மக்களுக்காக என்ன செய்கின்றார்கள் என்பதே வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் கேள்வியாக உள்ளது இவர்களுள் முன்னாள் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவோ அன்றி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்பியோ, இவர்கள் கூட விதி விலக்காக இருக்க முடியாது.

கடந்த பொதுத் தேர்தல் நடந்து முடிந்து பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொண்ட ஆரம்ப நாட்களில், "புதிய துடைப்பம் நன்றாக சுத்தம் செய்யும்" என்ற கூற்றுக்கு ஏற்ப பல தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் "சத்தம்" எழுப்பினார்கள். ஆனால் நாளடைவில் இலங்கைப் பாராளுமன்றத்தின் நிகழ்ச்சி நிரல் மற்றும் எதிர்பாராத சம்பவங்களினால் நாடே திசை மாறிக்கிடக்கின்றது. தென்னிலங்கையில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களே கிளர்ச்சி செய்யும் அளவிற்கு அங்கு ராஜபக்ச குடும்பத்தின் ஆட்சியின் பிரதிபலிப்புக்கள் வெடித்துக் கிளம்பிய வண்ண்ம் உள்ளன. முக்கியமாக " சீனாவின் துறைமுக நகரம்" என்னும் விடயம் அரசாங்கத்தின் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களையே ஜனாதிபதியையும் பிரதமரையும் பார்த்து கேள்வி கேட்கும் அளவிற்கு பிரச்சனைகள் தோன்றியுள்ளன.

இவ்வாறான இடர்கள் நிறைந்த இந்த நேரத்தில் தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் நாளாந்த கடமைகளாக எமது மக்களுக்கு எவ்வகையான சேவைகளை ஆற்றுகின்றார்கள் என்பதை கவனிக்க வேண்டிய பொறுப்பு அங்குள்ள சமூகத் தலைவர்களுக்கு உள்ளது. குறிப்பாக சிவில் சமூகத்தின் தலைவர்களாக அங்கு தங்களை அடையாளம் காட்டிக் கொள்ளும் சேவையாளர்கள் மக்களின் பிரச்சனைகள் தொடர்பாக குரல் கொடுப்பதைப் போன்று தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ன பணியாற்றுகின்றார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும் என்பதையே நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இதற்கு காரணங்கள் இருக்கின்றன. தமிழ் மக்களின் தலைவர்களாக இன்றிலிருந்து நாற்பது வருடங்களுக்கு முன்னர் இருந்தவர்களில் உடுவில் தொகுதி தர்மலிங்கம் அவர்கள் முக்கியமானவர். அவர் தமிழ்த் தேசியத்திற்காக குரல் கொடுக்கும் ஒருவராக இருந்தாலும் "உலக மக்களே ஒன்று படுங்கள்" என்ற சோசலிச கருத்துக்களையும் ஏற்றுக் கொண்டவராக இருந்தார். அவரது புதல்வர் சித்தார்த்தன் தமிழ் இளைஞர்களின் தீவிரவாதப் போராட்டத்தின் தன்னை இணைத்துக் கொண்டவர். தமிழ் இளைஞர்கள் மிகுந்த ஆர்வத்தோடு ஆயதப் போராட்டத்தை முன்னெடுத்த போது ஒரு விடுதலை இயக்கத்தோடு தன்னை இணைத்துக் கொண்டு எத்தனையோ வருடங்கள் ஆயதப் போராடமும் அது சார்ந்த அரசியலும் இணைந்த அரசியலில் செயற்பட்டார். அந்த நேரத்தில் தர்மலிங்கம் எம்பி யின் மகன் என்ற காரணத்தால் அவர் மக்களால் பெரிதும் விரும்பப்பட்டார்.

தற்போது பல ஆண்டுகளாக யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக உள்ள சித்தார்த்தன் அவர்கள் ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு உள்ள அனைத்து வசதிகளையும் சலுகைகளையும் அனுபவித்து வருகின்றார். துன்னை பாராளுமன்றத்திற்கு அனுப்பிவைத்த மக்களின் பிரச்சனைகள் பற்றி பேசாமல், அண்மையில் தெரிவித்த ஒரு கருத்து தொடர்பாக தாயகத்திலும் புலம் பெயர்ந்த நாடுகளிலும் அவர் பற்றிய விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

இலங்கையில் மாகாணசபைத் தேர்தல் ஒன்று இடம்பெறுமானால் தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் மாவை சேனாதிராஜாவே முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டும் என்ற கருத்தை அவர் பகிரங்கமாகவே தெரிவித்துள்ளார் அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,..

தற்போதைய அரசாங்கமானது மாகாணசபைத் தேர்தல்களை நடத்தும் நிலைப்பாட்டிலிருந்து விலகிச் செல்வதற்கான அறிகுறிகளே பெரும்பாலும் காணப்படுகின்றன. எல்லை நிர்ணயக் குழுவை ஏற்படுத்தி மாகாணசபை தேர்தல்களை பிற்போடுவதற்கான முயற்சிகள் அரங்கேறி வருகின்றன. என்று தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்...

"மாகாண சபையை பொருத்தவரை அரசியல் பேசும் இடமல்ல, அதிகாரிகளுடன் இணைந்து அபிவிருத்திகளை திட்டமிட்டு செயற்படுத்தக்கூடிய சபை. இதனை நன்கு செயற்படக்கூடிய ஆளுமை அரசியல் அறிவு அதிகாரிகளுடன் அன்னியோன்னியமாக நடந்து கொள்ளக் கூடிய ஆற்றல் உள்ள ஒருவர் தேவை" என்றும் வலியுறுத்தியுள்ள அவர், இன்னொரு பக்கத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உயர் அரச நிர்வாக அதிகாரியாக இருந்த ஒரு தகுதியான ஒருவரின் பெயர் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளர் என்ற வகையில் பிரஸ்த்தாபிக்கப்படுவதை மறுதலிக்கின்றார். மாகாண சபையை நடத்துவதற்கு ஒரு அரசியல்வாதி தேவையில்லை என்றால் அவர் ஏன் மாவை சேனாதிராஜாவின் பெயரை கொண்டு வரவேண்டும். தற்போது வடக்கில் பேசு பொருளாக உள்ள நிர்வாகத் திறமை கொண்ட ஒருவரை தமிழ் மக்களின் பிரதிநிதியாக நிறுத்துவதன் மூலம் அரசியல் முரண்பாடுகளுக்கு அப்பால் நல்ல ஒரு முதலமைச்சரை எமது மக்களுக்காகப் பெற்றுவிடலாம் அல்லவா? இன்னொரு பக்கத்தில் இத்தனை வருட காலம் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த 'மாவை' அவர்கள் மற்றவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்ற குரலாக சித்தார்த்தன் செயற்படலாம் அல்லவா?

கடந்த தேர்தலில் மக்களால் புறக்கணிக்கப்பட்ட மாவை சேனாதிராஜாவை முதலமைச்சர் பதவியில் அமர்த்த வேண்டும் என்று விரும்புவது, மறுபக்கத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடபகுதி மீனவர்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பார் என்று பத்திரிகைகளுக்கு அறிக்கை எழுதிக் கொடுப்பது, மாகாண சபையின் நிர்வாகத்தில் அரசியல் தேவையில்லை எனற கருத்தை வெளியிடுவது போன்ற விடயங்களை இவர் கவனிக்காமல் வடக்கில் வாழ்க்கையின் அடிமட்டத்தில் உள்ள முன்னாள் போராளிகள், போரினால் பாதிக்க மக்கள் மற்றும் விதவைத் தாய்மார் ஆகியோரின் நலன்களை சித்தார்த்தன் போன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனிக்க வேண்டும் என்ற வேண்டுகொளை இவ்வார கதிரோட்டம் மூலம் நாம் பதிவு செய்ய விரும்புகின்றோம்.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# இந்தியா பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து கனடாவிற்கு வரும் அனைத்து விமானங்களையும் கனடிய அரசு நிறுத்தியுள்ளது





தென்னாசியப் பிராந்தியத்தில் அதிகரித்து வரும் கோவிட் -19 வழக்குகளின் அலை காரணமாக இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து கனடாவிற்கு வரும் அனைத்து விமானங்களையும் 30 நாட்களுக்கு தடை செய்வதாக கனடா மத்திய போக்குவரத்து அமைச்சு நேற்று வியாழக்கிழமை தெரிவித்துள்ளது.

கனடாவின் மத்திய போக்குவரத்து அமைச்சர் ஓமர் அல்காப்ரா வியாழக்கிழமை இரவு தொடக்கம் இந்த தடை அமுல் செய்யப்படும் என்று கூறினார், கடந்த 24 மணி நேரத்தில் 314,000 க்கும் அதிகமான புதிய தொற்றுநோயாளர்கள் அங்கு இருப்பதாக இந்தியா உலகளவில் பதிவு செய்துள்ளது. எனினும் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து வரும் சரக்கு விமானங்கள் நிறுத்தப்பட மாட்டா என்றும் அமைச்சர் கூறினார். இந்தியாவிலிருந்து கனடாவுக்கு விமானம் மூலம் வந்த பின்னர் கொரோனா வைரஸுக்கு சோதனை செய்யப்பட்ட பாதி பேர் சாதகமான முடிவுகளைப் பெற்றார்கள் என கனடாவின் மத்திய சுகாதார அமைச்சர் பாட்டி ஹஜ்து தெரிவித்தார். இந்தியாவிலிருந்து வரும் விமானப் போக்குவரத்து கனடாவிற்கு வரும் விமானங்களின் தொகையில் ஐந்தில் ஒரு பங்கைக் கொண்டுள்ளது.

பாக்கிஸ்தானில் இருந்து விமானங்களில் பயணிப்பவர்களிடையே அதிக எண்ணிக்கையிலானவர்களும் பரிசோதனைகளின் பின்னர் அவர்கள் சாதகமான முடிவுகளைப் பெற்றார்கள் என்றும் அவர் கூறினார்.

"எங்கள் விஞ்ஞானிகளும் ஆராய்ச்சியாளர்களும் ஆய்வுகளை மேற்கொண்ட பின்னர் முடிவுகளை எடுத்த போது அந்த பிராந்தியத்திலிருந்து விமானப் பயணத்தை இடைநிறுத்துவது அர்த்தமுள்ளதாக இருக்கிறது. மேலும் கனடாவிற்கு பிரேசிலில் இருந்து நேரடியாக விமானங்கள் எதுவும் தற்போது வருவது இல்லை, அங்கும் கோரோனா தொற்றாளர்களின் தொகை அதிகரித்து இறப்புக்களும் அதிகரித்து வருகின்றன." என்றும் அமைச்சர் ஹஜ்து கூறினார். இது இவ்வாறிருக்க , கடந்த மார்ச் மாதத்தில் இந்தியாவிலிருந்நது மட்டும் சுமார் ஆயிரம் மாணவர்கள் இங்குள்ள சமூகக் கல்லூரிகளில் அனுமதி பெற்று விமானங்கள் மூலம் கனடா வந்தார்கள் என்றும் விமான நிலைய உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

**பெண்களுக்கு வேலைவாய்ப்பு**

ஸ்காபுறோவில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் உடனடியாக வேலைவாய்ப்புக்கள் உள்ளன.

தயவு செய்து பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

விபரங்களுக்கு: ஜெயா
647 669 2739
**(647) 669-2739**

**BASEMENT FOR RENT**

**FINCH & MORNINGSIDE**

**2 Bedroom bsmt for rent.**
**Sep entrance, laundry, kitchen**
**Close to TTC,**
**Working couple preferred**
**Avail: May 01/2021**

**Tel: (647) 581-2225**

**CONDO FOR RENT**

**Kennedy / 401**
கெனடி வீதியல் அமைந்திருக்கும் 1950ல் 2 **bedroom apartment** வாடகைக்குண்டு.
**Close to Highland Farms,**
**Hwy 401, school, and bus stop.**
**Parking & Cable included.**
அனைத்து வசதிகளுடன் உண்டு.
தொடர்புகளுக்கு:
**647-299-4238**
**905-472-4322 416-417-0471**

**தனி நபர் ஒருவருக்கு அறை தேவை**

**ஸ்காபுரோ, மிசிசாகா அல்லது பிரம்ரன் நகரங்களில் ஒரு வீட்டில் அல்லது பேஸ்மண்ட் இல்**
**60 வயதுடைய தனி நபர் ஒருவர் வசிக்க அறை தேவை.**
**சாப்பாட்டுடன் அல்லது சாப்பாடு இல்லாமலும் விரும்பத்தக்கது.**
**இன்னொருவருடன் ஒரு அறையில் சேர்ந்தும் இருக்கலாம்.**

**தொடர்புகளுக்கு ராஜா:**
**(647) 787-2132**

**ROOM FOR RENT**

**Kennedy / Eglinton**
**2** அறை கொண்ட தொடர்மாடிக் கட்டடத்தில் **(apartment)** இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு.
**NO smoking, alcohol or pets.**
**1 person: $900 / 2 people: $600**
**Available Immediately**


**A1Canada, Rental Services**
**Mr. Ratha Francis:**
**(416) 752-4444**
**Cell: (416) 857-5252**

# கொலையாளிகள், ஊழல்வாதிகளைப் பாதுகாக்க விழைகிறதா ராஜபக்ச அரசு?

**- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)**

**நா**டாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் மேலாகக் கொண்டுள்ள இலங்கை அரசு, சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு சட்டப் பாதுகாப்பு அளிக்க முயல்கிறது. இதன் மூலம் அரசால் முன்னெடுக்கப்பட்ட குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி கிடைக்காமல் போகும் நிலை நாட்டில் ஏற்படக் கூடும் எனும் அச்சங்கள் எழுந்துள்ளன.

ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைய அமைச்சரவையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மசோதா ஒன்றை பிரதமர் மஹிந்த ராஜபக்ச முன்வைத்துள்ளார். அந்த மசோதா மூலம் அதிகாரிகள் உட்பட இராணுவத்தினர், ராஜபக்ச குடும்பத்தினர் மற்றும் ஆளும் கட்சியின் முக்கியப் புள்ளிகள் மீது தற்போது நீதிமன்றத்திலுள்ள ஏராளமான வழக்குகள் திரும்பப் பெறப்படுகின்றன. அது மட்டுமின்றி அந்த வழக்குகளை விசாரித்த அதிகாரிகளுக்கு தண்டனை அளிக்கும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவுள்ளது.




இந்த மசோதா நாடாளுமன்றத்தில் 22 மற்றும் 23ஆம் திகதிகளன்று விவாதிக்கப்படுகிறது. முன்னதாக இந்த மசோதா ஏப்ரல் 21ஆம் திகதி விவாதத்திற்கு வந்த போது சபையில் பெரும் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டு சிறிது நேரம் சபை ஒத்தி வைக்கப்பட்டது.

அந்த சட்ட முன்மொழிவுக்கு அங்கீகாரம் கிடைத்து அது சட்டமாகும் போது "அதிகாரக் கட்டமைப்பின் குறியீடுகளாக" ஐ நாவால் அடையாளம் காணப்பட்டு வழக்கை எதிர்கொண்டுள்ள இராணுவம் மற்றும் கடற்படையைச் சேர்ந்த பலர் அதிலிருந்து விடுபட்டு சுதந்திரமாகத் திரியும் நிலை ஏற்படக் கூடும். அப்படியாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வழக்கு விசாரணைகளை எதிர்கொண்டுள்ளவர்களில் 11 ஆடவர்களைக் கடத்தி, சித்திரவதை செய்து கொல்லப்பட்டது, ஊடகவியலாளர் பிரகீத் எக்நெலிகொட கடத்தி காணாமல் ஆக்கப்பட்டது, மற்றொரு செய்தியாளரான லசந்த விக்ரமதுங்க கொலை செய்யப்பட்டது, மேலுமொரு பத்திரிகையாளர் கீத் நொய்ஹார் கட த்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டது ஆகியவையும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த நடராஜா ரவிராஜா படுகொலை போன்றவைகளில் தொடர்புடையவர்களும் அடங்குவர். கொல்லப்பட்டவர்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்கள் மீதான அநியாயங்கள் அனைத்தும் போர் வலயத்திற்கு வெளியே நடைபெற்றவை.

மிகவும் மோசமான இந்த மனித உரிமை மீறல்கள் தற்போது ஜனாதிபதியாக இருப்பவர் போர்க் காலத்தில் சகல வல்லமையுடன் இருந்த சமயத்தில் நடைபெற்றன. அந்த சமயத்தில் இப்போது பிரதமராக இருக்கும் அவரது சகோதரர் நாட்டின் அதிபராக இருந்தார். பன்னாட்டு அழுத்தங்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்த முயற்சிகள் காரணமாக நாட்டின் கடற்படை தளபதியாக இருந்த அட்மிரல் வசந்த கரணாகொட உட்பட பல உயர்மட்ட இராணுவ மற்றும் கடற்படை அதிகாரிகள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

"நீதிமன்றங்களின் முன் நிலுவையில் இருக்கும் குற்ற வழக்குகளை திரும்பப் பெறும் முன்னெடுப்புகள் எதையும் தீவிரமாகத் தடுப்போம்" என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

அரசியல் ரீதியாகப் பழிவாங்கப்பட்டவர்கள் தொடர்பில் அமைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவின் பரிந்துரைகள் மற்றும் முடிவுகளை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இந்தாண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதியன்று உத்தரவிட்டிருந்தார். அந்த ஆணைக் குழு ஏராளமான பாதுகாப்பு படை அதிகாரிகள் மீது அப்பட்டமான மனித உரிமை மீறல்களுக்காக நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளை மீளப்பெற பரிந்துரை செய்திருந்தது.

"பாதுகாப்புப் படைகள் மற்றும் பொலிசில் பதவிகளில் இருந்தவர்கள், சிவில் அதிகாரிகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் ஊழியர்கள் ஆகியோர், தாங்கள் பழிவாங்கப்படுவதாக கூறப்படுவது குறித்து புலனாய்வு செய்து விசாரித்து தகவல்களைப் பெறுமாறு" முந்தைய அரசாங்கத்தால் அந்த ஆணைக் குழு அமைக்கப்பட்டது.

இரண்டாயிரம் பக்கங்களுக்கும் அதிகமாகக் கொண்ட அந்த அந்த இறுதி அறிக்கை கடந்த டிசம்பர் 2020ல் ஜனாதிபதியிடம் அளிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் பாதுகாப்புப் படையினர் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்குத் தொடுக்கப்பட்டது - "நாட்டை 30 ஆண்டுக் கால பயங்கரவாதத்திலிருந்து காப்பாற்றிய போர் வீரர்களை" - தண்டிக்க முன்னெடுக்கப்பட்ட ஒருங்கிணைந்த நடவடிக்கையாகும் என்று கூறப்பட்டுள்ளது. தற்போதுள்ள ஜனாதிபதி தொடர்ச்சியாக போர்க் குற்றச்சாட்டுகள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதைத் தடுக்க, அவர்களுக்கு சட்ட ரீதியான பாதுகாப்பை அளிக்க முனைப்பாகச் செயல்படுகிறார். அவர் காப்பாற்ற முயற்சிக்கும் நபர்கள் மீது பாரிய மனித உரிமை மீறல் குற்றஞ்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் (2019) உயிர்த்த ஞாயிறன்று நடைபெற்ற தாக்குதலுக்குப் பிறகு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச போர்க் காலத்தில் தன்னுடன் இருந்த படைத் தளபதிகளுடன் இணைந்து ஒரு அறிக்கையை தயாரித்தார். அந்த அறிக்கை பாதுகாப்பு அதிகாரிகளை தண்டனையில் இருந்து காப்பாற்றும் வகையில் இருந்தது.

கடந்த 2008-09ல் 11 ஆடவர்கள் காணாமல் ஆக்கப்பட்டது மற்றும் ஆட்கடத்தல், சித்திரவதை ஆகியவை தொடர்பிலான குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியிருந்தவரும் அந்த அறிக்கையை இணைந்து எழுதியவர்களில் ஒருவருமான இலங்கை கடற்படையின் முன்னாள் தலைவர் அட்மிரல் வசந்த கரணாகொடவின் பெயரும் இந்த மசோதாவின் மூலம் விடுவிக்கப்படவுள்ளவர்களின் பட்டியலில் உள்ளது.



பிரதமர் மஹிந்த ராஜபக்ச முன்மொழியும் இந்த மசோதா ஏற்றுக் கொள்ளப்பட்டு சட்டமானால், இதே வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள, கடற்படையின் மற்றொரு முன்னாள் தலைவரான ரியர் அட்மிரல் டி.கே. பி.தசநாயக்க, கமாண்டர் சுமித் ரணசிங்க, லெட்.கேணல் பிரசாத் சந்தன குமார ஹெட்டியராய்ச்சி ஆகியோரும் விடுவிக்கப்படுவர்.

ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை மற்றும் அதையொட்டிய மசோதா சட்டமாகும் போது மேலும் பல முன்னாள், இந்நாள் கடற்படை அதிகாரிகள் மற்றும் இதர படைகளின் அதிகாரிகள் ஆகியோர் விடுவிக்கப்படும் நிலை ஏற்படக் கூடும். கொழும்பில் இரு தமிழர்கள் கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் லெப். கமாண்டர் எம்.எம். தம்மிக அனில் மாபா மற்றும் லெப். கமாண்டர் டான் சுமேத சம்பத் தயானந்த ஆகியோரும் தண்டனையிலிருந்து தப்புவர்.

கடந்த 2010ல் ஊடகவியலாளர் பிரகீத் எக்நெலிகொட கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்டிருந்ததாகக் கூறப்படும் இராணுவப் புலனாய்வு அதிகாரிகளையும் விடுவிக்க அந்த ஆணைக் குழு பரிந்துரை செய்துள்ளது. பிரகீத் கடத்தல் தொடர்பில் குறைந்தது மேலும் 15 படையினரும் அதிகாரிகளும் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள்.




அதே போன்று ஊடகவியலாளர் கீத் நொய்ஹார் கடந்த 2008 ஆம் ஆண்டு கடத்தப்பட்ட சம்பவத்தில் தொடர்புடைய 14 சந்தேக நபர்களும், இந்த மசோதா நாடாளுமன்ற ஒப்புதல் பெற்று சட்டமானால் வழக்கிலிருந்து விடுவிக்கப்படுவர்.

ஜனாதிபதி ஆணைக் குழுவால் விடுவிக்க பரிந்துரைக்கப்பட்ட பட்டியலுள்ளவர்கள் ஏராளமானோர். அதில் முப்படைகளின் அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், இராணுவப் புலனாய்வாளர்கள் மட்டுமின்றி, "அவன்ட் கார்ட் வழக்கு" என்று அறியப்படும் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் ஊழல் வழக்கில் சிக்கியுள்ள பல முன்னாள் அதிகாரிகளும் இந்த மசோதா சட்டமானால் பயனடைவார்கள்.

பாதுகாப்பு அமைச்சின் கூடுதல் செயலராக இருந்த டி எம் சுமனசிறி திஸநாயக்க, அதே அமைச்சின் முன்னாள் துணைச் செயலர் டி எம் சுஜாதா தமயந்தி ஜயரட்ண ஆகியோரும் மேஜர் நிசான்க யாப்பா சேனாதிபதி, மேஜர் ஜெனரல் பாலித ஃபெர்ணாண்டோ மற்றும் விக்டர் சமரவீர போன்ற சந்தேக நபர்கள் மீதான வழக்லிருந்து அவர்களை விடுவிக்க அந்த ஜனாதிபதி ஆணைக் குழு பரிந்துரைத்துள்ளது.

அரசியல்வாதியான பாரத லக்ஸ்மனின் கொலையில் குற்றவாளி என்று கண்டறியப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறையிலுள்ள டுமிந்த சில்வாவும் இந்த சட்ட மூலம் ஒப்புதல் பெற்றும் சட்டாமகும் போது சுதந்திரமாக வெளியே வர முடியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜா கடந்த 2006ல் கொல்லப்பட்ட சம்பவத்தில் குற்றவாளியாகக் கண்டறியப்பட்டுள்ள கடற்படை புலனாய்வு அதிகாரி தெலிவல்கெதர காமினி செனிவரட்ன மற்றும் புலனாய்வு அதிகாரி கனகமகே பிரதீப் சமிந்த ஆகியோரும் வழக்கிலிருந்து விடுபட இப்போது வாய்ப்புள்ளது.

ராகபக்ச குடும்ப உறுப்பினர்களான பசில் ராஜபக்ச, யோஷித கனிஷ்க ராஜபக்ச, உதாயாங்க வீரதுங்க, ஜாலிய விக்ரமசூரிய மற்றும் திருக்குமார் நடேசன் ஆகியோரும், ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான பிரபாத் உதய கம்மன்பில ஆகியோரும் இந்த மசோதா சட்டமானால் ஊழல் தடுப்பு ஆணையக் குழு குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்படுவார்கள்.

பல மில்லியன் டாலர் அளவுக்கு ஊழலில் ஈடுபட்டதாக அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

கடந்த 2012 வெலிக்கட சிறையில் நடைபெற்ற படுகொலைகள் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டு வழக்கு விசாரணைகளை எதிர்நோக்கியுள்ள சந்தேக நபர்களாக ரனகஜீவ நியோமல் மற்றும் லமஹேவகே எமில் ரஞ்சன் ஆகியோர் மீதான வழக்குகளை மறு பரிசீலனை செய்வதற்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதலை அந்த மசோதா கோருகிறது.

இந்த மசோதா சட்ட வடிவம் பெற்று நடைமுறைக்கு வந்தால். "நாட்டில் சட்டத்தின் ஆட்சி, நீதித்துறையின் சுயாதீனம் ஆகியவை கேள்விக்குறியாகி, மோசமான முன்னுதாரணம் ஒன்றை ஏற்படுத்தும்" என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கூறியுள்ளது.

"இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும், அது நீதிமன்றங்கள் மீதோ அல்லது சட்டமா அதிபர் அலுவலகம் மீதோ எவ்விதமான தாக்கத்தையும் ஏற்படுத்தாமலும், ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு எந்த தடையும் இல்லாமலும் இருக்க வேண்டும்" என்று அந்த சங்கத்தின் செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது.

நாட்டின் நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள எந்த குற்ற வழக்குகளையும் விலக்கிக் கொள்ள இந்த மசோதா வழி செய்யுமாயின் அதை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மிகவும் தீவிரமாக எதிர்க்கும் என்றும், அதை பிரதமர் மஹிந்த ராஜபக்ச முன்னெடுக்கக் கூடாது என்றும் அந்த சங்கத்தினர் கோரியுள்ளனர்.

A Commentary
on the Presidential Commission of Inquiry
and the Special PCoI
on Political Victimization

நாடாளுமன்றத்தில் இந்த மசோதா அறிமுகப்படுத்தப்பட்ட போது கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டு அவை ஒத்திவைக்கப்பட்டாலும், என்று இந்த மசோதா விவாதத்திற்கு வந்தாலும், அதற்கு ஆதரவு கிடைத்து சட்டமாகும் என்பதில் ஐயமில்லை.

நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு தாருங்கள் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கோரியது இப்படியான விஷயங்களை முன்னெடுக்கத்தானோ என்று பல்தரப்பில் இப்போது கேள்விகள் எழுப்பப்படுகின்றன.


# 354 பில்லியன் டாலர்கள் துண்டு விழும் தொகையைக் கொண்ட வரவு செலவுத் திட்டமாக இருப்பினும், கனடியர்களில் அனைத்துத் தரப்பினரும் பயனடையும் வாய்ப்புக்கள்



கோவிட்-19 நோயின் தாக்கம் நிறைந்து காணப்படும் உலகில் கனடா தேசமும் இதற்கு விதி விலக்காகவில்லை. தமிழ் மக்கள் அதிகமாக வாழும் ஒன்றாரியோ மாகாணத்தில் நோயின் தாக்கம் அதிகரித்து, மருத்துவ வசதிகள், தடுப்பூசிகள் ஆகியவற்றின் தட்டுப்பாடு காரணமாக வேறு மாகாணங்களிலிருந்து உதவிகள் எதிர்பார்க்கப்படும் நிலையின் கனடாவின் சிறுபான்மை லிபரல் அரசின் இரண்டாவது வரவு செலவுத்திட்டம் 19-04-2021 திங்கட்கிழமை ஒட்டாவா மாநகரில் உள்ள பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

தற்போதைய நிதி அமைச்சரும் துணைப் பிரதமருமான கிறிஸ்டினா பிரிலாண்ட் இந்த பெருந்தொகை துண்டு விழும் வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றினார். ஆனால் மிகவும் உற்சாகமாகவும் துணிச்சலுடனும் அவர் உரையாற்றியபோது அவருக்கு மூன்று ஆசனங்கள் தள்ளி கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அமர்ந்திருந்தது அவருக்கு மனதில் ஒரு துணிச்சலைத் தந்திருக்கலாம்.

கனடிய தேசிய ஊடகங்கள் இந்த வரவு செலவத் திட்டம் பற்றி விமர்சனம் செய்கையில் முதலாவது இந்த தடவை கனடிய பாராளுமன்ற வரலாற்றில் முதற் தடவையாக ஒரு பெண் நிதி அமைச்சர் இதை தயாரித்து, சமர்ப்பித்து உரையாற்றுகின்றார் என்றும், இந்த நோய்த் தொற்று அச்சுறுத்தல், மற்றும் பொருளாதார நெருக்கடிகள் நிறைந்த நேரத்தில் இந்த வரவு செலவத் திட்டம் பாரிய துண்டு விழும் தொகையைக் கொண்டிருந்தாலும் சவால்கள் நிறைந்த ஒரு சமர்ப்பணம் என்று குறிப்பிட்டிருந்தன.



கனடியப் பிரதமரும் நிதி அமைச்சரும் ஒன்றாகவே தங்கள் அலுவலகங்களிலிருந்து பாராளுமன்றத்தை நோக்கி நடந்து வந்தார்கள். பின்னர் பாராளுமன்றத்தினுள் சபாநாயர் அவர்களின் அறிவிப்பைத் தொடர்ந்து நிதி அமைச்சர் சுமார் 700 பக்கங்களைக் கொண்ட வரவு செலவுத்திட்டத்தின் முக்கிய பகுதிகளை ஆங்கிலத்திலும் பிரன்ச் மொழியிலும் வாசித்தார். அருகில் அமர்ந்திருந்த பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்கள் சிரித்த வண்ணம் காணப்பட்டார்.

இன்று சமர்ப்பிக்கப்பட்ட கனடாவின் வரவு செலவுத்திட்டத்தில் மக்கள் நலன் சார்ந்த பல பிரிவுகளில் நிதி ஒதுக்கீடுகள் பாரிய அளவின் செய்யப்பட்டிருந்தன. குறிப்பாக சாதாரண தொழிலாளர்கள் தொடக்கம் பெரிய தொழில் நிறுவனங்கள் வரையில் அனைத்து தரப்பினரின் நலன்கள் நன்கு கவனிக்கப் பெற்று சலுகைளும் நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்பட்ருந்தன என்றால் அது மிகையாகாது.

முக்கியமாக பின்வரும் பிரிவுகளில் பாரிய நிதி ஒதுக்கீடுகளும் நிதிச் சலுகைகளும் வழங்கப்பட்டிருந்தன என்பதைப் பார்க்கும் போது கனடியர்களில் அனைத்துத் தரப்பினரையும் கவனத்திற் கொண்டு இந்த வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது அறியக்கூடியதாக இருந்தது. பின்வரும் பிரிவுகளின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடுகளும், சலுகைகளும் அறிவிக்கப்பட்டன.

தேசிய குழந்தைகள் பராமரிப்புத் திட்டம் (National Child Care Plan), புதிய தொழில்கள் உருவாக்கம் (Job Creation), மூத்தவர்களுக்கான கொடுப்பனவுகளில் அதிகரிப்பு (Supporting Seniors), சிறு தொழில் நிறுவனங்களுக்கான நிதி உதவிகள், கனடாவில் காணப்படும் இனவாதம் மற்றும் நிறவாதம் ஆகியவற்றுக்கு எதிராகப் போராடுதல் அல்லது அவற்றை அகற்றுதல், கனடிய இளைஞர்களுக்கு ஆரோக்கியமான சூழலை உருவாக்குதல், குறைந்த ஊதியத்தைப் பெறும் தொழிலாளர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகளை வழங்குதல், வீடற்றவர்களுக்கு வீட்டு வசதிகளைச் செய்து கொடுப்பது போன்ற தலைப்புக்களில் இநத வரவு செலவுத்திட்டத்தில், நிதி ஒதுக்கீடுகளும் செலவீனங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. முதலாவதாக கனடாவில் தொழில் பார்க்கும் பெற்றோரின் குழந்தைகள் பராமரிப்புச் செலவுகளை ஈடுசெய்ய முதல் ஐந்து வருடங்களுக்கு 30 மில்லியன் டாலர்களும் அதற்குப் பின்னர் வருடம் ஒன்றுக்கு 8.3 மில்லியன் டாலர்களும் ஒதுக்கப்படவுள்ளன. தன் மூலம் தங்கள் பிள்ளைகளை குழந்தைகள் காப்பகம் மற்றும் சிறுவர் பாடசாலைகளில் ஒப்படைத்து விட்டு, தங்கள் வேலைகளுக்குச் செல்லும் பெற்ர்களின் பணப்பிரச்சனை குறையும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. இவ்வாறான குழந்தைகள் காப்பகங்களில் ஊனமுற்ற குழந்தைகள் மற்றும் வருமானம் குறைந்த பெற்றோரின் குழந்தைகள் ஆகியோரும் இந்த நிதி ஒதுக்கீட்டின் பலன் பெறவுள்ளார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.




அடுத்து, கொரோனா நோய்த் தொற்று காரணமாக கனடா முழுவதிலும் பல நிறுவனங்கள் தங்கள் பணியாளர்களை வேலை நீக்கம் செய்துள்ளனர். அத்துடன் பல நிறுவனங்களை புதிய பணியாளர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு போதிய நிதி வாய்ப்புக்கள் இல்லாமல் சிரமங்களை எதிர்நோக்குகின்றன. எனவே கனடாவில் தொழில் நிறுவனங்கள் மற்றும் உற்பத்தி நிறுவனங்கள் ஆகியனவற்றில் புதிய தொழில முயற்சிகள் உருவாக்கப்படும் போது அந்த நிறுவனங்கள் அந்த புதிய பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதில் ஏற்படும் சிரமங்களைத் தவிர்ப்பதற்காக புதிய தொழில்களை உருவாக்கும் நிறுவனங்களின் தேவைகளுக்காக நிதி ஒதுக்கப்படுகின்றது.



மேலும் இந்த நாட்டில் பணிகளிலிருந்து ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெற்றுவரும் மூத்தோருக்கான மாதாந்தக் கொடுப்பனவோடு சேர்த்து மே மாதத்தில் 500 டாலர்கள் மேலதிகமாக வழங்கப்படவுள்ளது. அதற்கு மேலதிகமாக 75 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 10 வீத ஓய்வூதிய அதிகரிப்பு தொடர்ச்சியாக வழங்கப்படும்.

மேலும் கனடாவில் சிறு தொழில் நிறுவனங்கள் என்பன எமது சமூகத்தின் வளர்ச்சியிலும் நாட்டின் உற்பத்தியிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. எனவே தற்போதைய நோய்த் தொற்று காரணமாக இயங்க முடியாமல் உள்ள சிறு தொழில் நிறுவனங்களின் முடக்கத்தை போக்கும் முகமாகவும் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கும் வகையிலும் மேலும் நிறுவனங்களில் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் அபிவிருத்தி செய்ய நிதி உதவிகள் போன்றவற்றிக்காக 2 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் கனடாவில் குறைந்த சம்பளம் பெறும் ஊழியர்கள் இந்த கொரோனா நோய்த் தொற்று பரவுவதற்கு முன்னராகவே போதிய வருமானம் இன்றி தவித்தார்கள். அவர்களின் கஸ்டங்களை போக்கும் வகையில் அவர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகளை வழங்கி அவர்கள் பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர் வாழ்க்கையில் கஸ்டங்கள் இன்றி இருக்கும் வகையில் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்காக கனடாவில் ஆகக்குறைந்த சம்பளமாக மணித்தியாலத்திற்கு 15 டாலர்கள் சம்பளம் வழங்குவது கட்டாயம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதை சட்டமாக்கியும் அத்துடன் தொழில்களை இழந்தவர்களுக்கு மேலும் 12 வாரங்களுக்கு வாராந்தக் கொடுப்பனவாக 500 டாலர்களையும் அதன் பிறகு வாராந்தம் 300 டாலர்களையும் வழங்குவது என்றும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதைப்போன்றே வீட்டு வசதிகள் அற்றவர்களுக்கு உதவிடும் நோக்கத்தோடு நாடு முழுவதும் வீடமைப்புத் திட்டங்களை அமைத்து அதன் மூலம் குறைந்த வருமானம் பெறும் வீடற்றவர்களுக்கு உதவிகளை செய்வது என்றும் இதற்காக 30 மில்லியன் டாலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

## பவள விழா

2021

யாழ்/அனலைதீவு வடலூர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் 75வது ஆண்டு நிறைவு

அன்புடையீர்,

மேற்படி நமது பாடசாலையின் 75வது ஆண்டு நிறைவினையொட்டி பவள விழாவினை இவ்வாண்டு இறுதியில் கொண்டாடுவதுடன் மலர் ஒன்றை உருவாக்கி வரலாற்றுப் பதிவினை ஆவணமாக்கும் பெருமுயற்சியை மதிப்புக்குரிய திரு. கணேஷ்ஐயர் சௌந்தரராசன் ஐயா அவர்களின் அனுசரணையுடன் முன்னெடுத்துள்ளோம். இதற்கான ஒருங்கிணைப்புக் கூட்டம் COVID-19 காரணமாக ஓரிடத்தில் கூட முடியாததால் புலம்பெயர் பழைய மாணவர்களுடன் தொலைபேசி மூலமாக உரையாடி பவள விழா செயற்குழு ஒன்றை அமைத்துள்ளோம். அத்துடன் முக்கியமாக பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்களிடம் இருந்து பவள விழா மலருக்கான ஆக்கங்களையும் மற்றும் இயன்றளவு நிதிப் பங்களிபையும் மிகத் தயவுடன் எதிர்பார்க்கிறோம். கீழ்க்காணும் கனடிய வங்கி இலக்கத்திற்கு உங்களால் இயன்ற நிதிப் பங்களிப்பினையும் அனுப்பி வைத்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செயற்குழு விபரம்:

| | |
|---|---|
| திரு. ஆறுமுகம் இராசேந்திரம் | திரு. தம்பையா திருநீலகண்டன் |
| திரு. அருளானந்தம் தயாபரன் | திரு. சுனேக பழனி |
| திரு. ஏகாம்பரம் தேவராசா | திரு. கதிரன் கேதீஸ்வரன் |
| திரு. வரதன் குணா | திரு. சிவகுரு விநாயகமூர்த்தி |
| திரு. தம்பையா இராஜேஸ்வரன் | திரு. அம்பலவாணன் கைலாசபிள்ளை |
| திரு. சுப்பிரமணியம் சண்முகம் UK | திருமதி. அருளானந்தம் யாழினி UK |
| திரு. பேரம்பலம் கணபதிபிள்ளை | திரு. தனிநாயகம் அருட்பாலா |
| திரு. கந்தசாமி ஜெயசீலன் | திரு. பாலசிங்கம் பாலகுமார் UK |
| திருமதி. வித்தியாதரன் அருளினி | திருமதி. பூலோகஇந்திரன் யோகம் |
| திருமதி. இன்பநாதன் திருக்கலாதேவி | திரு. தில்லையம்பலம் தர்மகுலசிங்கம் SWISS |
| திரு. கணபதிப்பிள்ளை பேரின்பலிங்கம் | திரு. சுந்தன் மகாலிங்கம் GERMANY |



தொடர்புகள்: Email - ANALAIVADALOORTMS@GMAIL.COM

தொலைபேசி: திரு. த. இராஜேஸ்வரன் 416 580 1982

திரு. சி. விநாயகமூர்த்தி 647 401 7164

திரு. அ. கைலாசபிள்ளை 647 296 3529



வங்கி/BANK : BANK OF MONTREAL, A/C No.- 3948496, Transit No.-24922, Institution No.- 001

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்பதை யாமறிவோம். எனவே அனைவரும் ஒன்றிணைந்து நம்மை வளர்த்து ஆளாக்கிய பாடசாலையின் வரலாற்றை நிறைவாக ஆவணமாக்குவோம்.

நன்றியுடன் பவள விழா செயற்குழு



# துறைமுக நகரம்: ஒரே நாடு ஒரே சட்டம்?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

**கொ**ழும்பு துறைமுகத்துக்கு அருகே சீனாவால்கட்டப்பட்டு வரும் நிதிநகரம்தொடர்பில் சர்ச்சைகள் எழுந்திருக்கின்றன.

இப்பட்டினம் மகிந்த ராஜபக்சவின் காலத்தில் கட்டப்பட்ட தொடங்கியது. கொழும்பின் இதயமான ஒரு பகுதியில் கடலை மூடி இந்நகரம் உருவாக்கப்பட்டது. ஏறக்குறைய 216 ஹெக்டேர் நிலப்பரப்பு இவ்வாறு உருவாக்கப்பட்டது. இதில் 116 ஹெக்டேர் நிலப்பரப்பு சீன கொம்பனிக்கு உரித்தாக இருக்கும். சுமார் 90 ஹெக்டேர் நிலப்பரப்பு இலங்கை அரசாங்கத்தின் உரித்தாக இருக்கும். சீன கொம்பனிக்கு உரித்தாக உள்ள நிலப்பரப்பில் சுமார் 20 ஹெக்டேர் நிலப்பரப்பு முழுக்க முழுக்க அந்த கொம்பனிக்கே சொந்தமாக மாற்றப்பட்டுவிடும். அது இலங்கைத்தீவின் சட்டதிட்டங்களுக்கு உட்படாது. சீன கொம்பனியே கடந்த தேர்தல்களின்போது ராஜபக்சக்கள் இது பெருமளவு நிதி உதவிகளை வழங்கியதாக ஒரு குற்றச்சாட்டு உண்டு.

இவ்வாறு கடலை மூடி ஏன் ஒரு நகரத்தை உருவாக்க வேண்டும் என்ற கேள்வி அப்போதே கேட்கப்பட்டது. இலங்கைத்தீவில் குறிப்பாக கொழும்பில் போதிய அளவு நிலம் இருக்கத்தக்கதாக எதற்காக கடலை மூட வேண்டும் என்ற கேள்வி அப்போது எழுந்தது. கேள்விக்கு உரிய பதில் எதுவெனில் கொழும்பின் இதயமான பகுதியில் சீனா ஒரு நகரத்தை கட்டியெழுப்ப விரும்பியது என்பதுதான். கொழும்பின் ஏனைய பகுதிகளில் நிலத்தை வாங்கி அந்த நகரத்தை உருவாக்க அவர்கள் விரும்பவில்லை. கொழும்பின் இதயமான பகுதியில் அதிலும் குறிப்பாக அரசியல் அதிகாரத்தின் மையம் கொழும்பு மேட்டுக்குடியின் மையம் ராஜதந்திரிகளின் மையம் நிதி நடவடிக்கைகளின் மையம் உல்லா சப்பயணிகளின் கவர்ச்சி மையம் என்று கருதத்தக்க ஓரிடத்தில் கடலில் சீனா ஒரு புதிய நகரத்தை கட்டியிருக்கிறது. இதனால் இலங்கைத்தீவின் வரைபடம் மாற்றப்பட்டிருக்கிறது. அதாவது இலங்கைத்தீவின் நிலப்பரப்பு அதிகரித்திருக்கிறது. வரைபடத்தில் இலங்கைத் தீவின்வயிற்றுப் பகுதியில் ஒரு கட்டி வளர்ந்திருப்பதுபோல அது காணப்படுகிறது.

மகிந்த ராஜபக்சவின் காலத்தில் தொடங்கப்பட்ட இத்திட்டம் பின்னர் ஆட்சி மாற்றம் நிகழ்ந்தபோது இடைநிறுத்தப்பட்டது. எனினும் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தோடு சீன மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சிகளின் பின் இந்நகரம் சர்வதேச நிதி நகரம் என்று பெயர் மாற்றப்பட்டு மறுபடியும் தொடர்ந்து கட்டப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அதற்காக உடன்படிக்கை மீள எழுதப்பட்டது.

இந்நகரத்தை நிர்வகிப்பதற்காக அரசாங்கம் அண்மையில் கொழும்பு துறைமுக நகர பொருளாதாரவலைய ஆணைக்குழு சட்டமூலம் ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கிறது. இச்சட்டமூலம் முன் சொன்ன சீன கொம்பனிக்கு அதிகம் அனுகூலங்களை வழங்குகிறது. அது குறிப்பிட்ட துறைமுக நகரத்தை ஒரு சீன மாநிலமாக மாற்றுகிறது என்று ஜே.வி.பி. குற்றம்சாட்டுகிறது.

இலங்கைத்தீவில் இதுபோன்ற முதலீடுகளுக்கு முதலீட்டு சபை சட்டம் மூலோபாய அபிவிருத்தி சட்டம் என்ற இரண்டு சட்டங்கள் உண்டு. இச்சட்டங்கள் மூலமாகவும் வரிச் சலுகைகளை வழங்க முடியும். ராஜபக்சக்கள் சீன முதலீடான சங்கரில்லா ஹோட்டலுக்கு இவ்வாறு இருபத்தைந்து வருட வரிச் சலுகைகளை வழங்கியிருக்கிறார்கள். ரணில் விக்ரமசிங்கஹும் பாந்தோட்டைதுறை முகத்தில் சீன கொம்பனிக்கு வரிச் சலுகைகளை வழங்கியிருந்தார். இவ்வாறு இரண்டு சட்டங்கள் இருக்கத்தக்கதாக இப்பொழுது ஒரு புதிய சட்டமூலத்தை ஏன் அரசாங்கம் சமர்ப்பித்திருக்கிறது?

அதன்மூலம் துறைமுக நகரத்தை நாட்டின் சட்டங்களுக்கு கட்டுப்படாத ஒன்றாகவும் தனி விசேட அந்தஸ்தைப் பெற்ற ஒரு சுயாதீன நகரமாகவும் ராஜபக்சக்கள் கட்டியெழுப்ப முற்படுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. இவ்வாறு எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை பின்வருமாறு தொகுத்துப்பார்க்கலாம்.

முதலாவது - துறைமுக நகரம் எந்த ஒரு உள்ளூராட்சிமன்றத்தினதும் ஆளுகைக்குள் வராத ஒரு விசேஷ கட்டமைப்பாக இயங்கும். உள்ளூராட்சிமன்ற நிர்வாகங்களை அங்கு வாழும் மக்கள் வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்கிறார்கள். உள்ளூராட்சிமன்றங்கள் மக்கள் பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்படுகின்றன. ஆனால் துறைமுகநகரத்தை ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஒரு விசேஷ ஆணைக்குழுவே நிர்வகிக்கும்.

இரண்டாவது - இந்த ஆணைக்குழுவின் பிரதிநிதிகளுக்கு எதிராக இலங்கை தீவில் எந்த ஒரு நீதிமன்றத்திலும் வழக்குத் தொடர முடியாத விடுபாட்டுரிமை உண்டு.

மூன்றாவது - இந்த ஆணைக்குழுவிற்கு விசேடநிதிசார் அதிகாரங்கள் உண்டு. இந்த ஆணைக்குழுவுக்கு தனி ஒரு நிதியம் உண்டு. அரசவருமானத்தின் திரட்டப்பட்ட நிதியில் இருந்து பணத்தை பெற்றுக்கொள்ள நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் தேவை. ஆனால் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவானது நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் தேவைப்படாத தனி ஒரு நிதியம்ஒன்றைப் பேண முடியும்.

நாலாவது - துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவுக்கு பல்வேறு வரிச்சலுகைகளை வழங்கும் அதிகாரம் உண்டு. பொதுவாக நாடாளுமன்றத்தால் மாத்திரமே வரிச்சலுகை வழங்கப்படலாம். இங்கே இந்த ஆணைக்குழுவுக்கு வரிச்சலுகை வழங்கும் அதிகாரம் தரப்பட்டிருக்கிறது.

ஐந்தாவதாக - அரசாங்கத்துக்கு கிடைக்கும் பணம் கணக்காய்வாளர் தலைமை நாயகத்தின் மேற்பார்வைக்கு கட்டுப்படும். ஆனால் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் நிதி நடவடிக்கைகள் தனியார் நிறுவனம் ஒன்றின் மூலமாகவே அவை கணக்காய்வு செய்யப்படும்.

ஆறாவது - அரச நிறுவனங்கள் நாடாளுமன்றத்தின் கோபா (Copa) மற்றும் கோப் (Cope) ஆகிய குழுக்களுக்கு முன் பதில் கூறுமாறு அழைக்கப்படலாம் ஆனால் இது துறைமுக நகர பொருளாதார வலைய ஆணைக்குழுவுக்கு பொருந்தாது.

ஏழாவது - துறைமுக நகரத்தில் வெளிநாட்டவர்கள்தான் முதலீடு செய்யலாம். இலங்கையர்கள் முதலீடு செய்வது என்றால் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கூடாகத்தான் முதலீடு செய்யலாம்.

எட்டாவது - துறைமுக நகரத்தில் தொழில் செய்பவர்களுக்கு ஊழியம் சீன நாணயமான யுவான்மூலமே வழங்கப்படும்.

ஒன்பதாவது - இங்கு சேவையாற்றுபவர்களின் வருமானம் வருமான வரியிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறது.

பத்தாவது - இலங்கை பிரஜைகள் கொழும்புத்துறை முகநகரத்தின் சேவைகளை பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் எனினும் அங்கே கொள்வனவு செய்யும் பொருட்களை நகரத்துக்கு வெளியே கொண்டுவரும் போது அவற்றுக்கு வரி செலுத்த வேண்டும்.

பதினொன்றாவது - துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தில் ஏற்படும் பிணக்குகளை சர்வதேச விளக்கத்திற்கும் அமைப்பு ஒன்றின் மூலமாக வேதீர்த்துக் கொள்ளலாம்.

இவையாவும் துறைமுகநகரத்துக்கான புதிய சட்டமூலத்தை குறித்து எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் ஆகும். இக்குற்றச்சாட்டுகளின் படிதுறைமுக நகரம் ஆனது இலங்கை தீவில் தற்போது நடைமுறையில் உள்ள 21 சட்டங்களிலிருந்து விடுபாட்டுரிமையை கொண்டிருக்கிறது.

இது துறைமுகநகரத்தை இலங்கைத்தீவில் தனி அந்தஸ்துடைய இலங்கை தீவின் பெரும்பாலான சட்டங்களுக்கு கட்டுப்படாத ஒரு தனி நிர்வாக பிரதேசமாககாட்டுகிறது. ராஜபக்சக்கள் பெருமையோடு கூறிக்கொள்கிறார்கள் ஒரே நாடு ஒரே தேசம் ஒரே சட்டம் என்று. ஆனால் சீன துறைமுகநகரமானது அவ்வாறு நாட்டில் ஒரே சட்டம் இல்லை என்பதை தெளிவாக காட்டுகிறது. அதுதான் உண்மை.

தமிழ் மக்களை நசுக்குவதற்காக எந்தப்பிசாசோடும் கூட்டுச்சேர தயார் என்று முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா கூறினார். இவ்வாறு பிசாசுகளை கூட்டுச் சேர்ந்து தமிழ் மக்களின் போராட்டத்தை நசுக்கிய இலங்கை அரசாங்கம் இப்பொழுது அந்த பிசாசின் கடன் பொறிக்குள் இருந்து விடுபட முடியாத ஒரு நிலை தோன்றியிருக்கிறது. இலங்கையில் இப்பொழுது கிட்டத்தட்ட ஆறு லட்சம் சீனர்கள் இருப்பதாக ஒரு உதியோகப்பற்றற்ற கணக்கு உண்டு.

இம்மாதம் இறுதி அளவில் சீனாவின் பாதுகாப்பு மந்திரி இலங்கைக்கு வருகிறார் ஏறக்குறைய அதே காலப்பகுதியில் ஜனாதிபதி கோட்டபாய இந்தியாவுக்குச் செல்கிறார். ஒரே சமயத்தில் அவர்களால் சீனாவையும் இந்தியாவையும் கையாளக் கூடியதாக இருக்கிறது இந்தியாவை சமாளிப்பதன் மூலம் மேற்குநாடுகளையும் ஜெனிவாவை சமாளிக்கலாம் என்றும் அவர்கள் நம்புகிறார்கள். சீனாவின் செல்லப்பிள்ளையாக இருப்பதன் மூலம் பொருளாதார நெருக்கடிகளும் உட்பட எல்லா பிரச்சினைகளில் இருந்தும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்றும் அவர்கள் நம்புகிறார்கள். ஆனால் சீனாவை நோக்கி அதிகமாகச் சாய்ந்து கொண்டு இலங்கைத் தீவு சுயாதீனமாக இறைமையோடு இருக்க முடியாது என்பதைத்தான் கடந்த 12 ஆண்டுகள் நிரூபித்திருக்கின்றன.

மெய்யான பொருளில் கூறின் இலங்கைத் தீவு இப்பொழுது இறைமையுடைய நாடு அல்ல. அது பேரரசுகளால் பங்கிடப்படும் ஓர் அப்பம். சீனமயமாதலின் விளைவாக இச்சிறிய தீவை நோக்கி இந்தியாவும் மேற்கு நாடுகளும் அதிகம் கவனத்தை குவிக்கும். அவர்கள் அதற்கு எடுத்துக் கையாளும் ஆயுதம் தமிழ்மக்களின் பிரச்சினையாகும். தமிழ்மக்களின் விவகாரத்தை அல்லது தீர்க்கப்படாத இனப்பிரச்சினையை ஒரு கருவியாகக் கையாண்டு வெளிச்சக்திகள் இலங்கைக்குள் நுழைகின்றன. சீனாவும் அப்படித்தான் நுழைந்தது. அழகிய இச்சிறிய தீவை தமிழ் மக்களோடு சேர்ந்து பகிரத் தயாரற்ற சிங்கள ஆட்சியாளர்கள் அதனை இறுதியிலும் இறுதியாக சீனர்களும் உட்பட வெளிநாட்டவர்களிடம் இழந்து விட்டார்கள் என்பதே சீனப்பட்டினம் உணர்த்தும் உண்மையாகும்.

### வீணாவின் கவிக்கணை

பிறப்பும் இறப்பும்
இறைவன் வகுத்த வழி,
எவருக்கு?என்று? எப்படி?
விதி முடியும் என்று
எவரும் அறிவதில்லை,
வாழ்க்கை என்னும் பயணத்தில்
நம்முடன் பயணிப்போர் எவரும்
கடைசிவரையில் வரப்போவதுமில்லை,
உன் வாழ்க்கை உனக்கானது,
அதை வாழ கற்றுக்கொள்,
அடுத்தவர் உணர்வுகளுக்கு
மதிப்பு கொடு,
அதற்காக உன் உணர்வுகளை
சாகடித்துவிடாதே,
எல்லோரிடத்தும் பாசமகா இரு,
அதற்காக, பயித்தியமாகி விடாதே,
அன்பு அதிகமானாலும் ஆபத்தே,
அளவோடு கொடுக்க பழகிக்கொள்,
எவரும் இல்லையென்று
ஒரு போதும் எண்ணாதே,
எவருமே எவருக்குமே நிரந்தரமில்லை,
இருக்கும் வரை மகிழ்ச்சியாக இரு,
நீ இறந்த பின்னும் உன்னை
மற்றவர் நினைக்கும் வகை வாழ்ந்துடு,
இது உன் வாழ்க்கை! உன் விருப்பம்!
உனக்கானது மட்டுமே! இனிதே வாழ்ந்துடு.

# தமிழீழத்தை எதிர்த்தவர்கள் இப்போது சீன ஈழத்தைத் தோற்றுவிக்க முயற்சிக்கிறார்கள் – முன்னாள் அமைச்சர் இராஜித சேனரத்தின!

**கனடா நக்கீரன்**

பூனைக் குட்டியை பையில் இருந்து வெளியில் விட்டு விட்டார்கள் என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. மறைத்து வைத்த ஒரு பொருள் வெளியே வந்து விட்டது என்பது இதன் பொருளாகும்.

புதிதாக உருவாக்கப்பட்ட கொழும்பு துறைமுக நகரை நிருவாகிப்பதற்கு கோட்டாபய இராசபக்ச அரசு ஒரு சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. அதனை எதிர்த்தும் ஆதரித்தும் நாட்டின் உயர் நீதிமன்றத்தில் 13 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இதில் ஒரு வழக்கு சனாதிபதியின் செயலாளர் சார்பாக உயர் நீதிமன்றத்தில் வைக்கப்பட்டது. அந்த வழக்கில் செயலாளர் சார்பாக வாதாட பிரபல சனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா அமர்த்தப்பட்டுள்ளார். இவர் அரசுக்கு மிக நெருக்கமானவர். ஒரு புதிய அரசியல் அமைப்பை எழுத நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் தலைவரும் இவரே.

இந்த வழக்கு கடந்த புதன்கிழமை (ஏப்ரில் 21) உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அப்போது றொமேஷ் டி சில்வா தனது வாதத்தை முன்வைத்தார்.

"இலங்கை தலைமை நீதிபதி ஒரு வெளிநாட்டவர் ஆக இருக்கலாம். அதற்கான தடை அரசியலமைப்பில் இல்லை" என்றார். இதன் பொருள்




சனாதிபதி நந்தசேனா கோட்டாபய கொழும்புத் துறைமு நகரை சீனா நிருவகிப்பதற்கு அனுமதி வழங்கலாம். அதற்கு அரசியலமைப்பில் தடை இல்லை என்பதாகும்.

பிரதம நீதியரசர் தலைமையிலான உச்சநீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் கொண்ட நடுவராயம் முன் மூன்று மணி நேரம் தனது வாதத்தை சமர்ப்பித்த றோமேஷ் டி சில்வா, தலைமை நீதிபதியும் மற்ற நீதிபதிகளும் கூட இலங்கை அல்லாதவர்களாக இருக்கலாம் என்று கூறினார். இதற்கு விதிவிலக்கு நகர மேம்பாட்டு ஆணையம் **(Urban Development Authority (UDA)** தொடர்பான சட்டம். இந்தச் சட்டத்தில் வெளிப்படையாக ஒரு தடை இருப்பதால் நகர மேம்பாட்டு ஆணையம் தவிர ஏனைய சுயாதீன (மாநில) நிறுவனங்களுக்கும் வெளிநாட்டு குடிமக்களை நியமிக்க முடியும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் 30-1 மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் மற்றும் மானிடத்துக்கு எதிரான குற்றங்களை விசாரிக்க உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள், வழக்குத் தொடுநர்கள், விசாரணையாளர்கள் கொண்ட ஒரு கலப்பு *(hybrid)* நீதிமன்றப் பொறிமுறையை சிறிலங்கா அரசு உருவாக்க வேண்டும் எனக் கேட்டிருந்தது.

இந்த ஏற்பாட்டுக்கு சனாதிபதி கோட்டாபய இராசபக்சவின் அரசு மிகக் கடுமையாக எதிர்ப்பைத் தெரிவித்திருந்தது. வெளிநாட்டு நீதிபதிகள், பாதுகாப்பு வழக்கறிஞர்கள், புலனாய்வாளர்கள் மற்றும் வழக்குத் தொடுநர்கள் போன்றோரை நியமிப்பது நாட்டின் இறையாண்மையையும் அரசியலமைப்பையும் மீறுவதாகும் என்ற வாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் முன்வைக்கப்பட்டது.

சிறிலங்கா பொதுசன பெரமுனா மற்றும் 'கூட்டு எதிர்க்கட்சி' ஆகியன வெளிநாட்டு நீதிபதிகளின் ஈடுபாட்டிற்கு எதிராக பல ஆண்டுகளாக போராட்டங்கள் நடத்தின. சிறிசேனா - இரணில் அரசு நாட்டின் இறைமையை மீட்டெடுப்பதற்காக உயிரைத் தியாகம் செய்த இராணுவத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டது என்று குற்றம் சாட்டின.

யூன் 2017 இல் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவரும் தற்போதைய வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்திருந்தார். அது தொடர்பாகப் பேசிய அமைச்சர், "ஐக்கிய நாடுகள் சபை வெளிநாட்டு நீதிபதிகள், பாதுகாப்பு வழக்கறிஞர்கள், வழக்குரைஞர்கள் மற்றும் புலனாய்வாளர்கள் உட்பட ஒரு "கலப்பு நீதிமன்றத்தை" நிறுவத் தொடர்ந்து பரிந்துரைத்து வருவதாகக் குற்றம் சாட்டினார். அத்தகைய நீதிமன்றம் இந்த நாட்டின் அரசியலமைப்பை மீறுவதாகும்" என்றார்.

ஆனால் கடந்த புதன்கிழமை (ஏப்ரில் 21), சனாதிபதியின் செயலாளருக்கான வழக்கறிஞர் றொமேஷ் டி சில்வா அவர்களால் இலங்கையின் உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வாதங்கள் - சிறிலங்கா பொதுசன கட்சியினர் இதுகாறும் முன்வைத்த வாதங்கள் - அதாவது வெளிநாட்டு நீதிபதிகளை நியமிப்பது அரசியல் அமைப்புக்கு எதிரானது என்பது பொய்யானது, சொத்தையானது என்பது இப்போது துலாம்பரமாக எண்பிக்கப்பட்டுள்ளது. பொதுசன பெரசன கட்சியினர் மேற்கொண்ட பரப்புரை அரசியல் உள்நோக்கம் கொண்டது என்பது தெளிவாகிறது.

ஒருவர் சாப்பிட வேண்டும் என்று முடிவு எடுத்து விட்டால் கபரகோயா, தலகோயாவாக (உடும்பாக) மாறிவிடும் என்பதற்கு அரசின் இரட்டை நிலைப்பாடு சான்றாகும்.



கொழும்புத் துறைமுக நகரம் என்பது காலிமுகத்துக்கு அருகிலுள்ள கடலுக்கு அடியில் இருந்து 65 மில்லியன் கன மீட்டர் மணலை அள்ளி நிரப்பிய நிலத்தில் நிருமாணிக்கப்பட்ட நகரம் ஆகும். கடலை நிரப்பி அதில் குடியிருப்புகள், அலுவலகங்கள், தொடர்மாடிக் கட்டிடங்கள், மருத்துவமனைகள் கட்டப்பட்டுள்ளன.

கொழும்பு துறைமுக நகர் திட்டத்தை இலங்கை அரசாங்கமும் சீனாவின் **CHEC (China's CHEC Port City Colombo (Pvt) Ltd )** நிறுவனமும் இணைந்து பட்டை மற்றும் சாலை முன்முயற்சியின் கீழ் உருவாக்கியது ஆகும்.

இந்தத் திட்டம் 2014 இல் மகிந்த இராபக்ச சனாதிபதியாக இருந்த காலத்தில் தொடக்கப்பட்டதாகும். இதற்கான செலவு அ.டொலர் 1.4 பில்லியன் ஆகும். நகர நிருமாணத்தை என்ற நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் 269 ஹெக்டர் (665 ஏக்கர்) நிலம் மீட்கப்பட்டது. இதில் சீனாவுக்கு 110 ஹெக்டர் (272 ஏக்கர்) நிலம் 99 ஆண்டுகாலக் குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இராசபக்ச அரசு சீனாவுக்கு 50 ஹெக்டர் (24 ஏக்கர்) நிலத்தை அறுதியாக **(Freehold)** கொடுக்கப்பட்டிருந்தது. சிறிசேனா - ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் ஆட்சேபனையை அடுத்து அது 99 ஆண்டு குத்தகை நிலமாக மாற்றப்பட்டது.

மேலும் இத் திட்டமானது சீனாவின் பட்டை மற்றும் சாலை **(Belt and Road)** முன்நகர்வின் கீழ் தொடக்கப்பட்டதாகும். சீனா ஏனைய 56 நாடுகளுடன் இணைந்து இதனுடன் தொடர்புடைய திட்டங்களுக்கு கடன் வழங்குவதற்காகவே 'ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியை' 2014 இல் தொடங்கியது. இதேயாண்டு சீனா 40 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடாகக் கொண்ட 'பட்டுச்சாலை நிதியை' உருவாக்குவதாக அறிவித்தது.

இவ்வளர்ச்சி நிதியானது நேரடியாக 'ஒரு பட்டை ஒரு பாதைத்' திட்டத்துடன் தொடர்பு படாவண்ணம் அதேவேளை இத்திட்டத்துடன் தொடர்புடைய நாடுகளுக்கு பயனளிக்கக் கூடியவகையில் அமையும் என சீனா தெரிவித்தது.

பட்டை என்பது "பட்டுச் சாலை பொருளாதார பட்டை" என்பதன் சுருக்கமாகும். இது மேற்கு பிராந்தியங்களின் புகழ்பெற்ற வரலாற்று வாணிக பாதைகளின் நிலப்பரப்புள்ள மத்திய ஆசியா வழியாக சாலை மற்றும் தொடர்வண்டி போக்குவரத்திற்கான உத்தேச நிலப்பரப்பு வழிகளைக் குறிக்கிறது. சாலை என்பது கிழக்கு ஆசியா வழியாக தெற்காசியா, மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்கா வரையிலான இந்தோபசிபிக் கடல் வழிகளைக் குறிக்கும். துறைமுகங்கள், வானாளாவிய கட்டிடங்கள், தொடர்வண்டிப் இரயில் பாதைகள், சாலைகள், விமான நிலையங்கள், அணைகள் மற்றும் தொடர்வண்டிப் பாதை சுரங்கங்கள் மற்றும் முன்முயற்சி உள்கட்டமைப்பு முதலீடுகளைக் குறிக்கிறது.

சீனாவின் பட்டை மற்றும் சாலை முயற்சியால் ஈர்க்கப்பட்ட நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

சீனா **Communications Construction Co** நிறுவனத்தால் கட்டப்பட்டு வரும் கொழும்பு துறைமுக நகரம், சிங்கப்பூருக்கும் துபாய்க்கும் இடையில் ஒரு புதிய மையமாக அமைக்கப்பட்ட ஒரு நிதி மாவட்டத்தை கட்டும் திட்டத்தையும் கொண்டுள்ளது.

கொழும்பு துறைமுக நகரம் ஒரு சீன காலனியாக இருப்பது குறித்த கவலைகள் தவறாக உள்ளன. மேலும் இந்த திட்டம் கடன் அல்லாத வரத்துக்கான ஆதாரமாக இருக்கும். இது முதலீட்டாளர்கள் எதிர்கொள்ளும் சிவப்பு நாடாவைக் குறைப்பதன் மூலம் வளர்ச்சியை அதிகரிக்க உதவும் என்று மாநில பண மற்றும் மூலதன சந்தைகளின் அமைச்சர் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுக நகரம் பல சட்டங்கள் மற்றும் முகவர்களிடமிருந்து வணிகத்தை எளிதாக்குவதற்கு விலக்கு அளித்துள்ளது எனவும் கப்ரால் கூறுகினார். எல்லாம் சரி ஆண்டொன்றுக்கு அ.டொலர் 7 பில்லியன் வருவாய் வரும் என மதிப்பிடப்பட்டுள்ள இந்தக் கொழும்பு துறைமுக நகர்த் திட்டத்தை ஆளும் பொதுசன கட்சியில் உறுப்பு வகிக்கும் 11 சிறு கட்சிகள், எதிர்க்கட்சிகள் மற்றும் சனாதிபதி கோட்டாபய அவர்களை பதவிக்குக் கொண்டு வந்த பவுத்த குருமார்கள் ஏன் கடுமையாக எதிர்க்கிறார்கள்? கொழும்பு துறைமுக நகர் ஆணையத்துக்கு-

(1) ஐந்து அல்லது ஏழு உறுப்பினர்களை சனாதிபதி நியமிக்கலாம். அவர்கள் இலங்கையர் ஆக இருக்கவேண்டியதில்லை. எல்லோரும் வெளிநாட்டுக்காரர் ஆகவும் இருக்க முடியும்.

(2) சிறப்பு நிதி அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. மற்றும் நீதித்துறையில் இருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா சீனாவின் இன்னொரு கொலனி நாடாகப் போகிறது என்ற அச்சம்.

(3) சட்டமியற்றும் அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

(4) வெளிநாட்டவரும் நியமிக்கப்படலாம். மேலும்,

(5) வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு சிறிலங்காவின் சட்டங்கள் பொருந்தாது.

(6) ஊழியர்களது ஊதியம் வெளிநாட்டு நாணயத்தில் கொடுக்கப்படும்.

(7) வெளிநாட்டவர் நீதிபதிகள் ஆக நியமிக்கப்படலாம்.

(8) ஒரு சுயாதீன அதிகாரங்களைக் கொண்ட தனிநாடாக மாறும் அபாயம் இருக்கிறது.

(9) வெளிநாட்டவர் மட்டுமே முதலீடு செய்யலாம். உள்ளுர்வாசிகள் முதலீடு செய்ய முடியாது. அந்நிய செலாவணி இருந்தாலும் முதலீடு செய்ய முடியாது. முதலீடு செய்பவர்களுக்கு 30 ஆண்டுகள் வரி விலக்கு உண்டு.

(10) வெளிநாட்டு வங்கிகளில் பணம் வைத்திருக்கும் இலங்கையர் முதலீடு செய்யலாம். இதனால் கருப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக மாற்ற முடியும்.



இந்த சட்ட வரைவைப் பற்றிக் கருத்துத் தெரிவித்த முன்னாள் நல்வாழ்வு அமைச்சர் இராஜித சேனரத்தின தமிழீழத்தை எதிர்த்தவர்கள் இப்போது சீன ஈழத்தைத் தோற்றுவிக்க முயற்சிக்கிறார்கள் எனக் குற்றம் சாட்டியுள்ளார்கள். அத்துடன், இவ்வாறான செயற்பாடுகளால் நாட்டின் இறையாண்மை மற்றும் தனித்துவமே பாதிக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சரி. சனாதிபதி கோட்டாபய இராசபக்ச அவர்களால் நியமிக்கப்பட்ட சிறிலங்காவின் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் என்ன தீர்ப்பு வழங்கப் போகிறார்கள்? பொறுத்திருந்து பார்ப்போம்!


TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

| | |
|---|---|
| எல்லாவிதமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி, | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி, | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடாய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்
Tel: (416) 754-4024
Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# ரசிகர்கள் சிரிப்பதைப் பார்த்து மகிழ்ந்த நடிகர் விவேக், அவர்கள் அழுவதைப் பார்க்காமல் கண்களை மூடிக்கொண்டார்



தனது ரசிகர்கள் தனது நகைச்சுவையை ரசித்துச் சிரிப்பதைப் பார்த்து மகிழ்ந்து உற்சாகத்துடன் வாழ்ந்த நடிகர் விவேக் அவர்கள் அதே ரசிகர்கள் தற்போது அழுவதைப் பார்க்க விரும்பாமல் தனது கண்களை மூடிக்கொண்டாரோ?.

ஒரு நாடகக் கலைஞனாகத் தன்னுடைய வாழ்க்கையைத் தொடங்கி, சுமார் 25ஆண்டுகளுக்கும் மேல் சிறந்த நகைச்சுவை கலைஞனாக தன்னுடைய ஆளுமையைக் கோலோச்சி வந்த விவேக், சொந்த வாழ்க்கையிலும் சமூக நலனைக் குறிக்கோளாகக் கொண்டு பல நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வந்தார்.

மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் மிகப் பெரிய அபிமானியான விவேக், கலாம் பெயரில் "க்ரீன் கலாம்" என்கின்ற மரம் நடும் முன்னெடுப்பை, கலாமின் வழிகாட்டுதலின் கீழ் தொடங்கினார். இதுவரை பல இலட்சக்கணக்கான மரக்கன்றுகளையும் நட்டுள்ளார். பிளாஸ்டிக் ஒழிப்புக்கு எதிரான தமிழக அரசின் பிரசாரத்துக்குத் தூதராகவும் நியமிக்கப்பட்டிருந்தார் விவேக்.

இவை தவிர மக்களுக்கு விழிப்பு உணர்வு தரும் அரசின் பல விளம்பரங்களில் விவேக் இடம்பெற்றுள்ளார். சில நாட்களுக்கு முன்பு வரை கூட கொரோனா தடுப்பூசியை அனைவரும் போட்டுக் கொள்ள வேண்டும் என்று ஊடகங்களில் பேசி தனது சமூக வலைதளப் பக்கத்திலும் விவேக் பகிர்ந்திருந்தார்.

அவரது சமூக ஊடகப் பகிர்வுகள் பெரும்பாலும் சக நடிகர்களைப் பாராட்டியோ அல்லது எதாவது விழிப்புணர்வோ செய்தியாகவோ, விவேகானந்தர், அப்துல்கலாம் உள்ளிட்டவர்களின் கூற்றுகளாகவோதான் இருக்கும். திரைத்துறையில் இருக்கும் கலைஞர்களைப் பாராட்ட விவேக் என்றுமே தயங்கியதில்லை. இசையிலும் பெரிய ஆர்வம் கொண்ட விவேக் பலருக்குப் பாடல் பாடி, பியானோ வாசித்து அதன் மூலம் வாழ்த்துகள் தெரிவித்துள்ளார்.

திரைப்படத்துறையில் இவர் ஆற்றிய பங்களிப்பிற்காக, 2006ஆம் ஆண்டு தமிழக அரசின் கலைவாணர் விருதை வென்றார். 2009ஆம் ஆண்டு நாட்டின் நான்காவது உயர்ந்த விருதுகளில் ஒன்றான "பத்மஸ்ரீ" விருதை விவேக்குக்கு வழங்கி கௌரவித்தது இந்திய அரசாங்கம்.

"உன்னருகே நானிருந்தால்", "ரன்", "பார்த்திபன் கனவு", "அந்நியன்", "சிவாஜி" போன்ற திரைப் படங்களுக்காக தமிழ்நாடு அரசின் சிறந்த நகைச்சுவை நடிகருக்கான விருது வழங்கப்பட்டது. 2002இல் "ரன்", 2003இல் "சாமி", 2004-இல் "பேரழகன்" உள்ளிட்ட திரைப்படங்களுக்காகச் சிறந்த நகைச்சுவை நடிகருக்கான "ஃபிலிம்ஃபேர்" விருதும் பெற்றிருக்கிறார்.

இவரது மனைவி பெயர் அருள்செல்வி. இவருக்கு அம்ரிதாநந்தினி, தேஜஸ்வினி என்கிற இரு மகள்கள். பிரசன்ன குமார் என்கிற ஒரு மகன். பிரசன்ன குமார் 2015ஆம் ஆண்டு காலமானார்.

அனைத்து முன்னணி நடிகர்களுடனும் புதிய நடிகர்களுடனும் நடித்து விட்ட விவேக்கிற்கு திரைத்துறைக்கு வந்த நாளிலிருந்தே கமலுடன் சேர்ந்து நடிக்க வேண்டும் எனும் ஆசை இருந்து வந்தது. ஷங்கர் இயக்கத்தில் கமலின் நடிப்பில் "இந்தியன் 2" தொடங்கப்பட்டது. "என்னுடைய நீண்ட காலக் கனவு உலகநாயகன் கமலுடன் நடிக்க வேண்டும் என்பது. அந்தக் கனவு "இந்தியன் 2" வின் மூலமாக நனவாகப் போகிறது. அவருடன் இந்தப் படத்தில் நானும் நடிக்கிறேன்" என்று தன் நீண்ட கால கனவு குறித்து தன் வலைதளப் பக்கங்களில் தெரிவித்திருந்தார் விவேக்.

16ம் திகதி திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டு, மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட விவேக் 17ம் திகதி அதிகாலை காலமானார். கலாமின் கனவை நிறைவேற்றிக் கொண்டிருந்த கமலுடன் நடிக்க வேண்டும் எனும் விவேக்கின் இந்தக் கனவு முழுமை அடையாத நிலையிலேயே முற்றுப்பெற்றதுதான் பெருஞ்சோகம்.

நடிகர் விவேக் நடித்த திரைப்படங்களில் போக்குவரத்து நெரிசல், கழிவுநீர் தேக்கம், குடிநீர் தட்டுப்பாடு, வீதி பராமரிப்பு, இலஞ்சம், ஊழல், மக்கள் தொகை பெருக்கம், மூடநம்பிக்கை போன்றவற்றை கருப்பொருளாகக் கொண்டு வெளிப்படுத்திய நகைச்சுவை காட்சிகள் மக்களிடம் பெரிய அளவில் போய் சேர்ந்தன. சமூகப் பொறுப்போடு கூடிய இவரது நகைச்சுவை உணர்வை மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் பலரும் பாராட்டினர்.

ரஜினி, அஜித், விஜய், விக்ரம், தனுஷ் என முன்னணி கதாநாயகர்களின் படங்களிலும் நடித்துள்ள விவேக், "நான்தான் பாலா", "பாலக்காட்டு மாதவன்", "வெள்ளைப் பூக்கள்" போன்ற படங்களில் கதாநாயகனாகவும் நடித்தார். டெங்கு, கொரோனா போன்ற நோய்கள் பரவிய சூழலில் அரசு சார்பில் தயாரிக்கப்பட்ட விளம்பரப் படங்களில் நடித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினார். முன்னாள் முதல்வர்கள் கருணாநிதி, ஜெயலலிதா இருவரிடமும் நல்ல நட்போடு இருந்தவர்களில் விவேக்கும் ஒருவர்.

"நாட்டில் வரட்சி ஏற்பட நாம்தான் காரணம். வரட்சியைப் போக்கும்வகையில் சுமார் ஒரு கோடி மரக்கன்றுகளை நடுவேன்" என்று கூறிஅப்துல் கலாம் பெயரில் "பசுமைகலாம்" (கிரீன் கலாம்) திட்டத்தைசெயல்படுத்தி வந்தார்.

இத்திட்டத்தின் கீழ் 35 இலட்சத்துக்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நட்டுள்ளார். கல்லூரி மாணவ, மாணவிகள், இளைஞர்களிடம் விழிப்புணர்வையும் ஏற்படுத்தினார்.

திரைப்படங்களில் விவேக் பயன்படுத்திய "இன்னைக்கு செத்தா நாளைக்கு பாலு", "எப்படி இருந்த நான் இப்படி ஆயிட்டேன்", "கோபால், கோபால்", "எனக்கு எஸ்.பி.யை தெரியும், ஆனா அவருக்கு என்ன தெரியாது" என்பது போன்ற வசனங்கள் எப்போதும் ரசிகர்களின் மனதை விட்டு நீங்காது.

தினசரி நாளிதழ்கள் அனைத்தையும் படிக்கும் பழக்கம் கொண்ட விவேக் முக்கிய நிகழ்வுகளை சேகரித்து, தான் நடிக்கும் காட்சிகளில் நகைச்சுவை கலந்து வெளிப்படுத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். நகைச்சுவையில் கருத்துகளை வழங்குவதில் மட்டுமே குறிக்கோளாக இல்லாமல், வாழ்க்கையிலும் ஒருசில சமூகநலக் குறிக்கோள்களை கடைப்பிடித்து இறுதி வரை செயல்படுத்தி வந்தார்.

முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் சிறந்த மாணவராக, நண்பராக நடிகர் விவேக் திகழ்ந்ததாக கலாமின் உதவியாளராக பணியாற்றிய பொன்ராஜ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அப்துல் கலாமின் உதவியாளராக பணியாற்றியவரும், மக்கள் நீதி மய்யம் கட்சியின் துணைத் தலைவருமான பொன்ராஜ் கூறியதாவது: "அப்துல் கலாமுக்கு திரைப்படம் பார்க்கும் பழக்கம் கிடையாது. விவேக் தனது திரைப்படங்களில் கலாமை குறிப்பிட்டு பேசுவதை நான் அவரிடம் கூறுவேன். "அப்படியா!" என்று கேட்டு சிரிப்பார். அப்படிதான் விவேக்கை கலாமுக்கு தெரியும்.

டெல்லியில் பத்மஸ்ரீ விருது வாங்கியதும் கலாமிடம் ஆசி வாங்க விவேக் வந்தார். அப்போதுதான் இருவருக்கும் முதல் அறிமுகம். இதைத் தொடர்ந்து கலாமின் சிறந்த மாணவராக, நண்பராக விவேக் திகழ்ந்தார். "மரங்களை வளர்த்து சுற்றுச்சூழலை காக்க வேண்டும் என்ற கருத்தை திரைப்படங்கள் வழியாக கூறுங்களேன்" என்று விவேக்கிடம் கலாம் கூறினார். இதனால் மரங்களை வளர்க்க வேண்டும் என்ற கலாமின் இலட்சியத்தை விவேக் தனது கனவாகவே எடுத்து செய்தார்.

அப்போது பிறந்ததுதான் "பசுமைக் கலாம்". அவர் 10 இலட்சம் மரக்கன்றுகளை நட்டதும் கடலூரில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் விவேக்கை பாராட்டி சான்றிதழ் வழங்கினார் கலாம். தொடர்ந்து அப்பணியில் விவேக் சிறப்பாக ஈடுபட்டு வந்தார்". இவ்வாறு அவர் கூறினார்.

இதுஒருபுறமிருக்க தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சி.விஜயபாஸ்கர் செய்தியாளர்களிடம் கூறும் போது, "நடிகர் விவேக் தடுப்பூசி போட்டுக் கொண்டதையும், அவர் உயிரிழந்ததையும் தொடர்புபடுத்த வேண்டாம் என்பதே எனது கருத்து. இதுதொடர்பாக அரசு சுகாதாரத் துறைச் செயலாளர் மற்றும் மருத்துவர்கள் விளக்கம் அளித்துள்ளனர். நாளொன்றுக்கு 2 இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. கொரோனா தடுப்பூசியால் எந்தஒரு பக்கவிளைவும் இல்லை என ஏற்கெனவே தெளிவுபடுத்தப் பட்டுள்ளது.



உலகளவில் கொரோனா வேகம் அதிகரித்து வரும் நிலையில் மக்களுக்கு நம்பிக்கைதான் அவசியம். எனவே, தடுப்பூசியால் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படுமோ என்ற கேள்வியையே தவிர்ப்பது நல்லது. அரசின் மீதும், தடுப்பூசி மீதும், மருத்துவர்கள் மீதும் நம்பிக்கைதான் அவசியம்.

தடுப்பூசி எடுத்துக் கொண்ட ஒரு சிலருக்கு கொரோனா தொற்றுஏற்பட்டாலும் உயிரிழப்புகளை தடுக்க முடியும். களத்தில் பணிபுரிய நாங்கள் தயாராக உள்ளோம். தமிழகத்துக்கு தடுப்பு மருந்தை தடையில்லாமல் வழங்க வேண்டும் என மத்திய சுகாதாரத் துறை அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளேன்" என்றார்.

# கியுபாவில் கெஸ்ரோ இல்லாத தலைமைத்துவம் உருவாகின்றது



உலகில் எத்தனையோ ஆண்டுகளாக அமெரிக்கா போன்ற நாடுகளின் நடவடிக்கைளை முறியடித்து கம்யூனிச கொள்கைகளை பின்பற்றி ஆட்சி நடத்தி மக்களின் நல்வாழ்விற்காக தன்னை அர்ப்பணித்த கியுபாவின் பிடல் கெஸ்ரோ அவர்களுக்கு பின்னர் கடந்த 11 ஆண்டுகளாக கியூபாவை வழி நடத்திய ராவுல் காஸ்ட்ரோவிடமிருந்து கியூபா கம்யுனிஸ்ட் கட்சியின் அடுத்த முதன்மை செயலாளராக பொறுப்பை ஏற்றுள்ள மிகுவேல் டயஸ் கனேல் நியமிக்கப்படவுள்ளார். இதன் மூலம் கெஸ்ரோ என்னும் பெயர் கொண்ட இரண்டு சகோதரர்கள் வழி நடத்திய நேர்த்தியான ஒரு நாடான கியூபாவை தலைமை தாங்கி நடத்தும் பொறுப்பை புதியவர் ஒருவர் ஏற்றுள்ள சகாப்தம் தற்போது கியூபாவில் உருவாகியுள்ளது.

மிகுவேல் டயஸ் 2018 ஆம் ஆண்டு காஸ்ட்ரோவுக்கு பதில் கியூப ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட நிலையில், அதிக செல்வாக்கு மிக்க கட்சித் தலைமை பொறுப்புக்கு நியமிக்கப்படவுள்ளார்.

இதன்படி 1959 ஆம் ஆண்டு கியூப புரட்சிக்கு பின்னர் பிடல் அல்லது ராவுல் காஸ்ட்ரோ தவிர வேறு ஒருவர் முதல் முறை கியூபாவின் தலைவராக நியமிக்கப்படவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. காஸ்ட்ரோவுக்கு விசுவாசமானவராகவும் அவரின் பொருளாதார வடிவத்தை ஆதரிப்பவராகவும் டயஸ் கனேல் பார்க்கப்படுகிறார்.

தமது தலைமை பொறுப்பை இளம் தலைமுறைக்கு வழங்கும் அறிவிப்பை ராவுல் காஸ்ட்ரோ கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்தார். 60 வயதான டயஸ் கனேல், ராவுலை விடவும் 30 ஆண்டுகள் இளையவராவார். 89 வயதான ராவுல் காலஞ்சென்ற தனது மூத்த சகோதரர் பிடல் காஸ்ட்ரோவிடம் இருந்து பதவியை ஏற்று 2011 தொடக்கம் அந்த பதவியை வகித்து வந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# நடிகர் உதயநிதி நடிக்கும், "ஆர்ட்டிகள் 15" திரைப்பட படப்பிடிப்பில் மறைந்த விவேக்குக்கு அஞ்சலி



நடிகர் உதயநிதி ஸ்டாலின் நடிக்கும் "ஆர்ட்டிகள் 15" படத்தின் தமிழ் பதிப்பு, கடந்த 10 நாட்களுக்கு முன் பொள்ளாச்சியில் துவங்கியது. இந்நிலையில் இன்று நடிகர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டார். முன்னதாக படப்பிடிப்பு துவங்கும் முன்னர் மொத்த படக்குழுவும், மறைந்த நடிகர் விவேக் அவர்களுக்கு படப்பிடிப்பு தளத்தில் அஞ்சலி செலுத்தினர். இந்தியில் வெளியான "ஆர்டிகள் 15" மூல படம், இந்தியா முழுக்கவெ பெரும் பரபரப்பை கிளப்பிய நிலையில், தமிழ் பதிப்பு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்தே இங்கு படத்தின் மீதான எதிர்பார்ப்பு எகிறியுள்ளது. சமீப காலங்களில் நடிகர் உதயநிதி அழுத்தமான கதைகளில் சிறந்த கதாப்பாத்திரங்களில் தன்னை பொருத்திகொண்டு, ரசிகர்களிடம் நல்ல நடிகர் என்ற பாராட்டை பெற்றிருக்கிறார். தொடர் வெற்றிகளால், அவர் படங்களுக்கு விநியோக தளத்திலும் மிகுந்த மதிப்பு இருந்து வருகிறது. இப்படத்தின் மூலமும் அவர் மேலும் வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் "கனா" படத்தின் பிரமாண்ட வெற்றி மூலம்  எல்லைகள் கடந்து கவனம் ஈர்த்த இயக்குநர் அருண்ராஜ் காமராஜ் இப்படத்தை இயக்குவது ரசிகர்களிடம் மேலும் எதிர்பார்ப்பை தூண்டியுள்ளது.

இன்னும் தலைப்பிடப்படாத இப்படத்தை Romeo Pictures சார்பில் ராகுல் தயாரிக்கிறார். Bayview Project LLP மற்றும் Zee Studios நிறுவனங்கள் இப்படத்தினை இணைந்து வழங்குகின்றனர். Bayview Project LLP மற்றும் Zee Studios நிறுவனங்கள் தமிழில் "நேர் கொண்ட பார்வை" படம் மூலம் மிகப்பெரும் வெற்றியை பெற்றுள்ளனர். மேலும் தமிழ் ரசிகர்களின் மிகப்பெரும் எதிர்பார்ப்பு மிக்க அஜித்குமாரின் "வலிமை" படத்தினை தற்போது தயாரித்து வருகின்றனர். இந்நிறுவனங்களின் சார்பில் உருவாகும் இப்படமும் மிகப்பெரும் வெற்றியை பெரும் என நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

# "மாநாடு" படப்பிடிப்பில் மரக்கன்று நட்டு விவேக்கிற்கு அஞ்சலி செலுத்திய சிலம்பரசன்



தனது திரைப்படங்கள் மூலமாக சமூக விழிப்புணர்வு கருத்துக்களை கூறி, "சின்ன கலைவாணர்" என அனைவராலும் ஒருமனதாக பாராட்டப்பட்ட, பத்மஸ்ரீ நடிகர் விவேக், கடந்த சில தினங்களுக்கு முன் காலமானார். அதேபோல, நிஜ வாழ்க்கையில் இயற்கையை பாதுகாக்கும் முயற்சியில் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட விவேக், மரம் நடுதலின் அவசியத்தை அனைவரிடமும் வலியுறுத்தி வந்தார். மேலும் தனது வாழ்நாளில் ஒரு கோடி மரக்கன்றுகளை நடவேண்டும் என்பதை தனது லட்சிய கனவாக கொண்டு செயல்பட்டு வந்த அவர், 33 லட்சம் மரக்கன்றுகளை நட்டு செயற்கரிய பணியையும் செய்துவிட்டு சென்றுள்ளார்.

அவருக்கு அஞ்சலி செலுத்தியபோது, நடிகர் சிலம்பரசன், விவேக்கின் கனவை நனவாக்கும் விதமாக, ஆளுக்கொரு மரமாவது நடுவதுதான் அவருக்கு செய்யும் உண்மையான அஞ்சலியாக இருக்கும் என கூறியிருந்தார். அப்படி கூறியதுடன் நில்லாமல் தற்போது அதை செய்தும் காட்டியுள்ளார் சிலம்பரசன்.

வி ஹவுஸ் புரொடக்சன் சார்பாக சுரேஷ் காமாட்சி தயாரிப்பில் வெங்கட்பிரபு இயக்கத்தில் சிலம்பரசன் நடித்துவரும் "மாநாடு" படத்தின் படப்பிடிப்பு தற்போது சென்னை விஜிபி கடற்கரையில் நடைபெற்று வருகிறது. இன்று படிப்பிடிப்பு துவங்குவதற்கு முன்னதாக மறைந்த நடிகர் விவேக்கின் உருவப்படத்திற்கு மெழுகுவர்த்தி ஏற்றி படக்குழுவினர் அஞ்சலி செலுத்தினர்.



அதை தொடர்ந்து ஏற்கனவே தான் கூறியபடி படப்பிடிப்பு தளத்தில் படக்குழுவினருடன் சேர்ந்து பத்து மரக்கன்றுகளை நட்டு விவேக்கிற்கு தனது அஞ்சலியை செலுத்தினார் சிலம்பரசன். இந்த நிகழ்வில் நாயகி கல்யாணி பிரியதர்ஷன், பிரேம்ஜி, கருணாகரன், அஞ்சனா கீர்த்தி ஸ்டன்ட் சில்வா, ஒளிப்பதிவாளர், இயக்குனர் வெங்கட்பிரபு, தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி ஆகியோரும் பங்கேற்று மரக்கன்றுகளை நட்டனர்.. இந்த நிகழ்வை பிளாக் ஷீப் யூடியூப் சேனல் ஏற்பாடு செய்திருந்தது.

மேலும், தொடர்ந்து மரங்களை நடுவதில் தான் ஆர்வம் காட்டப்போவதாக கூறிய நடிகர் சிலம்பரசன், தனது ரசிகர்கள் மட்டுமல்லாது அனைவரையும் ஆளுக்கொரு மரம் நட்டு, விவேக் கண்ட கனவை நனவாக்குவோம் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

***மக்கள் தொடர்பு: ஜான்***



# சுமந்திரன் ஊடகப் பேச்சாளர் போன்று கருத்துக்களை தெரிவிப்பது கட்சியின் இருப்புக்கு சவாலாக உள்ளது என்கிறார் சட்டத்தரணி தவராசா



தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு ஓர் ஊடகப் பேச்சாளர் நியமிக்கப்படவில்லை. அப்படிப்பட்ட நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தன்னைக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் போன்று பிரதிபலித்தபடி தொடர்ந்தும் சர்ச்சையான கருத்துக்களை பொதுவெளியில் தெரிவித்து வருவதாவது கட்சியில் அரசியல் இருப்புக்கும் உறுதிப்பாட்டுக்கும் சவலாக அமைந்துள்ளது. என்று தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் அங்கத்தவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான தவராசா தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு எழுதிய அவசரக் கடிதம் ஒன்றில் தெரிவித்துளார்.

திரு சுமந்திரன் தொடர்பான பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ள தவராசா அவர்கள் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

கட்சியில் நான் இணைக்கப்பட்ட நாளிலிருந்து கடந்த ஒரு தசாப்தத்துக்கும் மேலாக இன்றுவரை தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரான உங்களிடம் ஒரு போதும் எந்தவிதமான வேண்டுகோள்களையும் நான் முன்வைத்தவனல்ல, முன்வைக்கப் போறவனுமல்ல. ஆனால் தமிழ்த் தேசியத்தின் வலிமையான இருப்பின் அவசியத்தைக் கருத்திற்கொண்டு கீழ் காணும் வேண்டுகோள்களை முதலாவதும் இறுதியுமான வேண்டுகோள்களாக முன்வைக்கின்றேன்.

எனது வேண்டுகோள்களை கருதிற்கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் என்ற வகையில் தீர்க்கமான முடிவை எடுக்காவிடின் தமிழ் தேசியத்தினதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் எதிர்காலம் கேள்விக்குறியாகும். தங்களின் தலைமைத்துவக் காலத்தில் தமிழரின் அரசில் வல்லமை சிதைக்கப்பட்டது என்ற அவப்பெயரைச் சம்பாதித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்ற வார்த்தைகளை மொழியும் இக்கட்டான தருனத்துக்கு தாங்கள் வந்துவிடக் கூடாது தமிழ் தேசிய கூட்டமைப்பின் எதிர்காலம்?

கட்சிக்கு எவரும் வாக்களிக்கவில்லையெனவும் கட்சி வாக்கால் தான் வெற்றி பெறவில்லையெனவும் தனது தனிப்பட்ட வாக்குகளினாலயே வெற்றி பெற்றதாகவும் ஆப்ரஹாம் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளமை கட்சியின் மீதான மக்களின் நம்பிக்கையையும் அங்கீகாரத்தையும் தரந்தாழ்த்திக் கேவலப்படுத்தும் அகங்காரமிக்க போக்காகும்.

இத்தகைய பொறுப்பற்ற நபர் தொடர்ந்தும் கட்சியில் இருப்பது குறித்து மீள் பரிசீலனை செய்ய வேண்டும். பசில் ராஜபக்சவுக்கு ஆதரவளிப்பதான தொனியில் கருத்து வெளியிட்டமை தொடக்கம் தமிழர்களுக்கு எதிராக இனவழிப்பு நடைபெறவில்லை.

கட்சியின் பேச்சாளர் நியமிக்கப்படாத நிலையில் இத்தகு கருத்துகள் கட்சியைப் பாதிப்படையச் செய்வது குறித்து, நாடாளுமன்ற உறுப்பினர் ஆப்ரஹாம் சுமந்திரன் பிரக்ஞையற்றுச் செயற்படுதலானது எவ்வகையிலும் தமிழ் தேசிய அரசியலுக்கு ஆரோக்கியமானதல்ல என்பது மட்டுமின்றி தமிழ் இனம் இந்த நாட்டில் இருந்தது என்பதற்கே அடையாளம் இல்லாமல் செய்யும் செயல்பாடாகும்.

தமிழ் மக்களின் அதிகப் பெரும்பான்மை ஆணையைப் பெற்றுத் தமிழர்களின் தலைமைத்துவத்தைச் சுமந்து திறம்பட வழிநடாத்திய தமிழ் தேசியக் கூட்டமைப்பு கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் ஆணையை இழந்து கொண்டு செல்கின்ற இச்சூழ்நிலையில் அதற்கான காரணங்கள் பற்றிய ஆய்வு மிகவும் முக்கியமானது.

மனந்திறந்த வெளிப்படையான கருத்தாடல் முறைமை செவ்வையான வழியாகத் தோன்றுகின்றது. கட்சியின் பொறுப்பு வாய்ந்த அனைத்து நிர்வாகிகளும் கட்சியைப் பலப்படுத்தி மீளவும் அரசியல் ரீதியில் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி தமிழர்களின் ஏக குரலாக ஒலிப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படத் தயாராக இருக்க வேண்டிய காலத்தில் நாம் இருக்கின்றோம்.


கடந்த நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற்ற பின்னர் இன்னும் சரியான முறையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பதவி நிலைகள் உரியவர்களுக்கு அளிக்கப்படாத இடைவெளியில் கட்சியின் இருப்பைச் சிதைக்கும் பல்வேறு கருத்தாடல்கள் தொடர்ந்தும் ஊடகங்களில் பேசுபொருளாக இருப்பதை அவதானிக்கின்றோம்.

அந்த வகையில் மிகவும் வெளிப்படையாகப் பேசுவதுதான் இவ்விடத்தில் எமது கட்சியின் இருப்புக்கும் எதிர்காலத்துக்கும் சிறந்தது என்ற அடிப்படையில் முக்கியமான சில விடயங்களைத் தங்களின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன்.

இன்னும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு ஓர் ஊடகப் பேச்சாளர் நியமிக்கப்படவில்லை. அப்படிப்பட்ட நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஆப்ரஹாம் சுமந்திரன் தன்னைக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் போன்று பிரதிபலித்தபடி தொடர்ந்தும் சர்ச்சையான கருத்துக்களை பொதுவெளியில் தெரிவித்து வருவதாவது கட்சியில் அரசியல் இருப்புக்கும் உறுதிப்பாட்டுக்கும் சவலாக அமைந்துள்ளது.

பசில் ராஜபக்சவுக்கு ஆதரவளிப்பதான தொனியில் கருத்து வெளியிட்டமை தொடக்கம் இப்போது கடைசி யுத்தத்தில் இனவழிப்பு நடைபெறவில்லை என்பது வரையான பொதுவெளிக் கருத்துகள் திரு சுமந்திரன் த.தே.கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் என்ற கோதாவிலேயே தொடர்ச்சியாகப் பரப்புரை செய்யப்பட்டு வந்த நிலையில் 2021ம் ஆண்டு சித்திரை மாதம் 11ம் திகதி கெபிடல் தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலில் கட்சிக்கு எவரும் வாக்களிக்கவில்லையெனவும் கட்சி வாக்கால் தான் வெற்றி பெறவில்லையெனவும் தனது தனிப்பட்ட வாக்குகளினாலயே வெற்றி பெற்றதாகவும் குறிப்பிட்டுள்ளமை கட்சியின் மீதான மக்களின் நம்பிக்கையையும் அங்கீகாரத்தையும் தரந்தாழ்த்திக் கேவலப்படுத்தும் அகங்காரமிக்க போக்காகும். இத்தகைய பொறுப்பற்ற நபர் தொடர்ந்தும் கட்சியில் இருப்பது குறித்து மீள் பரிசீலனை செய்ய வேண்டும்.

கட்சி தோல்வி அடைந்துவிட்டது என கட்சிக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் சட்டரீதியற்ற பேச்சாளனாக செயற்பட்டு கட்சியை இல்லாதொழிக்கும் ஆப்ரஹாம் சுமந்திரனின் இந்தச் செயல்பாட்டில் ஒன்றியிருக்கும் நிகழ்சி நிரலின் பின்ணனி என்ன?



ஆ ப ் ர ஹ ா ம ் சுமந்திரனினால் தனிப்பட்ட கருத்துகளாக முன்வைக்கப்படும் கருத்துக்கள் கட்சியின் கருத்தாக பிரதிபலிக்கச் செய்யப்படுவதும் மக்கள் அதை அப்படியே உள்வாங்கிக் கொள்வதும் கூட்டமைப்பின் வாக்கு வங்கியை தொடர்ந்தும் சிதைப்பது மட்டுமின்றி தமிழ் தேசிய கூட்டமைப்பை இல்லாதொழிக்கும் பாரிய பணியைச் செய்யும் செயற்பாடுமாகும்.

குறித்த நபர் கூட்டமைப்பின் பேச்சாளர் அல்ல என்பதை கூட்டமைப்பின் தலைவர் என்ற வகையில் நீங்கள் விரைவாக ஊடக அறிக்கையொன்றினை சமர்ப்பித்து குறித்த நபரால் ஏற்படுத்தப்பட்ட களங்கத்தையும் நற்பெயருக்கு ஏற்பட்ட சிதைவையும் ஓரளவுக்காவது சரிசெய்வதுடன் பொருத்தமான தமிழ் தேசிய உணர்வாளர் ஒருவரை கட்சியின் பேச்சாளராக நியமிப்பதனூடாக இக்காரியத்தை இன்னும் திறம்படச் செய்ய முடியுமாக இருக்கும்.

தலைமைத்துவத்தை மீறி தலைமையின் செல்வாக்கைக் கேள்விக்குள்ளாக்கி விகடமாக்கிடும் குறித்த செயற்பாட்டை உடனடியாகத் தடுத்து நிறுத்தி. கட்சியின் பலத்தை மீளவும் நிலைபெறச் செய்ய தாங்கள் விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள் என்று திடமாக நம்புகின்றோம்.

ஒரு தனி நபரின் தன்னிச்சையான செயற்பாடுகளும் கருத்துகளும் இதற்கு முந்தியொருபோதும் இப்படிக் கட்சிக்கு அபகீர்த்தியை ஏற்படுத்திடவில்லை. மக்களின் நம்பிக்கையை வென்று மேலும் கட்சியின் ஸ்திரப்பாட்டை நிலைப்படுத்த தலைமைத்துவம் வேகமாகச் செயற்படும் என்ற எதிர்பார்ப்பு வீண் போகாது என்றே நம்புகின்றோம்.

ஆப்ரஹாம் சுமந்திரன் கட்சியின் ஊடகப் பேச்சாளராக இருந்த போது தமிழ் மக்களின் விருப்பத்திற்கும் எதிர்பார்ப்பிற்கும் நேர்மாறாக தெரிவித்த சில கருத்துகள் மக்களிடையே அதிர்வலைகளை ஏற்படுத்திய போது அக் கருத்துக்கள் கட்சியின் கருத்துகளல்ல, அவை அவரது தனிப்பட்ட கருத்துகளே என்று நீங்களே அறிக்கையிட்டும் தொலைக்காட்சி நேர்காணலிலும் வெளிப்படையாகக் கருத்துத் தெரிவித்த சந்தர்ப்பத்தையும் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன்.

கடந்த ஒரு தசாப்தத்துக்கும் மேலாக கட்சியில் எதிர்பார்ப்புகள் ஏதுமின்றி எனது பங்கினை ஆற்றி வருகின்றேன். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கட்சியில் உள்ள ஏதேனுமொரு பதவி நிலையைக் கோரியோ அல்லது தேர்தல் காலத்தில் போட்டிடுவதற்கு இடமொதுக்கக் கோரியோ அல்லது தேசிய பட்டியலில் நியமிக்கும்படியோ ஒரு போதும் நான் எனக்காக தலைவர் என்ற வகையில் உங்களிடமோ அல்லது வேறு நிருவாகிகளிடமோ விண்ணப்பஞ் செய்ததில்லை தமிழமக்களின் உணர்வுகளுக்காகவே முழுமையாக எந்த எதிர்பார்ப்புமின்றி கட்சியை நேசிக்கின்றேன்.

அந்த அடிப்படையில் கட்சியின் இருப்பு மீது எனக்கு அதீதமான அக்கறை இருப்பது இயல்பானதே. ஆகவேதான் ஒற்றை நபருக்காகக் கட்சியை அடமானம் வைக்கத் தேவையில்லை என்ற நிலைப்பாட்டில் கட்சியினுள்ளே பலர் இருப்பதை தலைமையின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டியது எனது கடமையுமாகும்.

அடுத்து வரும் தேர்தலினைச் சந்திப்பதற்கு முன்னரே பொறுப்புள்ள நிர்வாகிகள் கட்டமைப்பை உருவாக்கி அதன் மூலம் காத்திரமான செயற்பாடுகளை முன்னெடுத்து சரிவிலிருந்து கட்சியைப் பாதுகாத்து மக்கள் உரிமைக்கான ஏக குரலாக கூட்டமைப்பு திகழ்வதை நாம் உறுதிப்படுத்தியாக வேண்டும்.

மோசமான விமர்சனங்கள் நாளுக்கு நாள் கட்சியின் நற்பெயரைச் சிதைத்துக்கொண்டே இருக்கின்றது என்பதையும் தங்களின் மேலான கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன். தந்தை செல்வா முதற்கொண்டு இப்போது வரைக்குமான காலத்தில் தமிழர்களின் ஒற்றைக்குரலாக நமது குரல் இருந்துள்ளது.

பலமிக்க நிலையில் அதை மீளவும் நிலைநிறுத்தி உறுதிப்படுத்தி கொள்வது காலத்தின் கட்டாயமாகும். இதன் அவசரத்தையும் அவசியத்தையும் உணர்ந்து தீர்க்கமான முடிவொன்றினை விரைவாக தலைமை எடுக்க வேண்டுமென்று அவாவி நிற்கின்றேன்.

இவ்விடயத்தை கருதிற்கொண்டு தீர்க்கமான முடிவை எடுக்காவிடின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்காலம் கேள்விக்குறியாகும். தங்களின் தலைமைத்துவக் காலத்தில் தமிழரின் அரசில் வல்லமை சிதைக்கப்பட்டது என்ற அவப்பெயரைச் சம்பாதித்துவிடக்கூடாது கடந்த கால நெருக்கடி நேரத்தில் அரசியலில் ஆக்ரோசமிக்க தமிழரின் குரலாக நீங்கள் இருந்துள்ளீர்கள்.

இறுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்ற வார்த்தைகளை மொழியும் இக்கட்டான தருனத்துக்கு தாங்கள் வந்துவிடக் கூடாது என்ற நன்னோக்கைப் புரிந்துகொள்வீர்கள் என்று நினைக்கின்றேன். ஏனெனில் மக்கள் அப்படியொரு பிரயோகத்தை தங்களிடமிருந்து எதிர்பார்க்கவில்லை.

இந்த இக்கட்டான நிலையில் தங்களின் கடமையைச் சரியாகச் செய்யாவிட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற வரலாறு இறுதி அத்தியாயத்தை எழுதிக்கொள்ளும் என்பதைத் தாங்களும் நன்கு அறிவீர்கள்.

அவ்வாறு நிகழ்ந்தால் அந்த வரலாற்றுத் தவறுக்குப் பொறுப்பாளியாக தாங்களே இருக்க நேரிடும் என்பதையும் புரிந்து வைத்திருப்பீர்கள். அத்தகைய வரலாற்றுத் தவறையல்ல வரலாற்றுத் தப்பை தாங்கள் செய்ய மாட்டீர்கள் என்று திடமாக நம்புகின்றேன்.

தமிழ்த் தேசியத்தின் வலிமையான இருப்பின் அவசியத்தைக் கருதி இந்த விடயத்தில் மேலதிக கால விரயத்தைத் தவிர்த்து விரைவாக முடிவெடுக்கும் படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன் என தெரிவித்துள்ளார்.



# நாம் இப்போது இனப்படுகொலையின் சாட்சிகள்

- தீபச்செல்வன்

நம் சமூகத்தில் எப்போதுமே ஒரு எதிர்பார்ப்பு இருக்கும். நமக்கான நீதிக்காக யாரோ ஒருவர் வருவார் என்றும் ஒரு மீட்பர் வந்து நமக்கு நீதியை தருவார் என்றும் நாம் நம்புவதுண்டு. தெய்வங்கள்மீது கூட நம்பிக்கையை சுமத்திவிட்டு இருப்போம். சிலநேரங்களில் சமூக நீதிக்காகவும் இன நீதிக்காகவும் கூட இப்படி இருந்துவிடுவதுண்டு. முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஈழத் தமிழர்களுக்கு எதிரான அநீதிகள் தலை விரித்தாடிய போது தலைவர் பிரபாகரனும் யாரோ ஒரு மீட்பர் வருவார் என இருந்துவிடவில்லை. மண்ணையும் மக்களையும் மீட்கவும் அவர்களின் உரிமையை நிலைநாட்டவும் அவரே முயன்றார். அதனால் அவர் ஈழத் தமிழினத்தின் நிகரற்ற போராளியாக மீட்பராகவே ஆனார்.

வரலாறு நமக்கு இதைத்தான் கற்றுத் தருகின்றது. சமயங்களின் வரலாறுகளிலும் தெய்வங்களின் அதிசயங்களிலும் இலக்கியங்களிலும்கூட அந்த முயற்சியைதான் நாம் முக்கியமான ஆயுதமாக கற்றுக் கொள்ள வேண்டும். இயக்கமும் முயற்சியும் இல்லாதவர்களுக்கு இந்தப் பூமியில் எதுவும் இல்லை. அவர்களுக்கு இந்தப் பூமி பாரமாக இருக்கும். வாழ்க்கைகூட பாரமாகத்தான் இருக்கும். அதே சமயத்தில் இயக்கமும் முயற்சியும் நிறைந்த செயற்பாட்டு மனிதர்கள் இந்த பூமியை அழகுபடுத்துகிறார்கள். அவர்கள் முன்னுதாரணம் கொண்ட மனிதர்களாக நம் முன்னால் இருந்து கொண்டே இருப்பார்கள். சொல்லுக்கு முதல் செயல் என்ற தலைவர் பிரபாகரனின் மொழியும் இதைதான் சொல்கிறது.

ஒரு காலத்தில், அதாவது 2009 இனப்படுகொலை முடிந்த தருவாயில், போர்க்குற்றம், இனப்படுகொலை குறித்து பேசிய போது ஈழத்தில் உள்ளவர்களில் சிலர்கூட நம்பிக்கை கொள்ளவில்லை. இனி இதுவெல்லாம் சாத்தியமா என்றுதான் பேசினார்கள். அன்றைக்கு ஈழத்திற்கு வெளியில் தமிழகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும்தான் ஈழ இனப்படுகொலை குறித்து அதிகம் பேசப்பட்டது. அதுவே மிகவும் நியாயமானதும்கூட. ஏனெனில் ஈழ நிலம் குரலற்று இருக்கின்ற சமயங்களில் எல்லாம் அதன் குரலாகவும் உயிராகவும் இருப்பது தமிழகமும் புலம்பெயர் தேசமும்தான்.

இதன் முக்கிய வெளிப்பாட்டு அம்சமாக தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஈழத்தில் நடந்தது இனப்படுகொலை என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும், பின்னதாக ஈழத்தில் வடக்கு மாகாண சபையில் இலங்கை அரசின் இனப்படுகொலை குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்துடன் ஈழத்தில் நடந்தது இனப்படுகொலை என்பதையும் அதற்கான நீதியை சர்வதேச விசாரணை வாயிலாக வழங்க வேண்டும் என்பதையும் புலம்பெயர் தேச மக்கள் பல்வேறு வகையிலான போராட்டங்கள் வாயிலாக எடுத்துரைத்து வருகின்றனர்.

இந்த நிலையில் சர்வதேச உண்மை மற்றும் நீதிககான செயற்திட்ட அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா, இலங்கையின் இன்றைய இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவின் இனப்படுகொலை சார்ந்த குற்றங்கள் தொடர்பான 50 பக்க ஆவணம் ஒன்றை பிரிட்டன் வெளிநாட்டு பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் தடைகள் திணைக்களத்துக்கு சமர்பித்துள்ளார். உரிய சட்ட வழிமுறைகளின் அடிப்படையில், நிறைவான ஆதாரங்களுடன் அவர் வழங்கியுள்ள ஆவணங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை எனக் கூறப்படுகிறது.

யஸ்மின் சூக்கா அவர்கள், கடந்த பத்தாண்டுகளாக இலங்கை நிலவரம் தொடர்பாக தன்னுடைய அவதானத்தை செலுத்தி வருகின்றார். அத்துடன் இலங்கை அரச படைகள் இழைத்த மிகப் பெரும் போர்க்குற்றங்கள் தொடர்பாக பல குற்றச்சாட்டுக்களை முன் வைத்து வருகின்றார். ஈழத் தமிழ் மக்களின் உரிமைக்காகவும் நீதிக்காகவும் குரல் கொடுத்து வருகின்ற யஸ்மின் சூக்கா, உலகில் ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களுக்காக குரல் கொடுத்து வருகின்ற மனித உரிமைப் போராளி. அத்துடன் நடு நிலையாகவும் ஆதாரபூர்வமாகவும் இவர் உலகில் நடக்கும் அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுப்பவர் என்பதும் இவர்மீதான பொது மதிப்பீடாகும்.



இந்த நிலையில், யஸ்மின் சூக்கா முன் வைத்துள்ள ஆவணம், சவேந்திர சில்வா 06 ஜுலை 2020 இல் உருவாக்கப்பட்ட ஐக்கிய இராச்சியத்தின் உலகளாவிய மனித உரிமைகள் தடை பொறிமுறையின் கீழ் ஏன் கண்டிக்கப்பட வேண்டும்? என நியாயபூர்வமாக வாதிடுகின்றது. இலங்கையின் வடக்கில் 2009 இல் இடம்பெற்ற சிவில் போரின் இறுதிக் கட்டத்தின்போது 58 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாக இருந்தபோது சவேந்திர சில்வா வாழ்வுரிமை உட்பட பாரிய மனித உரிமை மீறல்களை மேற்கொள்வதில் அவரது பங்கு குறித்தும் இந்த ஆவணம் ஆதாரங்களை சமர்பிப்பு செய்துள்ளது.

அத்துடன் அது பாதுகாப்பு வலயங்கள் எனக் கூறப்பட்ட இடங்களில் அரசால் மேற்கொள்ளப்பட்ட வைத்தியசாலைகள் மற்றும் உணவுக்காக வரிசையில் நின்றவர்கள் மீதான எறிகணை மற்றும் குண்டுத் தாக்குதலில் உயிர்தப்பிய தமிழர்களின் கொடுமை நிறைந்த நேரில்கண்ட சாட்சி வாக்குமூலத்திலிருந்து இந்தச் சமர்ப்பிப்பு உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது வெளிநாடுகளில் வாழுகின்ற இனப்படுகொலையின் சாட்சியங்களின் அடிப்படையில் இந்த ஆவணம் உருவாக்கப்பட்டிருப்பதும் இதன் இன்னொரு முக்கிய அம்சமாகும்.

அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் 41ஆவது கூட்டத் தொடரில் நிறவேற்றப்பட்ட இலங்கை குறித்த 41/1 என்ற தீர்மானம், சர்வதேச விசாரணை மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை பரிந்துரை செய்யும் என ஈழத் தமிழ் மக்களும் சர்வதே மனித உரிமை செயற்பாட்டாளர்களும் எதிர்பார்த்திருந்த சமயத்தில், மீண்டும் ஸ்ரீலங்கா அரசுக்கு கால அவகாசத்தையும் உள்ளக விசாரணையை நடத்தும் வாய்ப்பையும் பிரித்தானியா தலைமையிலான நாடுகள் கொண்டுவந்த தீர்தானம் வழங்கியுள்ளது. ஸ்ரீலங்காவை மயிலறகால் தடவும் இந்த தீர்மானத்தைக்கூட, தமது நாட்டுக்கு எதிரான சதி என்றும் சர்வதேச தலையீடு என்றும் ஸ்ரீலங்கா அரசு சொல்லி வருகின்றது.

இதனால் இன்னொரு ஆபத்தையும் ஈழத் தமிழ் மக்கள் எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். ஐ.நா மனித உரிமை பேரவை கூட்டத் தொடர் தீர்மானம் நிறைவேறி ஈரம் காய்வதற்கு முன்னரே, தமிழ் மக்கள் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீதான அடக்குமுறை அதிகரிக்கத் துவங்கியுள்ளது. ஸ்ரீலங்கா அரசின் அடக்குமுறைகளையும் ஈழத் தமிழ் மக்கள் மீதான இனவழிப்புக்கும் ஐ.நா தீர்மானம் மீண்டும் களம் அமைத்துக் கொடுத்திருக்கிறது என்பதையே இப்போதுகூட உணர்ந்து கொள்ளலாம்.

நாம் இப்போது செய்ய வேண்டியது, உலகம் எங்கும் வாழ்கின்ற ஈழத் தமிழ் மக்கள் அனைவரும் இனப்படுகொலையின் சாட்சிகளாக மாற வேண்டும். குறிப்பாக, புலம்பெயர் தேசங்களில் வாழ்கின்ற மக்கள், தாம் ஏன் தமது நிலத்தை விட்டு குடி பெயர்ந்து அகதிகளானோம் என்ற கதையை வாக்குமூலங்களாக சாட்சியங்களாக அளித்தாலே அவையே இனப்படுகொலைக்கான பெரும் ஆதாரங்கள் ஆகும். இனப்படுகொலைக்கான நீதியில்தான் எஞ்சிய ஈழத் தமிழ் இனத்தின் விடுதலையும் அமைதியும் வாழ்வும் உரிமையும் இருக்கிறது என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. அதற்காக நாம் பல்வேறு அச்சுறுத்தல்கள், நெருக்கடிகள் கடந்தும் செயற்பட வேண்டும். போராட வேண்டும். மெய்யாகவே போராடாத எந்த இனமும் விடுதலையை பெறுவதில்லை.

# நீதிக்காகவும் நிதிக்காகவும் காத்திருக்கும் மட்டக்களப்பு தேவாலயம்

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)



தேவாலயங்களை புனரமைப்பதிலும் இனவாதம் வெளிப்படுகிறதோ எனும் சந்தேகம் இலங்கையிலுள்ள விசுவாசமான தமிழ் கிறிஸ்தவர்களிடையே ஏற்பட்டுள்ளது.

கடந்த 2019 ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தொடர் குண்டுவெடிப்பில் அழிவடைந்த மூன்று தேவாலயங்களில் இரண்டு தேவாலங்கள் அரசாங்கத்தால் புனரமைக்கப்பட்டு, நினைவுகூரல் நிகழ்வுகள் இடம்பெற்ற நிலையில், கிழக்கில் உள்ள மக்கள் இரண்டு வருடங்களுக்கு முன்னர் அழிவடைந்த தேவாலயத்தில் பிரார்த்தனைகளை நடத்தியுள்ளனர்.

குண்டுவெடிப்பில் அழிக்கப்பட்ட கட்டுவாபிட்டிய புனித செபஸ்டியன் தேவாலயம் மற்றும் கொழும்பு - கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம் ஆகியவை கடற்படையால் விரைவாக புனரமைக்கப்பட்டன.

எனினும், மோசமான அழிவினை எதிர்கொண்ட மட்டக்களப்பு சியோன் தேவாலயம் இரண்டு வருடங்களுக்கு பிறகும் இதுவரை புனரமைக்கப்படவில்லை திருச்சபையும் அங்கு வரும் பக்தர்களும் கவலை வெளியிட்டுள்ளனர்.



பல தேவாலயங்கள் மற்றும் சுற்றுலா ஹோட்டல்களை குறிவைத்து 2019 ஏப்ரல் 21ஆம் திகதி நடத்தப்பட்ட தொடர் தற்கொலை குண்டுத் தாக்குதலில் 250ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் கட்டுவாபிட்டிய புனித செபஸ்டியன் தேவாலயம், கொழும்பு - கொச்சிகடை புனித அந்தோனியார் தேவாலயம், மட்டக்களப்பு சீயோன் தேவாலயம், தெஹிவலை மற்றும் கொழும்பு கிங்ஸ்பரி, ஷாங்க்ரி-லா, சினமன் கிராண்ட் ஹோட்டல் ஆகிய இடங்களில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் குறைந்தது 268 பேர் கொல்லப்பட்டதோடு, 500ற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் இரண்டாம் ஆண்டு நினைவைக் குறிக்கும், பல்வேறு மத நிகழ்வுகள் இலங்கை முழுவதும் நடைபெற்றதாக நாட்டின் பல பகுதிகளிலிருந்து வந்த செய்திகள் கூறுகின்றன. அந்த நினைவுகூரல் நிகழ்வுகள் இடம்பெற்ற இடங்களைச் சுற்றி கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் நினைவாக

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

# தியாகத்தாய் அன்னை பூபதியின் நினைவுகள்

ஈழத்தில் அன்னையர்களின் போராட்டத்திற்கு தனித்துவமான இடமுண்டு. தாய்மை உலகில் உன்னதமான உணர்வு. மனிதர்கள் மாத்திரமின்றி அனைத்து உயிரினங்களிலும் தாய்மை மிகவும் உன்னதமானதாக கருதப்படுகிறது.

விலங்குகள், பறவைகள் என அனைத்து உயிரினங்களிலும் தாய்மையின் மகத்துவத்தை உணரலாம். ஈழத்து அன்னையர்களின் வாழ்வு துயரத்தில் தோய்ந்தது.

இன்றைக்கு ஈழமெங்கும் அன்னையர்கள் தவித்து வாழும் ஒரு வாழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளுக்காக, அவர்களின் விடுதலைக்காக, நீதிக்காக ஈழத்தில் அன்னையர்கள் தெருவில் வாழும் ஒரு போராட்டத்திற்கு நிர்பந்திக்கப்பட்டுள்ளனர்.

அன்னையர்கள் கண்ணீர் சிந்தும் ஒரு நாடு எத்தகைய நீதியில் இருக்கிறது என்பதையே வெளிப்படுத்துகிறது. கிளிநொச்சியிலும் வவுனியா-விலும் அன்னையர்கள் காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளுக்காக போராடிக் கொண்டிருக்கின்றனர்.

தெருவில் வீழ்ந்து புரண்டழும் இந்த தாய்மாரைப் பார்த்தும் இலங்கை அரசும் உலகமும் நீதியை வழங்காமல் மௌனித்து அநீதி காக்கிறது. அன்னையர்களின் கண்ணீருக்கு பதில் அளிக்காதிருக்கும் மனிதாபிமானமற்ற கொடிய முகத்தையே நாம் உணரவேண்டியுள்ளது.

அன்னையர்கள் தலைமுறைகளால் பூமியை உருவாக்கியவர்கள். தங்கள் மாசற்ற தாய்மையால் எல்லோராலும் நேசிக்கப்படுபவர்கள். அன்னையர்கள் தவித்து வாழும் தேசங்களில் வடக்கு கிழக்கு தமிழ் தேசமும் ஒன்று.

ஈழம் முழுக்க முழுக்க அன்னையர்களின் தவிப்பாலும் கண்ணீராலும் ஏக்கத்தாலும் காத்திருப்பினாலும் மூழ்கியதொரு தேசம். கடந்த 30 வருடங்களுக்கு மேலாக தொடரும் நிலையிது.

ஈழத்தில் இப்போது நடக்கும் போராட்டங்களைப் பார்க்கும்போது அர்ஜன்டினா அன்னையர்களின் போராட்டமே நினைவுக்கு வருகிறது. அந்நாட்டில் இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்டபோது, அவர்களை மீட்க அன்னையர்கள் தெருவுக்கு வந்து போராட்டங்களை நடத்தினர்.

சைக்கிளில் சென்ற தமது பிள்ளைகள் காணாமல் ஆக்கப்பட்டதை நினைவுபடுத்தி, கடதாசிச் சைக்கிள்களை செய்து வைத்தபடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மிகவும் துயரமும் மனித மாண்புக்கு இழிவு சேர்க்கும் செயலுமாக, போராட்டத்தில் ஈடுபட்ட அன்னையர்களையும் காணாமல் ஆக்கப்பட்டனர். ஈழத்தில் காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளுக்காக அன்னையர்கள் தம்மை உருக்கி காணாமல் போனபடி போராட்டத்தை நடத்துவதற்கு ஒப்பானதொரு செயலே இது.

இன்று தியாகி அன்னை பூபதியின் நினைவுநாள். ஏப்ரல் 19 1988ஆம் ஆண்டு இந்தியப் படைகளுக்கு எதிராக உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்தவர் அன்னை பூபதி. இவர் பத்துப் பிள்ளைகளின் தாய்.

ஆனாலும் தன் தாயகத்து பிள்ளைகளை காப்பாற்ற வேண்டும் என்று உண்ணா விரதப் போராட்டத்தை முன்னெடுத்தவர். இவர் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களின் அன்னையர் முன்னணியின் முதன்மைச் செயற்பாட்டாளர்.

இந்திய இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் யுத்தம் நடைபெற்றபோது, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும், உடனடியாக போரை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி அன்னையர் முன்னணி சார்பில் போராட்டத்தை மேற்கொண்டார்.

அன்னையர் முன்னணியின் கோரிக்கைக்கு இந்தியப் படைகள் செவிசாய்க்கவில்லை. அன்னையர் முன்னணிக்கும் இந்தியப் படைகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றன.

1988இல் ஜனவரி 4ஆம் திகதி திருகோணமலையிலும் பெப்ரவரி 10ஆம் திகதி கொழும்பிலும் அன்னையர் முன்னணிக்கும் இந்தியப் படைகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

அன்னையர் முன்னணியின் கோரிக்கைகளை இந்தியப் படைகள் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனையடுத்து சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நடாத்த அன்னையர் முன்னணி தீர்மானித்தது.

சாகும்வரையிலான போராட்டத்திற்கு பல அன்னையர்கள் முன்வந்தனர். எனினும் ஒருவர் போராட்டத்தில் ஈடுபடுவதென தீர்மானிக்கப்பட்டது. இதன்படி குலுக்கல் முறையில் போராட்டத்தில் ஈடுபடுபவர் தெரிவு செய்யப்பட்டார்.

முதலில் அன்னம்மா டேவிட் தெரிவு செய்யப்பட்டார். பெப்ரவரி 14 மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் உண்ணா நோன்பு இருந்தபோது அன்னம்மா டேவிட் கடத்தப்பட்டமை காரணமாக இவரது உண்ணாவிரதப் போராட்டம் தடைப்பட்டது.

இதனையடுத்தே அன்னை பூபதி மார்ச் 19 போராட்டத்தில் குதித்தார். போராட்டத்தில் ஈடுபட்ட அன்னை பூபதி "சுயவிருப்பின் பேரில் உண்ணாவிரதமாயிருக்கிறேன்.

எனக்கு சுயநினைவிழக்கும் பட்சத்தில் எனது கணவனோ, அல்லது பிள்ளைகளோ என்னை வைத்தியசாலையில் அனுமதிக்க முயற்சிக்கக் கூடாது" என்று கடிதம் எழுதி வைத்தார். நீர் மட்டும் அருந்தியபடி, உணவை விடுவித்து போராட்டத்தில் ஈடுபட்டார் அன்னை பூபதி.

உண்ணா விரதப் போராட்டத்திற்கு ஆதரவளித்தவர்கள், அன்னை பூபதியின் பிள்ளைகள் கடத்தப்பட்டபோதும் இவரது உண்ணிவிரதப் போராட்டம் தொடர்ந்தது.

இந்திய படைகளினால் இவரது கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளாத நிலையில் சரியாக ஒரு மாத்தின் பின்னர் ஏப்ரல் 19 அன்னை பூபதி உயிர் துறந்தார்.

இந்திய நாட்டின் அகிம்சை முகத்தை திலீபன் என்ற போரா-ளி கிழித்தெரிந்த நிலையில் அன்னை பூபதியின் அறப்போராட்டம் ஊடாக ஈழப் பொதுமக்களால் இந்திய அரசின் அகிம்சை முகம் கிழிக்கப்பட்டது. அன்னைபூபதி ஈழத் தமிழ் மக்களின் அறப்போராட்டத்தின் முகம்.

இந்திய படைகளின் அராஜகங்களுக்கு எதிரான அற வழி ஆயுதம். ஜனநாயக வழிப் போராட்டத்தின் அடையாளம். இன்றைக்கு ஈழத்தில் தாய்மார்கள் தெருத் தெருவாக விழ்ந்து புரண்டு போராட்டத்தில் ஈடுபடும்போது அன்னை பூபதியே நினைவுக்கு வருகிறார். இன்றைக்கு எங்கள் தெருவெல்லாம் அன்னை பூபதிகள் உள்ளனர்.

அன்னை பூபதி இந்திய அரசின் போரை நிறுத்த வேண்டும் என்பதற்காகவே உண்ணா விரதம் இருந்து உயிர் துறந்தவர். போரை நிறுத்தி, தம் தாயகத்து பிள்ளைகளை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கமே அவரிடமிருந்தது.

இன்று எங்கள் தெருவெங்கும் அன்னையர்கள் போராடுவதும் பிள்ளைகளுக்காகவே. காணாமல் ஆக்கப்பட்ட தம் பிள்ளைகளை விடுவிக்க வேண்டும் அவர்களின் உண்மை நிலை என்ன என்று அறிவிக்க வேண்டும் என்று போராடுகின்றனர். தம்மை உருக்கி, தம்மை அழித்து மேற்கொள்ளும் இந்தப் போராட்டத்திற்கும் அன்னை பூபதியின் போராட்டத்திற்கும் மிக நெருக்கம் உண்டு.



எங்கள் அன்னையர்கள் - அன்னை பூபதிகள் நடத்தும் போராட்டங்கள் இலங்கை அரசின் கொ-டிய இன ஒடுக்குமுறை முகத்தை அம்பலம் செய்கிறது.

அன்னை பூபதியின் 32 ஆண்டு கால நினைவுநாள் என்பது அன்னையர்கள் இத் தீவில் மூன்று தசாப்தங்களாக இருக்கும் புத்திர விரதத்தின் அடையாளத்தையும் ஈழச் சனங்களின் வாழ்வையும் உணர்த்தும் ஒரு நாளாகும்.

அன்னைபூபதி அம்மாவின் நினைவு நாட்களின் முதல்நாள் ஈழநாதம் பத்திரிகையில் அவரது ஒளிபட இணைப்பு வரும். ஈழம் முழுதும் பெப்ருவரி 10 முதல் மார்ச் 19 வரை அவரது நினைவில் மூழ்கியிருக்கும்.

பள்ளிக்கூடத்திலும் தெருவிலுமாக எங்கள் வாழ்வோடு அவரது நினைவு நாட்கள் கலந்திருந்தன. ஈழத் தாய் சமூகத்தின் குறியீடே அன்னை பூபதி.

**- கவிஞர் தீபச்செல்வன்**

# நீதிக்காகவும் நிதிக்காகவும் காத்திருக்கும் மட்டக்களப்பு தேவாலயம்

(11ம் பக்கத் தொடர்ச்சி)

புதன்கிழமை (21) காலை நாடாளுமன்றத்தில் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி அனுஷ்டிக்கப்பட்டது. தற்போதைய ஜனாதிபதி ஆட்சிக்கு வந்தபின் தேவாலயத்தின் புனரமைப்பு பணிகள் முற்றிலுமாக நிறுத்தப்பட்டுள்ளதாக, மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தின் அருட்தந்தை ரொஷான் மகேஷன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"நவம்பர் 2019ஆம் ஆண்டுக்கு பின்னர், புனரமைப்பிற்கு அரசாங்கத்திடம் இருந்து பணம் கிடைக்கவில்லை. அதனாலேலேயே எமது தேவாலயம் இவ்வாறு காணப்படுகின்றது".

அந்த தேவாலயத்தில் இன்னும் அந்த கோரத் தாக்குதலின் எச்சங்கள் தெரிகின்றன, இடிந்து விழுந்த மற்றும் திருத்தப்படாத சுவர்களையும், தரையையும் காண முடிந்ததாக, தேவாலயத்திற்கு சென்று வந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

கட்டி முடிக்கப்படாத சுவர்களுக்கு மத்தியில், தூசு படர்ந்திருந்த தரையில் அமர்ந்து பெரும்பான்மையான தமிழ் பக்தர்கள் விசேட ஆராதனையில் பங்கேற்றனர்.

ஏப்ரல் 20, செவ்வாய்க்கிழமை, ஐக்கிய மக்கள் சக்தியின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேவாலயத்தின் தற்போதைய நிலை குறித்து ஆராய்ந்துள்ளனர்.

அந்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் அங்கு இருந்த சமயத்தில், தேவாலயத்தின் புனரமைப்பிற்காக திரைசேறியால் ஒதுக்கப்பட்டதாகக் கூறப்படும் நிதியில் ஆறில் ஒரு பங்கிற்கும் குறைவான தொகை கிடைத்துள்ளதாக, அருட்தந்தை ரொ'ான் மகேஷன் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

"இதனை புனரமைக்க 37 மில்லியனை ஒதுக்கியுள்ளதாக திரை-சேறி அறிவித்தது. எனினும் இராணுவத்திற்கு சுமார் 6 மில்லியன் ரூபாய் மாத்திரமே கிடைத்துள்ளதாக நான் நினைக்கின்றேன்". ஆனால் ஒரு தேவால-யப் புனரமைப்பு கூட இராணுவத்தினர் மூலமாகவே செய்யப்பட வேண்டுமா என்ற கேள்விகளுக்கு அரசிடமிருந்து பதிலில்லை.

உயிரிழந்த பக்தர்களின் புகைப்படங்களைக் கொண்ட ஒரு பதாதை சியோன் ஆலயத்தின் முன் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. அவற்றில் 14 சிறுவர்கள் புகைப்படங்களும் காணப்படுகின்றன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பலியானவர்களை நினைவுகூரும் வகையில் புதன் காலை கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் நடைபெற்ற பிரதான ஆராதனைகளின் பின்னர் உரையாற்றிய கொழும்பு பேரா-யர் மல்கம் ரஞ்சித், "உண்மையை புதைத்து குற்றவாளிகளை திருத்துவதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட முயற்சியில் சேர ஒருபோதும் தயாராக இல்லை", எனக் குறிப்பிட்டிருந்தார்.

68 சிறுவர்கள் உட்பட 269 பேரின் மரணத்திற்கு காரணமான குற்றத்தில் அப்போதைய அரசாங்கமும் தற்போதைய அரசாங்கமும் அலட்சியமாக இருப்பதை வலியுறுத்திய அவர், மந்தமான செயற்பாடுகள் குறித்து ஆழ்ந்த வருத்தத்தை வெளிப்படுத்தினார்.


அந்தப் படுகொலைகளுக்குப் பின்னால் அரசியல் நோக்கங்கள் உள்ளன என்பது தெளிவாகிறது எனவும் அவர் கூறினார். ஆனால் அந்த உண்மைகள் என்ன என்பதை பேராயர் வெளியிடவில்லை.

உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்திக்காக, வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள பல இந்து தேவாலயங்களில் அந்த நினைவு நாளையொட்டி சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரிகள் அம்பலப்படுத்தப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனக் கோரி, கிறிஸ்தவ மதகுருமார்கள், கன்னியாஸ்திரிகள், சிவில் சமூக அமைப்புகளின் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களின் பங்கேற்புடன் நீர்கொழும்பில் போராட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது.




## உங்களுடைய முறை விரைவில் வருகிறது.




ஒன்ராரியோவின் கோவிட்-19 தடுப்பூசி திட்டம் நோய் பரவலைத் தடுத்து உயிர்களைக் காக்க உதவுகிறது.

தினமும் ஆயிரக்கணக்கானோர் ஒன்ராரியோவில் தடுப்பூசி போட்டுக்கொள்கிறார்கள்.

தடுப்பூசி வேலை தொடரும்போது, நாமும் முகக் கவசம் அணிந்து, கைகளைக் கழுவி சமூக இடைவெளியைக் காக்கவேண்டும்.

300 மொழிகளில் உதவிபெற **ontario.ca/covidvaccineplan** க்கு செல்லுங்கள் அல்லது 1-888-999-6488 ஐ அழைத்து மேலும் தெரிந்துகொள்ளுங்கள்.

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தகளுக்கு மன்னாரில் தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் நினைவேந்தல்






கடந்த 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு அன்று இடம் பெற்ற தற்கொலைக் குண்டு தாக்குதலில் உயிரிழந்த மக்களின் 2 ஆவது ஆண்டு நினைவு அஞ்சலி புதன்கிழமை (21) மாலை 5 மணியளவில் மன்னார் மாவட்ட தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இடம் பெற்றது. தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் இடம் பெற்ற குறித்த நினைவேந்தல் நிகழ்வில் சர்வமத தலைவர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது தற்கொலை குண்டு தாக்குதலில் உயிர் நீத்த மக்களை நினைவு கூர்ந்து உறுவப்படத்திற்கு தீபம் ஏற்றி மாலை அனுவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து சர்வ மத தலைவர்களினால் உரை நிகழ்த்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# துணிச்சலுள்ள பெண்மணிக்கான சர்வதேச விருதினைப் பெற்ற சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா




2021 ஆம் ஆண்டிற்கான துணிச்சலுள்ள பெண்மணிக்கான சர்வ தேச விருதினைப் பெற்ற மன்னார் மாவட்டத்தை சேர்ந்த சட்டத்தரணி திருமதி ரனித்தா ஞானராஜா அவர்களை வரவேற்று கௌரவிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை 17-04-2019 மாலை 3 மணியளவில் மன்னார் நகர மண்டபத்தில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இணைந்து குறித்த கௌரவிப்பு நிகழ்வை ஏற்பாடு செய்தனர்.

இன்று சனிக்கிழமை மாலை 3 மணியளவில் மன்னார் பஸார் பகுதியில் இருந்து மாலை அனுவித்து இசை வாத்தியத்துடன் ஊர்வலமாக துணிச்சலுள்ள பெண்மணிக்கான சர்வ தேச விருதினைப் பெற்ற மன்னார் மாவட்டத்தை சேர்ந்த சட்டத்தரணி திருமதி ரனித்தா ஞானராஜா அழைத்து வரப்பட்டார்.





அதனைத்தொடர்ந்து நகர மண்டபத்தில் நிகழ்வுகள் இடம் பெற்றது. பிரதம விருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை கலந்து கொண்டதோடு, சர்வ மத தலைவர்கள், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ்.வினோநோகராதலிங்கம், சாள்ஸ் நிர்மலநாதன், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் திணைக்கள அதிகாரிகள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் பெண்கள் அமைப்பு என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது 2021 ஆம் ஆண்டிற்கான துணிச்சலுள்ள பெண்மணிக்கான சர்வ தேச விருதினைப் பெற்ற மன்னார் மாவட்டத்தை சேர்ந்த சட்டத்தரணி திருமதி ரனித்தா ஞானராஜா அவர்களுக் பொன்னாடை போர்த்தி ஞாபக சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# கலாநிதி ஜெயசீலன் ஞானசீலனின் "இன உறவுகளும் வரலாறும்" ஆங்கில நூல் வெளியீட்டு விழா






முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ஜெயசீலன் ஞானசீலன் எழுதிய "இன உறவுகளும் வரலாறும்" எனும் ஆங்கில நூல் வெளியீட்டு விழா 17-04-2021 சனிக்கிழமை காலை 10 மணியளவில் மன்னார் நகர மண்டபத்தில் இடம் பெற்றது.

குறித்த வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மற்றும் விருந்தினர்களாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல், யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறி சற்குணராஜா, வவுனியா வளாக முதல்வர் கலாநிதி தம்பு மங்கலேஸ்வரன், ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி.விக்ன ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது "இன உறவுகளும் வரலாறும்" எனும் ஆங்கில நூல் வைபவ ரீதியாக வெளியீடு செய்யப்பட்டது.

குறித்த நிகழ்வில் வவுனியா வளாக வியாபார கற்கை பீட பீடாதிபதி கலாநிதி வை.நந்த கோபன், நிதியியல் மற்றும் கணக்கியல் துறை தலைவர் கலாநிதி திருமதி கே.கலைநாதன், பொருளியல் மற்றும் முகாமைத்துவ துறை தலைவர் திருமதி பௌலினா கோட்வின், வவுனியா வளாக சிரேஸ்ட நூலகர் எஸ்.சன்முகதாசன், முது நிலை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.விஜயன் உற்பட திணைக்கள தலைவர்கள், அருட்தந்தையர்கள் என பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர் (17-04-2021)**






# யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் மீண்டும் நிமிர்ந்து எழுந்தது 'முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி'

**பல்கலைக் கழக மாணவர்களின் மன உறுதியினாலும், உழைப்பாலும் உலகெங்கும் உள்ள உறவுகளின் ஆதரவாலும் உறுதியாய் நிற்கின்றது நாம் இழந்தவர்களுக்கான தூபி**



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பலரது மூர்க்கத்தனமான செயற்பாட்டால் அழித்தொழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவு தூபி மீண்டும் அதே இடத்தில் அமைக்கப்பட்டு இன்று வெள்ளிக்கிழமை காலை 7.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது. என்ற செய்தி எமது யாழ் மண்ணிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவு தூபி கடந்த ஜனவரி மாதம் 8ம் திகதி இரவு, பல்கலைக்கழக நிர்வாகத்தினால் உடைக்கப்பட்டது. நிர்வாகத்தினருக்கு நெருக்குவாரத்தை கொடுத்தவர்களுள் பல அரசியல்வாதிகளும் இருந்தார்கள் என்பதும் உண்மை.

இதையடுத்து மாணவர்கள், தமிழ் உணர்வாளர்கள் அரசியல் தலைவர்கள் கண்டனம் வெளியிட்டதோடு பல்கலை. மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்திலும் உணர்வோடு குதித்தனர்.

மாணவர்களின் கடும் அழுத்தத்தை அடுத்து மீண்டும் நினைவுத் தூபியை அதே இடத்தில் அமைப்பதற்கு முன்வந்த பல்கலை நிர்வாகம், கடந்த ஜனவரி 11ஆம் திகதி காலை துணைவேந்தர் அவர்களது தலைமையில் அடிக்கல் நாட்டப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தாயகத்திலும் வெளிநாடுகளிலிருந்தும் கிடைத்த பலவழிகளிலான ஆதரவோடும் பல்கலைக் கழக மாணவர்களின் உணர்வு கலந்த தீவிர செயற்பாட்டோடும் தொடர்ச்சியாக இடம் பெற்ற நினைவுத் தூபி கட்டுமானப் பணிகள் நிறைவுக்கு வந்த நிலையில் இன்று வெள்ளிக்கிழமை காலை தினம் திறந்து வைக்கப்பட்டது.

அதேவேளை இன்றைய தினம் தூபி திறந்து வைக்கப்படவிருந்த நிலையில் மாணவர்களோடு திட்டமிட்டு திறப்பு விழாவை நடத்தவிருந்த நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு துணைவேந்தர் மாரடைப்பு காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு , தொடர்ந்து வைத்திய நிபுணர்களின் கண்காணிப்பின் கீழ் சிகிச்சை பெற்று வருகின்றமையால் அவர் இந்த திறப்பு விழாவில் கலந்து கொள்ள இயலவில்லை. என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.






30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

ஸ்காபுறோ

# சங்கர் அன் கோ

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

SUMMER SPECIAL கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...



உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.

இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.









காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

## SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# கொரோனா தொற்றுக் காலத்திலும் கனடாவின் 20 பெருஞ் செல்வந்தர்கள் மேலும் செல்வத்தைக் குவித்துள்ளனர்





கொரோனா தொற்றுநோயால் மில்லியன் கணக்கான கனேடியர்கள் வேலை இழந்தாலும், அவர்கள் குடும்பங்கள் தாங்கொன்னா துயரங்களில் ஆழ்ந்து போயிருந்தாலும், கனடாவில் உள்ள முதல் 20 பில்லியனர்கள் என அழைக்கப்பெறும் பெருஞ் செல்வந்தர்கள் கனேடிய வரலாற்றில் மிகவும் பொருளாதார ரீதியாக மற்றவர்களுக்கு பேரழிவு தந்த ஆறு மாதங்களில் சராசரியாக தலா 2 பில்லியன் டாலர் செல்வத்தை குவித்துள்ளனர் என கனடாவின் பொருளாதாரத் துறை சஞ்சிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த பெருஞ்செல்வந்தர்களுள் மிக அதிகமான இலாபம், தாம்சன் குடும்ப செல்வத்திற்கு (8.8 பில்லியன் டாலர் அதிகரிப்பு என மதிப்பிடப்பட்டுள்ளது), அதைத் தொடர்ந்து ஷாப்பிபியின் டோபி லுட்கே (6 6.6 பில்லியன் அதிகரிப்பு) - அமேசான் மற்றும் ஆப்பிள் போன்ற தொழில்நுட்ப நிறுவனங்களிடையே எல்லைக்கு தெற்கே மிகப்பெரிய லாபங்களை பிரதிபலிக்கிறது. வெஸ்டன் குடும்பம் மூன்றாவது இடத்தைப் பிடித்தது, லுலுலேமன் நிறுவனர் சிப் வில்சன் கிட்டத்தட்ட 3 பில்லியன் டாலர் லாபத்தைக் கண்டார்.

“லோப்லாஸ் பெரும் நிறுவனத்தின் உரிமையாளர் கேலன் வெஸ்டன் போன்ற கோடீஸ்வரர்கள் தங்கள் செல்வ பலூனைக் கண்ட அதே நேரத்தில், முன் வரிசையில் பணியாற்றும் தொழிலாளர்கள் அலமாரிகளை சேமித்து வைப்பதும், அவரது கடைகளில் மளிகை சாமான்களை ஸ்கேன் செய்வதும் தொடர்ந்து தங்கள் உடல்நலத்திற்கும், தங்கள் அன்புக்குரியவர்களுக்கும் வேலைக்கு வருவதன் மூலம் ஆபத்தை விளைவிக்கின்றன” என்று அலெக்ஸ் கூறுகிறார்.

“இந்த வகையான பெரும் நிறுவனங்களில் பணியாற்றும் முன் வரிசையில் உள்ள மளிகை கடை தொழிலாளர்கள் ஒரு மணி நேரத்திற்கு 2 டாலர் மட்டுமே மேலதிக ஊதியம் பெற்றிருக்கிறார்கள், அதே நேரத்தில் நிறுவனங்களின் உரிமையாளர்கள் பெரும் லாபம் ஈட்டினர்,” என்று அவர் கூறினார்.

ஒட்டுமொத்தமாக, கனடாவில் உள்ள தொழிலாளர்கள் நெருக்கடியின் பொருளாதார விளைவுகளைத் தொடர்ந்து சுமக்கின்றனர். சமீபத்திய தொழிலாளர் தரவுகளில், கோவிட்-19 க்கு முந்தைய நிலைகளுடன் ஒப்பிடும்போது கனடாவில் 1.1 மில்லியன் குறைவான மக்கள் பணிபுரிந்தனர், மேலும் 713,000 தொழிலாளர்கள் தொழில்நுட்ப ரீதியாக பணிபுரிந்தனர், ஆனால் தொற்றுநோயால் அவர்களின் வழக்கமான நேரங்களில் பாதி அல்லது அதற்கு மேற்பட்டவற்றை இழந்துவிட்டனர். குறைந்த ஊதிய தொழிலாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் மற்றும் புள்ளிவிவரங்கள் கனடா தரவு பெண்கள் மற்றும் குடிவரவாளர்களாக வந்த கனேடியர்கள் குறைந்த ஊதிய தொழிலாளர்களிடையே அதிகமாக பிரதிநிதித்துவம் செய்யப்படுவதைக் காட்டுகிறது.

“இந்த தொற்றுநோய் முழுவதும், “நாங்கள் அனைவரும் ஒன்றாக இருக்கிறோம்” என்று எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது, ஆனால் இது உண்மையிலிருந்து வெகு தொலைவில் உள்ளது என்பதை எங்கள் இதன் முடிவகள் காட்டுகிறன” என்று CCPA-BC ஆராய்ச்சி கூட்டாளரும் அறிக்கை இணை ஆசிரியருமான மைக்கேல் ரோஸ்வொர்க்ஸி கூறுகிறார். கனடாவின் மக்கள் தொகையில் சிறுபான்மையிரான பெருஞ்செல்வந்தர்கள் எஞ்சிய மக்களை விட மிகவும் வித்தியாசமான உலகில் வாழ்கின்றனர். அவர்கள் எப்போதும் மகிழ்ச்சியாகவே உள்ளார்கள் என்று தெரிவித்துள்ளார்.

ஹெமிங்வே மற்றும் ரோஸ்வொர்க்சி ஆகியோர் தாங்கள் பெரும் இலாபத்தைப் பெற்றாலும் ஒரு செல்வ வரிக்கு விதி விலக்கு வழங்கும் படி வேண்டுகோள் விடுக்கின்றனர், இது வரி புகலிடங்கள் மற்றும் கார்ப்பரேட் வரி சீர்திருத்தங்கள் மீதான பெரும் ஒடுக்குமுறை என்பதை கனடிய அரசு கவனிக்க வேண்டும். இவை அனைத்தும் கனடாவில் பொருளாதார நியாயத்தை அதிகரிப்பதற்கு அவசியமானவை என்று கூறுகின்றன.

“தொற்றுநோய்க்கு முன்பே, கனேடிய கோடீஸ்வரர்கள் வழக்கமான குடும்பத்தின் செல்வத்தை விட 4,500 மடங்கு அதிகமாக வைத்திருந்தனர்” என்று எழுதியுள்ள ஒரு பொருளாதார சஞ்சிகை “அவசரநிலை, ஒரு முறை அதிகப்படியான செல்வ வரி மற்றும் வருடாந்திர செல்வ வரி ஆகியவையில் தங்களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டும்” என்றும் கேட்டுள்ளார்கள்.

பொதுவாகவே கனடாவின் பெருஞ்செல்வந்தர்கடளான பில்லியனர் செல்வம் மீண்டும் அதிகரித்து நிலையில், மகிழ்ச்சியில் மிதக்க, எஞ்சிய மில்லியன் கணக்கான கனேடியர்கள் தொற்றுநோயின் தாக்கத்தாலும், மேலும் பொருளாதார விளைவுகளுடன் போராடுகிறார்கள் என்பதே இங்கு நிதர்சனமாக காணும் காட்சி என்கின்றார் கனடாவின் பல்லின பத்திரிகையாளர்கள் கழகத்தின் முக்கிய உறுப்பினர் முகர்ஜி தொம்சன்.




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%


கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# உரும்பிராயில் இயங்கும் இரசாயன உரக் கலப்பற்ற வீட்டுத் தோட்ட முகவர் நிலையத்திற்கு கனடாவின் TORONTO VOICE OF HUMANITY அமைப்பு வழங்கிய ஆதரவு

யாழ்ப்பாணம் உரும்பிராயில் இயங்கும் இரசாயன உரக் கலப்பில்லாத வீட்டுத் தோட்ட முகவர் நிலையத்திற்கு கனடாவின் TORONTO VOICE OF HUMANITY அமைப்பு வழங்கிய ஆதரவின் மூலம் யாழ்ப்பாணம் திருநெல்வேலி மற்றும் உரும்பிராய் ஆகிய பகுதிகளில் வாழும் வருமானம் குறைந்த நான்கு குடும்பங்களுக்கு இரசாயன உரக் கலப்பற்ற காய்கறிக் கன்றுகள் வழங்கப்பெற்றன. யாழ்ப்பாணம் உரும்பிராயில் சில வருடங்களுக்கு முன்னர் கனடாவில் வாழும் திரு சிவக்கொழுந்து மகேந்திரன் என்னும் அன்பர் ஆரம்பித்த இந்த இரசாயன உரக் கலப்பில்லாத வீட்டுத் தோட்ட முகவர் நிலையம் ஆயிரக்கணக்கான காய்கறிக் கன்றுகளை இயற்கைப் பசளை கொண்டு வளர்த்து மக்களுக்கு விநியோகிக்கத் தொடங்கியுள்ளது. அங்கு மிகக் குறைந்த விலைக்கே இந்தக் கன்றுகள் விற்பனை செய்யப்படுகின்றன.

கத்தரி, மிளகாய், வெண்டைக்காய், கறி மிளகாய், பாகற்காய் போன்ற பல வகை காய்கறிக் கன்று இங்கு விதை போட்டு வளர்க்கபபட்டு தற்போது விநியோகம் செய்யும் காலத்தில் உள்ளன.

இவ்வாறான கன்றுகளின் ஒரு தொகுதியை அங்குள்ள வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு வழங்கி ஆதரவு வழங்க வேண்டும் என்ற திரு சிவக்கொழுந்து மகேந்திரனின் வேண்டுகோளை ஏற்று, கனடாவில் இயங்கும் சேவை நோக்கம் கொண்ட அமைப்பான TORONTO VOICE OF HUMANITY நிறுவனம் நான்கு குடும்பங்களுக்குத் தேவையான காய்கறிக்கன்றுகளை விலை கொடுத்து வாங்கி அங்கு இடம்பெற்ற சிறிய வைபவத்தில் பயனாளிகளுக்கு கையளிக்கப்பெற்றன. இந்த காய்கறிக் கன்றுகளுக்குரிய கட்டணத்தை TORONTO VOICE OF HUMANITY அமைப்பிற்கு கனடாவில் வழங்கியவர் திரு வாசன் பரமேஸ் என்னும் கணக்காளர் ஆவார்.






அண்மையில் நடைபெற்ற இந்த வைபவத்தை மேற்படி இரசாயன உரக் கலப்பில்லாத வீட்டுத் தோட்ட முகவர் நிலையத்தில் மேற்பார்வையாளர்களாகப் பணியாற்றும் சுதர்சன் மற்றும் விமல் ஆகியோர் ஏற்பாடு செய்தனர். அங்கு சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு ஆசியுரை வழங்கிய அருட்தந்தை ஜனகன் மற்றும் அருட்தந்தை ஜோன் போல் ஆகியோர் கனடா வாழ் அன்பர் திரு சிவக்கொழுந்து மகேந்திரனின் சேவை நோக்கத்தையும், மற்றும் TORONTO VOICE OF HUMANITY மனித நேய அமைப்பின் சமூக அக்கறையையும் அன்பளிப்பை வழங்கிய கனடாவைச் சேர்ந்த கணக்காளர் வாசன் பரமேஸ் அவர்களின் தாராள எண்ணத்தையும் பாராட்டி உரையாற்றினார்கள்.

இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும். இதே போன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் எந்த ஒரு கிராமத்திலும் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு இவ்வாறான காய்கறிக் கன்றுகளை இலவசமாக வழங்க உதவி புரிய எண்ணும் அன்பர்கள் திரு சிவக்கொழுந்து மகேந்திரனை (437) 335-5424 என்னும் இலக்கத்திலும் அல்லது TORONTO VOICE OF HUMANITY அமைப்பின் இயக்குனர் சபை உறுப்பினர்களை (416) 732-1608 அல்லது (416) 270-4343 ஆகிய இலக்கங்களிலும் தொடர்பு கொள்ளவும்.







MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்ளது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:

வசந்தி சிவராஜா - 416-616-3077




No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York



# கொரோனா தடுப்பூசி குறித்த வதந்திகள்... சந்தேகங்கள்... மருத்துவ நிபுணரின் விரிவான விளக்கம்

- மணிராஜ், திருநெல்வேலி

**கோ**விட்-19 எனப்படும் கொரோனாவின் இரண்டாம் அலை இந்தியாவை புரட்டி எடுத்து வருகிறது. தினம் தினம் பாதிப்பு எண்ணிக்கை எகிறுகிறது. மரணங்களும் அதிகரித்த வண்ணம் உள்ளன.

கொரோனாவில் இருந்து தப்புவதற்கு மருத்துவ ரீதியாக இருக்கும் ஒரே வழி தடுப்பூசி தான். வழக்கமாக, ஒரு தடுப்பூசியை தயாரித்து பயன்பாட்டுக்கு கொண்டு வர 5 முதல் 10 வருடங்கள் தேவைப்படும். குறைந்தது 7 வருடங்களாவது தொடர்ச்சியான பரிசோதனைகள் நடத்தப்பட்டால் தான் அதன் சாதக பாதகங்கள் முழுமையாகத் தெரியவந்து, பரிபூரண தடுப்பூசி கிடைக்கும்.

ஆனால் கடந்த ஆண்டு பரவத்தொடங்கிய கொரோனா ஏற்படுத்திய விளைவுகளால் உலகமே முடங்கி விட்டது. ஒன்று கொரோனாவால் சாகவேண்டும். அல்லது பட்டினியால் சாகவேண்டும் என்கின்ற அளவுக்கு மருத்துவ உலகமும் திணறியது பொருளாதாரமும் சீர்குலைந்தது.

ஓராண்டில் வந்த தடுப்பூசிகள்:

ஆகவே தடுப்பூசி பரிசோதனைகள் அதிவேகமாக முடுக்கி விடப்பட்டன. உலகம் முழுவதும் மருத்துவ அறிவியல் வல்லுநர்கள் இரவு-பகலாக ஆராய்ச்சிகளை முடுக்கி விட்டு தடுப்பூசிகளை கண்டுபிடித்து ஓராண்டுக்குள்ளாகவே பயன்பாட்டுக்கு கொண்டு வந்தனர்.

அந்த வகையில் ரஷியாவின் ஸ்புட்னிக்-வி தடுப்பூசி முதலில் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது. அடுத்து, பைசர் பயோஎன்டெக், மாடர்னா, ஜான்சன் அண்ட் ஜான்சன் உள்ளிட்ட தடுப்பூசிகள் வெளிவந்தன.

இந்தியாவில் கோவிஷீல்டு, கோவாக்சின் தடுப்பூசிகள் பயன்பாட்டுக்கு வந்தன. இவற்றில், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் & ஆஸ்ட்ராஜெனிகா கண்டுபிடிப்பான கோவிஷீல்டை புனேயின் சீரம் இன்ஸ்டிடியூட் உற்பத்தி செய்து சந்தைப்படுத்தி வருகிறது. கோவாக்சின் என்பது முழுக்க முழுக்க இந்திய கண்டுபிடிப்பு. ஐதராபாத் பாரத் பயோடெக்கும், இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலும் இணைந்து கண்டுபிடித்த இத்தடுப்பு மருந்து 80 சதவீதத்திற்கு மேல் செயல்திறன் கொண்டது என அறிவிக்கப்பட்டுள்ளது.




இந்தியாவின் தடுப்பூசித்திட்டம்:

இந்தியாவில் இவ்விரு தடுப்பூசிகளும் கடந்த ஜனவரி 16ம் தேதி முதல் போடப்பட்டு வருகின்றன. முதலில் மருத்துவர்கள், முன்களப்பணியாளர்களுக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன. 2வது கட்டமாக 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், 45 வயதுக்கு மேற்பட்ட இணை நோய் உள்ளவர்களுக்கும் தடுப்பூசி போடப்பட்டது.

இந்த நிலையில் தான் இந்தியாவில் 2வது கொரோனா அலை தீவிரமாகத் தாக்கத் தொடங்கியது. இதையடுத்து 45 வயது நிரம்பிய அனைவருக்கும் தடுப்பூசி போடும் நடவடிக்கைகள் தொடங்கின. ஆரம்பத்தில் தடுப்பூசி போட்டுக்கொள்ள பயந்தவர்களும் இப்போது தடுப்பூசி எடுத்துக்கொள்ள முன்வந்துள்ள நிலையில் நாடு முழுவதும் தடுப்பூசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டது. ஆனாலும், கொரோனா பரவலை எப்படியும் கட்டுப்படுத்திட வேண்டும் என்பதால், மே 1ம் தேதி முதல் 18 வயது பூர்த்தியானவர்களுக்கும் தடுப்பூசி செலுத்தப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

மக்களைக் குழப்பும் வதந்திகள்:

இவ்வாறு தடுப்பூசி மூலமே கொரோனாவில் இருந்து நம்மைத் தற்காத்துக்கொள்ள முடியும் என்று மக்களில் பலரும் நம்பும் நிலையில் தடுப்பூசிக்கு எதிராக வதந்திகளைக் கிளப்பும் ஒரு கும்பல், மக்களை குழப்பி வருகிறது. தடுப்பூசிகள் பின்விளைவுகளை ஏற்படுத்துமாம், ரத்தம் உறையுமாம் என்றெல்லாம் வதந்திகள் வலம் வருகின்றன. இதற்கு தடுப்பூசி நிபுணரான டாக்டர் சேகர் அளித்துள்ள விரிவான விளக்கத்தை இங்கே காணலாம்.

கோவிட்-19 நோயைத் தடுப்பதில் தற்போது இந்தியாவில் கிடைக்கும் கோவாக்சின், கோவிஷீல்டு ஆகிய இரண்டு தடுப்பூசிகளுமே கிட்டத்தட்ட சமமான அளவில் திறன்கொண்டவைதான். தற்போதுவரை கிடைத்துள்ள ஆய்வு முடிவுகளின்படி கோவிஷீல்ட் 70 சதவீத திறனும் கோவாக்சின் 80 சதவீத திறனும் உடையவை. தரவுகளின்படி இரண்டுமே பாதுகாப்பானவை, திறன் மிக்கவை.

மூன்று டோஸ் தேவையில்லை:

இரண்டு முறை இந்தத் தடுப்பூசிகளைப் போட்டுக்கொண்டால் 70 சதவீதம், 80 சதவீதம் என பாதுகாப்பு கிடைக்கும்போது, மூன்று முறை போட்டுக்கொண்டால் முழுமையான பாதுகாப்பு கிடைக்குமா என்று கேள்வி எழலாம்.

இரண்டு டோஸ் தடுப்பூசிகள் கண்டிப்பாக கொடுத்தாக வேண்டும். முதல் தடுப்பூசி என்பது உணர்திறனுக்காக கொடுக்கப்படுவது. அதாவது வைரசை நம் உடலுக்கு அடையாளம் காட்டுவது. இரண்டாவது தடுப்பூசி பூஸ்டர் டோஸ் ஆகும். இந்த பூஸ்டர் டோஸ் கொடுக்கும்போதுதான் "தடுப்பு சக்தி" சரியான அளவில் இருக்கும். ஆகவே இரண்டு தடுப்பூசிகளே போதும். இந்த இரண்டு தடுப்பூசிகளை அளிக்கவே உலக அளவில் பெரும் தேவை நிலவுகிறது. தேவைக்கேற்ற உற்பத்தி இல்லை. இரண்டுக்கு மேல் தடுப்பூசி கொடுக்க வேண்டிய அவசியம் இப்போது இல்லை.


பொதுவான பக்க விளைவுகள்:

இந்த இரண்டு தடுப்பூசிகளுக்குமே "க்ளினிக்கல் ட்ரையல்" செய்யப்பட்டிருக்கிறது. அந்த சோதனைகளில் இருந்து கிடைத்த முடிவுகள் நல்ல முறையில் இருக்கின்றன. எல்லா தடுப்பூசிகளுக்கும் பின்விளைவுகள் இருக்கும். வலி இருக்கலாம். ஊசி போட்ட இடத்தில் சிவப்பாகலாம். சிலருக்கு காய்ச்சல் வரலாம். சிலருக்கு களைப்பு ஏற்படும். இதுபோன்ற பின்விளைவுகள் எல்லா தடுப்புசிகளுக்கும் இருக்கும். அது போன்ற சிறு சிறு பக்கவிளைவுகள்தான் இந்த ஊசிகளுக்கும் ஏற்படும். பெரிய பாதிப்புகள் ஏற்படாது. இந்த இரண்டு ஊசிகளுமே பாதுகாப்பானவைதான்.

தடுப்பூசிகளின் உருவாக்கம் எப்படி?

இரண்டு தடுப்பூசிகளும் செயல்படும் விதத்தில் வேறுபாடு உண்டு. கோவிஷீல்டு, வைரல் வெக்டர் (Viral vector) அடிப்படையிலானது. கோவிட் வைரசின் மேல் பகுதியில் முள் போன்ற ஸ்பைக் புரோட்டீன்கள் (Spike proteins) இருக்கும். இந்த முள் போன்ற பகுதிகளின் மூலமாகத்தான் இது செல்களைத் தொற்றும். ஒரு செல்லைத் தொற்றிய பிறகு, அங்கு பல்கிப் பெருகும். இப்படி செல்லுக்குள் நுழைய இந்த முள் போன்ற புரோட்டீன் மிக முக்கியம். கோவிஷீல்டைப் பொறுத்தவரை, இந்த முள் போன்ற புரோட்டீனுக்கான மரபணுவைப் பிரித்தெடுத்து, அதனை சிம்பன்சி குரங்குகளில் காணப்படும் வைரஸ்களில் செலுத்தி, அந்த வைரஸ் நம் உடலில் செலுத்தப்படுகிறது. இந்த வைரஸ் நம்மை ஒன்றும் செய்யாது.

இந்த வைரஸ் உள்ளே சென்று இந்த முள் போன்ற புரொட்டீனுக்கான ஆன்டிஜனை (Antigen) உற்பத்தி செய்து செல்லின் மேற்புறமாக வைக்கும். இதனை ஜீன் மனிபுலேசன் (Gene manipulation) முறை என்பார்கள். இது மிகவும் புதிய முறை.



மற்றொன்று பாரம்பரியமான முறை. அதாவது செயலிழக்கச் செய்யப்பட்ட வைரசை உடலில் செலுத்துவது. ரேபிஸ் தடுப்பூசி, ஊசி மூலம் செலுத்தப்படும் போலியோ தடுப்பு மருந்து போன்றவை இந்த முறையில் தயாரிக்கப்படுபவைதான்.

இதற்கு, அந்த வைரஸ் வளர்த்தெடுக்கப்பட்டு, பிறகு செயலிழக்கச் செய்யப்படும். அதாவது பீட்டா - புரோபியோ லேக்டோன் என்ற ரசாயனத்தைப் பயன்படுத்தி செயலிழக்கச் செய்யப்படும். ஆனால், உடலில் எதிர்ப்பு சக்தியை உருவாக்கக்கூடிய ஆன்டிஜென் அதன் மீது இருக்கும். இதன் மூலம் நோய் உருவாவது தடுக்கப்படும். இந்த முறையில்தான் கோவாக்சின் உருவாக்கப்பட்டிருக்கிறது.

உருமாறிய கொரோனா:

பல்வேறு விதமான திரிபுகளில் கொரோனா பரவுவதாக தகவல்கள் வருகின்றன. இப்போதுதான் நாம் பல்வேறு விதமான வைரஸ்கள் குறித்துப் பார்க்கிறோம். உதாரணமாக இன்ப்ளுயென்ஸா காய்ச்சலை எடுத்துக்கொள்வோம். இந்தக் காய்ச்சலைத் தடுக்க நாம் எந்தத் தடுப்பூசியும் போட்டுக்கொள்வதில்லை. ஆனால், மேலை நாடுகளில் பருவம் சார்ந்த இன்ப்ளுயன்சாவைத் தடுக்க தடுப்பூசிகளைப் போட்டுக்கொள்கிறார்கள். அந்த வைரஸ் கண்டிப்பாக உருமாற்றம் அடையும். ஆர்என்ஏ அடிப்படையிலான எல்லா வைரஸ்களுமே உருமாற்றம் அடையும். ஆனால், எல்லா மாற்றங்களுமே பாதிப்பை ஏற்படுத்தும் என அர்த்தமில்லை.

கோவிட் வைரசைப் பொறுத்தவரை, பிரிட்டன் வகை, பிரேசில் வகை, தென்னாப்பிரிக்க வகை, இப்போது இந்தியாவில் இரண்டு முறை மாற்றமடைந்த வகை என்றெல்லாம் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்த எல்லா வகைகளையும் ஒரே தடுப்பு மருந்து தடுக்குமா என்பது குறித்த தகவல்கள் நம்மிடம் மிகக் குறைவாகவே இருக்கின்றன. இப்போது கிடைத்திருக்கும் தகவல்களைப் பொறுத்தவரை, இந்த மாற்றங்களால், தடுப்பூசி செயல்படும் விதத்தில் எந்த பாதிப்பும் இருக்காது என்றுதான் சொல்லப்படுகிறது. ஆனால், இது தொடர்பான தகவல்கள், தரவுகள் தொடர்ந்து வரவேண்டும். அப்போதுதான் முழுமையாக சொல்ல முடியும். இந்தத் தடுப்பூசிகளால் நீண்ட கால பின்விளைவுகள் வருமாக என்பது குறித்து உறுதியாகச் சொல்வதற்கு நம்மிடம் தரவுகள் கிடையாது. இந்தத் தடுப்பூசிகள் தயாரிக்கப்பட்டு, உடனடியாக புழக்கத்திற்கு வந்திருக்கின்றன. ஆனால், குறைந்த காலத்தில் கிடைத்த தரவுகளை வைத்துப்பார்க்கும்போது, இதனால் பெரிய அளவில் பக்க விளைவுகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு இல்லை.


இணை நோய்கள், குறிப்பாக இருதய நோய்கள், சிறுநீரக நோய்கள் கொண்டவர்கள் தாராளமாக இந்த ஊசிகளைப் போட்டுக்கொள்ளலாம். இணை நோய் உள்ளவர்கள் இந்த தடுப்பூசிகளைப் போட்டுக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு கொரோனா தொற்றினால் மரணத்திற்கான வாய்ப்பு அதிகம். ஆகவே கண்டிப்பாக தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு இந்த ஊசி பாதுகாப்பானதுதான்.

இந்தியாவில் 12.38 கோடி பேருக்கு தடுப்பூசி:

சில தடுப்பூசி வகைகள், ரத்த உறைதலை உருவாக்குவதற்கான வாய்ப்பு மிகக் குறைவு. கோவீல்டும் கோவாக்சினும் உலகம் முழுவதும் பல கோடிப் பேருக்குப் போடப்பட்டிருக்கிறது. இந்தியாவில் கிட்டத்தட்ட 12.38 கோடி பேருக்கு மேல் முதல் தடுப்பூசி போடப்பட்டு விட்டது. அதில் 9 கோடிக்கும் மேல் கோவிஷீல்ட் தடுப்பூசிதான் போடப்பட்டிருக்கிறது. (உலக அளவில் 89 கோடி பேருக்கு இதுவரை தடுப்பூசி போடப்பட்டு இருக்கிறது).

தடுப்பூசியால் ரத்த உறைவு ஏற்பட்டு இறந்துபோகும் அளவு என்பது மிக, மிகக் குறைவு. இந்த ஊசியால்தான் இப்படி நேர்ந்தது என்பதற்கான நேரடி ஆதாரம் ஏதும் இதுவரை கிடைக்கவில்லை. மேலை நாடுகளிலும்கூட அதற்கு சரியான ஆதாரம் ஏதும் இல்லை. இப்படி சரியான ஆதாரமில்லாத, ஒரு இடரை மனதில்வைத்து, இதிலிருந்து கிடைக்கக்கூடிய பெரும் பலன்களை விட்டுவிடக்கூடாது. இந்த தடுப்பூசிகள் பல கோடிப் பேரைக் காப்பாற்றக்கூடியவை.

நடிகர் விவேக்கின் மரணம் ஏன்?



இவ்வாறு விளக்கமளித்த டாக்டரிடம், "தடுப்பூசி போட்டு சில மணி நேரத்தில் ஒருவர் இருதய நோயால் பாதிக்கப்பட்டு இறந்தால், பிரேதப் பரிசோதனை செய்து தகுந்த காரணத்தைக் கண்டுபிடிப்பது சாத்தியமா?" என்று கேட்கப்பட்டது. நடிகர் விவேக்கின் மரணத்தைப்பற்றிய மறைமுகமான இந்தக் கேள்விக்கு டாக்டர் பதில் அளிக்கும்போது, "ஒருவரது மரணத்திற்கான காரணத்தை பிரேதப் பரிசோதனையில் கண்டுபிடிக்க முடியும். அப்படி பிரேத பரிசோதனை செய்தால்தான் மரணத்தின் காரணம் தெரியும் என்றால் கண்டிப்பாக செய்திருப்பார்கள். நடிகர் விவேக்கின் மரணத்தைப் பொறுத்தவரை, சுகாதாரத்துறை செயலரே, தடுப்பூசி காரணமில்லை என்று சொல்லி விட்டார். அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரும் அதையே சொன்னார். இவர்களுக்கு சந்தேகம் எழுந்திருந்தால், நிச்சயமாக பிரேதப் பரிசோதனை செய்திருப்பார்கள். விவேக்கின் மரணம் நிச்சயம் வருத்தத்திற்கு உரியது. ஆனால், அவருடைய மரணத்திற்கும் இந்தத் தடுப்பூசிக்கும் எந்த தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை" என்று தெரிவித்தார்.

# ஐ.நா தீர்மானம் கொண்டாடத்தக்கதா?

**- தீபச்செல்வன்**

ஸ்ரீலங்கா அரசால் ஈழ மண்ணில் நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைப் போர் குறித்த தீர்மானம் கடந்த 23 ஆம் திகதி ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது. இலங்கையில், அனைத்து மக்களின் நல்லிணக்கத்திற்கும், மனித உரிமைகளுக்கும் ஸ்ரீலங்கா அரசே பொறுப்பேற்க வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ள குறித்த தீர்மானம், "இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, பாரபட்சமற்ற முறையில், நேர்மையான விசாரணை நடத்த வேண்டும் என்றும் பரிந்துரை செய்கின்ற விதமாக அமைந்தது. இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானம் என்ற வகையில் இது நிறைவேற்றப்பட்டாலும் இதில் ஈழத் தமிழ் மக்களின் கோரிக்கைகள் எந்தளவுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்பதே முக்கியமானது.

ஐக்கிய நாடுகள் சபையில் இதுவரையில் ஸ்ரீலங்கா அரசின் போர்க்குற்றங்களை விசாரிக்க வேண்டும் என்ற அடிப்படையில், மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. குறிப்பாக ஸ்ரீலங்காவில் நடைபெற்ற ஆட்சி மாற்றங்களினால் இந்த தீர்மானங்கள் கால ஓட்டத்தில் தோல்வியை அடைந்திருக்கின்றன. இந்த நிலையில் 2021ஆம் ஆண்டில் மார்ச் 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ஜெனீவா மனித உரிமை பேரவையில் பிரித்தானியா தலைமையிலான நாடுகளினால் ஸ்ரீலங்கா அரசு தொடர்பான தீர்மானம் கொண்டுவரப்பட்டது. 47 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐ.நா சபையில் இத் தீர்மானத்தை 22 நாடுகள் ஆதரித்து வாக்களித்துள்ளன. அத்துடன் 11 நாடுகள் எதிர்த்து வாக்களித்துள்ளன.

அத்துடன் 14 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்திருக்கின்றன. இலங்கையில் பொறுப்புக்கூறலை ஏற்படுத்த வேண்டும் என்றும் நல்லிணக்கத்தை மீள கொண்டு வரவேண்டும் என்றும் கருதியே தீர்மானத்தை கொண்டு வந்திருப்பதாக பிரிட்டன் கூறுகிறது. எனினும் இந்த தீர்மானம் தம்மீதான அத்துமீறிய அரசியல் தலையீடாகவும் இதனை கடுமையாக எதிர்ப்பதாகவும் ஸ்ரீலங்கா அரசு கூறியிருக்கிறது. அத்துடன் சீனாவும் ரஷ்யாவும் இந்த தீர்மானத்தை கடுமையாக எதிர்த்திருந்தது. மனித உரிமைகளை பாதுகாப்பதிலும் பொறுப்புக்கூறலிலும் இலங்கையின் ஈடுபாட்டை தாம் வரவேற்பதாக பாக்கிஸ்தான் கூறியிருந்தது.

தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் இலங்கை தொடர்பில் இந்தியாவுக்கு இரட்டை நிலைப்பாடு உள்ளது என்றும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத இந்தியா தன்னுடைய நிலைப்பாட்டை அறிவித்திருந்தது. இந்த நிலையில் ஜெனீவா தீர்மானத்தில் ஈழத் தமிழ் மக்கள் வலியுறுத்திய முக்கிய விடயங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அவை ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்சத்திலேயே அது நாம் கொண்டாடத்தக்க ஒரு தீர்மானமா என்பதை அறிந்து கொள்ள முடியும். ஸ்ரீலங்கா அரசு தீர்மானத்தை எதிர்ப்பதனால் மாத்திரம், அது நமக்கு ஆதரவான, பலன் தருகின்ற தீர்மானம் ஆகிவிடாது.

தமிழீழத்தை எதிர்க்கின்ற ஸ்ரீலங்கா அரசு, 13 ஆவது திருத்தச் சட்டத்தையும் கடுமையாக எதிர்க்கின்றது. அதனை நடைமுறைப்படுத்துவதில் கடந்த காலத்தில் ஏற்பட்ட தோல்வியும் அது தொடர்பில் இன்றைய ஆட்சியாளர்கள் விடுக்கின்ற கதைகளும் இதற்கு நல்ல வெளிப்பாடு. இதேபோலவே ஸ்ரீலங்கா அரசாங்கம், ஜெனீவாவின் தீர்மானத்தையும் அணுகுகிறது. அதாவது பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் என்ற விடயத்தில் உள்ளக விசாரணையை நடத்துங்கள் என்று ஸ்ரீலங்கா அரசுக்கு ஐ.நா அவை கூறுவது கூட ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாக இருக்கிறது என்றால், ஈழத் தமிழ் மக்களின் கோரிக்கைகள் எந்தளவுக்கு புறக்கணிக்கப்படுகின்றது என்பதையும் நாம் உணர வேண்டும்.

அதேபோல ஐ.நா கூறுகின்ற எதையும் ஏற்றுக்கொள்ளாத அரசினை வைத்து, இந்த பன்னாட்டு சமூகம் எதனை சாதிக்கப் போகின்றது என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள முடியும். குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபை அறிக்கையின் முன் வரைபு வெளியான சமயத்தில், தமிழ் தலைமைகளும் போராடும் மக்களும் சில பரிந்துரைகளை முன் வைத்து போராட்டங்களையும் நடாத்தி இருந்தார்கள். குறிப்பாக ஈழத்தில் இருந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் முன் வைத்த கோரிக்கையும் இங்கே நினைவுபடுத்தத்தக்கது. காணாமல் போனோர் விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டும் என்ற அவர்களின் கோரிக்கையும் ஐ.நா சபையால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

அது மாத்திரமின்றி ஈழத்தில் நடந்தது இனப்படுகொலை என வடக்கு மாகாண சபையும் தமிழ்நாடு சட்டமன்றமும் தீர்மானங்களை இயற்றியிருந்தன. இரண்டு பொதுமக்களின் சபைகளினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் கருத்தில் கொள்ள வேண்டியது ஐ.நாவின் பொறுப்பாகும். அத்துடன் இனப்படுகொலைக்காக சர்வதேச விசாரணை நடாத்த வேண்டும், ஸ்ரீலங்கா அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும் என்பதையும் வலியுறுத்தப்பட்ட நிலையில், ஐ.நாவின் தீர்மானம் ஸ்ரீலங்கா அரசை மயிலிறகால் தடவும் வகையில் அமைந்துள்ளது. ஸ்ரீலங்கா அரசுக்கும் அது இழைத்த கொடுமைகளுக்கும் அது தொடர்பானவர்களும் பங்கம் விளைவிக்காத வகையிலேயே இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆனால் இந்த தீர்மானத்தை ஈழத் தமிழ் மக்கள் எதிர்க்க வேண்டும் என பொருள் கொள்ள வேண்டியதல்ல. இனப்படுகொலைக்கான நீதிக்கான செயற்பாட்டில் இன்னும் வெகுதூரம் செல்ல வேண்டும், பெரும் படிகளை ஏறி மதிக்க வேண்டும் என்பதை நாம் மறக்க கூடாது. உண்மையில் இத் தீர்மானம், இனப்படுகொலைக்கான நீதி தமதிக்கப்படுகிறதே தவிர, ஒருபோதும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை பெற்றுக்கொடுக்காது. இந்த தீர்மானம் ஸ்ரீலங்கா அரசுக்கு சார்பானதாகவே இருக்கிறது. ஏனெனில் தமிழர்களின் கோரிக்கையை முற்றாக நிராகரித்திருக்கிறது.

ஐ.நா அறிக்கையில் 16 சரத்துக்கள் அல்லது விடயதானங்கள் காணப்படுகின்றன. அவற்றில் சில ஸ்ரீலங்கா அரசை பாராட்டும் விதமாகவும் அமைந்திருப்பதுடன் விடுதலைப் புலிகள் தொடர்பான எதிரான அல்லது தவறான புரிதல்களை கொண்டவையாகவும் இருக்கின்றன. இந்த நிலையில் நடைமுறை பந்தி 6இல் சாட்சியங்களை சேகரிப்பதற்கான ஒழுங்கு குறித்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த காலங்களில்கூட ஐ.நா அறிக்கைகளில் மாத்திரமின்றி, இலங்கை அரசின் ஆணைக்குழுக்களின் அறிக்கைளில்கூட இடம்பெற்றதாகவும் அதனால் இலங்கை இனப்படுகொலைக்கான நீதியை பெறுகின்ற எந்தவொரு முன்னேற்றமும் நடக்கவில்லை என்றும் சொல்லப்படுகிறது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்த வேண்டும் என்பது தமிழர்களின் கோரிக்கை உள்ளக விசாரணையை ஒருபோதும் பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்றுக்கொள்ளக்வில்லை. ஏனெனில் உள்ளக விசாரணையை ஸ்ரீலங்கா அரசு ஏற்கவும் இல்லை. நடைமுறைப்படுத்தவும் இல்லை. ஐ.நா மனித உரிமை பேரவையை ஸ்ரீலங்கா அரசாங்கம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாத நிலையில் எவ்வாறு உள்ளக விசாரணையை ஐ.நாவால் நடத்துவிக்க முடியும்? அப்படிப் பார்கின்ற போது ஐ.நாவில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதாக கூறப்படும் தீர்மானம், ஐ.நாவுக்கும் ஈழத் தமிழ் மக்களுக்கும் தோல்வியாகவே இருக்கிறது.

இத்தகைய ஒரு தீர்மானத்தை ஈழத் தமிழர்கள் ஒருபோதும் கொண்டாட முடியாது. இனப்படுகொலைக்கான நீதி என்பது களியாட்டத்திற்கும் கொண்டாட்டத்திற்கும் உரியதல்ல. அந்த வழிமுறைகளாலும் அதனை பெற்றுவிட முடியாது. அதற்கேற்ப ஈழத் தமிழினம் போராட வேண்டிய பொறுப்பை கொண்டிருக்கிறது. உலகத் தமிழர்கள் ஆதரிக்க வேண்டிய நியாயத்திலும் உறவிலும் உள்ளனர்.





# ஸ்டெர்லைட் எதிர்ப்பு ஊர்வலம் தொடர்பாக ஆவணங்களோ, ஆதாரங்களோ இல்லை:

## ஒருநபர் ஆணையத்தில் ரஜினி தகவல்

தூத்துக்குடியில் நடைபெற்ற ஸ்டெர்லைட் எதிர்ப்பு ஊர்வலம் தொடர்பாக ஆவணங்களோ, ஆதாரங்களோ தன்னிடம் இல்லை என நடிகர் ரஜினிகாந்த், ஒருநபர் ஆணையத்திடம் எழுத்துபூர்வமாக தெரிவித்துள்ளார்.தூத்துக்குடியில் கடந்த 2018ம்ஆண்டு மே மாதம் 22ம் தேதி நடைபெற்ற துப்பாக்கி சூடு, தடியடிமற்றும் தொடர்ந்து நடந்த சம்பவங்களில் 13 பேர் பலியானார்கள். இதுதொடர்பாக, விசாரணை நடத்துவதற்காக, உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஒருநபர் விசாரணை ஆணையத்தை தமிழக அரசு அமைத்தது.

கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்கள், போராட்டத்தில் பங்கேற்றவர்கள், வழக்கறிஞர்கள், பத்திரிகையாளர்கள், அரசு அலுவலர்கள், தீயணைப்பு வீரர்கள் ஆகியோரிடம், 26 கட்டங்களாக விசாரணை நடத்தி வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. 27வதுகட்ட விசாரணை தூத்துக்குடியில் நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் கடந்த 19 ம்தேதி முதல் நடைபெற்றது. இதுகுறித்து, ஆணையத்தின் வழக்கறிஞர் அருள்வடிவேல் சேகர் கூறியதாவது:ஆணையம் சார்பில் இதுவரை1,052 பேருக்கு சம்மன் அனுப்பப்பட்டது. அதில், 719 பேர்



சாட்சியம் அளித்துள்ளனர். 1,126 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. தற்போது நடைபெறும் 27வதுகட்ட விசாரணையில் 48 பேர் சாட்சியம் அளித்துள்ளனர். இந்த வழக்கை விசாரித்து வரும் சிபிஐ சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிகையில் குற்றம் சாட்டப்பட்ட 72 பேரிடமும் விசாரித்துள்ளோம். அடுத்தகட்ட விசாரணை மே 17 முதல் 5 நாட்கள் நடைபெறும். அப்போது, பாதுகாப்பில் இருந்த காவல் துறையினர், காயமடைந்த காவல் துறையினர் சாட்சியம் அளிக்கவுள்ளனர்.

தொடர்ந்து ஸ்டெர்லைட் குடியிருப்பில் வசித்தவர்கள், ஸ்டெர்லைட் ஊழியர்கள், அப்போதைய காவல் துறைகண்காணிப்பாளர், மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் விசாரிக்கப்படவுள்ளனர். நடிகர் ரஜினிகாந்துக்கு, ஆணையம் சார்பில் கேள்விகள் எழுத்துபூர்வமாக வழங்கப்பட்டது. அதற்குரஜினிகாந்த் பதிலளித்து, சமர்ப்பித்துள்ளார். அதில், தூத்துக்குடியில் அன்றைய தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பு, திட்டமிட்ட சந்திப்பு அல்ல. அது எதிர்பாராத, தற்செயலாக நடந்த பத்திரிகையாளர் சந்திப்பு. எனவே, அந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில் நான் திட்டமிட்டு எதுவும் சொல்லவில்லை.

தூத்துக்குடியில் ஊர்வலம் தொடர்பாக எந்த ஆவணங்களோ, ஆதாரங்களோ, பத்திரிகை மற்றும் ஊடக பதிவுகளோ தன்னிடம் இல்லை என்று ரஜினி கூறியுள்ளார்.இருப்பினும் சில விளக்கங்களை அவரிடம் கேட்க வேண்டியுள்ளது. கரோனா நிலைமை சீரானதும், ஆணையத்தின் சில சந்தேகங்களையும், அவர் அளித்த பதில்கள் தொடர்பாக சில விளக்கங்களையும் ரஜினியிடம் கேட்கவுள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

# மருத்துவமனைகளில் படுக்கைகள் இல்லாததால் சிகிச்சை பெற முடியாமல் நோயாளிகள் அவதி; தமிழகத்தில் படுதீவிரமாக பரவுகிறது கரோனா: தினசரி பாதிப்பு 12 ஆயிரத்தை கடந்தது

பணிச் சுமையால் மருத்துவர்கள், சுகாதார ஊழியர்கள் பரிதவிப்புதமிழகத்தில் கரோனா தொற்று பரவல் படுதீவிரமாகி வருகிறது. தினசரி பாதிப்பு 12 ஆயிரத்தை கடந்துள்ளது. மருத்துவமனைகளில் படுக்கைகள் நிரம்பி வழிவதால்புதிதாக தொற்றால் பாதிக்கப்படுபவர்கள் சிகிச்சை பெற முடியாமல் அவதிப்பட்டு வருகின்றனர். நோயாளிகள் அதிகரிப்பால் மருத்துவர்களும் சுகாதார ஊழியர்களும் பணிச் சுமையால் பரிதவிக்கின்றனர். தமிழகத்தில் கடந்த மார்ச் மாதம் தொடங்கிய கரோனா தொற்றின் 2வது அலை அதிவேகமாகப் பரவி வருகிறது. தினசரி பாதிப்பு12 ஆயிரத்தை கடந்துள்ளது. உயிரிழப்பும் 60ஐ நெருங்கியுள்ளது. தொற்றால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதால் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் படுக்கைகள் நிரம்பி வருகின்றன. சென்னையில் அரசு, தனியார் மருத்துவமனைகள் கரோனா நோயாளிகளால் நிரம்பி வழிகின்றன.

பெரும்பாலான மருத்துவமனைகளில் படுக்கைகள் இல்லாததால், புதிதாக தொற்றால் பாதிக்கப்படுபவர்கள் சிகிச்சை பெற முடியாமல் அவதிப்பட்டு வருகின்றனர்.லேசான மற்றும் அறிகுறிகள் இல்லாத தொற்று பாதிப்புள்ளவர்கள் கண்காணிப்பு மையங்களுக்கும், வீட்டு கண்காணிப்புக்கும் அனுப்பப்படுகின்றனர். மூச்சுத் திணறல், கடுமையான நுரையீரல் பாதிப்பு உள்ளவர்களை மட்டும் அனுமதித்து சிகிச்சை அளிக்கின்றனர்.கரோனா பரிசோதனையில் தொற்று பாதிப்பு உறுதியானதும் ஏராளமானோர் சென்னை ஓமந்தூரார் அரசு மருத்துவமனை, கிண்டிஅரசு கரோனா மருத்துவமனை உள்ளிட்ட அரசு மருத்துவமனைகளுக்குத்தான் வருகின்றனர். படுக்கைகள் இல்லாததால், பரிசோதனை முடிவு மற்றும் நுரையீரல் ஸ்கேனைபார்த்துவிட்டு ஓரளவு பாதிப்பு இருப்பவர்களை வீட்டு கண்காணிப்பில் இருக்கும்படி கூறி அனுப்புகின்றனர். தொற்றின் தீவிரத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆக்சிஜன் கொடுத்து உட்கார வைத்துவிட்டு, சுகாதாரத்துறை அதிகாரிகளின் உதவியுடன் எங்குபடுக்கை காலியாக இருக்கிறதோ அங்கு ஆம்புலன்ஸ் மூலம் அவர்களை அனுப்பி வைக்கின்றனர்.

புதிதாக 12,652 பேர்இந்நிலையில், தமிழகத்தில் நேற்று புதிதாக 12 ஆயிரத்து 652 பேர்கரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து சுகாதாரத்துறைவெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:தமிழகத்தில் நேற்று ஆண்கள் 7,583, பெண்கள் 5,067, மூன்றாம் பாலினத்தவர் 2 பேர்என மொத்தம் 12,652 பேர் கரோனா வைரஸ் தொற்றால்பாதிக்கப்பட்டனர். வெளிமாநிலங்களில் இருந்து தமிழகம் வந்த 36 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளது. அதிகபட்சமாக சென்னையில் 3,789, செங்கல்பட்டில் 906, கோவையில் 689, திருவள்ளூரில் 510, மதுரையில் 495, திருநெல்வேலியில் 449,சேலத்தில் 411, காஞ்சிபுரத்தில் 392, திருச்சியில் 359, தூத்துக்குடியில் 354 பேருக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது.இதன்மூலம் தமிழகத்தில் பாதிப்பு எண்ணிக்கை 10 லட்சத்து 37,711 ஆக அதிகரித்துள்ளது. இதுவரை தமிழகம் முழுவதும் 9 லட்சத்து 34,966 பேர் குணமடைந்துள்ளனர்.

நேற்று மட்டும் 7,526 பேர் குணமடைந்து வீடுகளுக்கு சென்றனர். தற்போது 89,428 பேர் சிகிச்சையில் உள்ளனர்.அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் நேற்று ஒரே நாளில் நடுத்தர வயதினர், முதியவர்கள் உட்பட 59 பேர் உயிரிழந்தனர்.

நாகப்பட்டினத்தில் கரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த 102 வயது மூதாட்டி உயிரிழந்தார். சென்னையில் மட்டும் நேற்று 24 பேர் இறந்துள்ளனர். இதன்மூலம் தமிழகத்தில் கரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13,317 ஆக உயர்ந்துள்ளது.இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பணிச்சுமையால் பாதிப்புதமிழகத்தில் கரோனா தொற்றால் பாதிக்கப்படுபவர்களுக்கு அரசு மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட சுகாதார ஊழியர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றி வருகின்றனர். கடந்த ஆண்டுஇவர்கள் தனியார் விடுதி, நட்சத்திர ஓட்டலில் தங்க வைக்கப்பட்டனர்

அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் செய்யப்பட்டன.ஆனால், இந்த ஆண்டு அதுபோன்ற எந்த சலுகையும், உதவியும் வழங்கப்படவில்லை. மேலும், கடந்த ஆண்டைப்போல ஒப்பந்த அடைப்படையில் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் ஊழியர்கள் அதிக அளவில் நியமிக்கப்படாததால், தற்போது பணியில் இருப்பவர்கள் கூடுதல் பணிச்சுமையால் அவதிப்பட்டு வருகின்றனர்.

இதனிடையே, கரோனா சிகிச்சை பணியில் ஈடுபட்டுள்ள மருத்துவர்கள், செவிலியர்கள் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தால் ரூ.50 லட்சம் காப்பீடு வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டது. தற்போது இந்த திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதால் மருத்துவர்களும் செவிலியர்களும் மனதளவில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# தடுப்பூசி தயாரிப்பை பொதுத்துறை நிறுவனங்களிடம் அளிக்காமல் தனியார்களிடம் ஒப்படைத்தது ஏன்? கே.பாலகிருஷ்ணன் கேள்வி

தடுப்பூசி தயாரிப்பில் பொதுத்துறை நிறுவனங்களைப் புறக்கணித்துவிட்டு தனியார் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அனுமதி கொடுத்துள்ளது ஏன்? என்று சிபிஎம் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் கேள்வி எழுப்பினார். கரோனாவிலும் மக்களைக் கொள்ளையடிக்க கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு மோடி அரசு சலுகை காட்டுவது நியாயமா? என்றும் அவர் கேட்டுள்ளார். இது தொடர்பாக கே.பாலகிருஷ்ணன் இன்று வெளியிட்ட அறிக்கை: ''நோய்த்தொற்றாலும் மரணங்களின் எண்ணிக்கையாலும் மக்கள் கதிகலங்கி நிற்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தடுப்பூசி பற்றாக்குறை மக்கள் மத்தியில் அச்சத்தை அதிகரித்துள்ளது. தடுப்பூசி தேவையை உரிய முறையில் கணக்கில் கொள்ளாத மத்திய அரசு தற்போது இரண்டு தனியார் நிறுவனங்களுக்கு மட்டுமே தடுப்பூசி தயாரிப்பிற்கான அனுமதியை வழங்கிவிட்டு, தடுப்பூசி தயாரிப்பில் மிக நீண்ட அனுபவமும், பெருமளவிற்கான தயாரிப்புத் திறன் கொண்டதுமான பொதுத்துறை நிறுவனங்களை முற்றாக நிராகரித்துள்ளது.

இத்தகைய பொதுத்துறை நிறுவனங்களின் பங்களிப்பின் மூலமாகத்தான் உலகிலேயே பல்வேறு நோய்களுக்கான தடுப்பூசிகள் தயாரிப்பில் இந்தியா முதலிடம் வகித்து வந்தது. குறிப்பாக, மத்திய பொதுத்துறை நிறுவனங்களான செங்கல்பட்டில் இயங்கி வரும் `ஹிந்துஸ்தான் பயோடெக்', நீலகிரியில் செயல்படும் 'பாஸ்டியர் ஆய்வகம்', சென்னையில் உள்ள 'பி.சி.ஜி. ஆய்வகம்', சிம்லாவில் உள்ள 'மத்திய மருந்து ஆராய்ச்சி நிறுவனம்' உள்ளிட்ட நாடு முழுவதும் உள்ள பொதுத்துறை நிறுவனங்களில் தடுப்பூசி உற்பத்தியை மேற்கொண்டிருந்தால் நாட்டின் ஒட்டுமொத்தத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும்.

மத்திய அரசு இந்த நிறுவனங்களை உற்பத்தியில் ஈடுபடுத்தியிருந்தால் இன்று ஏற்பட்டிருக்கும் தடுப்பூசி பற்றாக்குறைக்கும் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய கட்டாயத்திற்கும் மக்கள் ஆளாக வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது.

# BEST INDIAN ASTROLOGER & PSYCHIC

# Pandit: VEERANANDA

காசியில் இருந்து வருகை தந்துள்ளார்

31 வருடங்கள் அனுபவமுள்ள மற்றும் 11 தலைமுறைகளாக ஜோதிடம் பார்பவர்

உலகத்தில் சுரிய சந்திர நவக்கிரக மகிமையினாலே

இன்ப துன்பங்கள், நன்மை தீமை பற்றி விபரம் குறுவார்






## MOST POWERFUL SPIRITUALIST

Family, Money, Childless, Health, Depression, Negativity, Husband Wife, Relationship, Marriage, Enemy, Court, Jealousy, Business, Work,Curses

- கை பார்த்து, முகம் பார்த்து அருள்வாக்கு சொல்லப்படும். டிகைட்டம் பார்த்து
- ஜாதகம் பார்த்து, குறிப்புப் பார்த்து ஆரோக்கியம், மனநிம்மதி, லக்சுமி கடாட்சம் கிடைக்கவும்,
- இராசி, நட்சத்திரம் பார்த்து நடந்தது, நடப்பது, நடக்கப்போவது பற்றிச் சொல்லப்படும்.
- செய்வினை கோளாறு, பேய்பிசாசு தொந்தரவா, எதிரிகள் தொந்தரவா, கண் திருஸ்டி,
- நாகதோசம், காதல் விவகாரங்கள், தொழில், மனை அபிவிருத்தி, வாகனப் பொருத்தம்,
- காதலர் ஒற்றுமை போன்றவற்றிற்கும், வேறு பிரச்சனைகளுக்கும் உடனடியாக தீர்வு சொல்லப்படும்
- ஏந்தப் பிரச்னையாக இருந்தாலும் 5 நாட்களில் தீர்வு காண்பார

## Removes Black Magic, Jadoo, Vodoo, Obeya, Witchcft, Jinn Curses, & Gives 100% Protection

- சர்க்கரை வியாதி
- ஆஸ்துமா
- தீராத கை-கால் வலி
- அல்சர்
- தோல் வியாதி
- அலர்ஜி
- மூட்டு வலி
- உடல் பருமான்
- அதிகரிக்க – குறைக்க
- காக்கா வலிப்பு
- ஆண்மை குறைவு
- ஞாபக சக்தி குறைவு
- மூலம்
- சிறுநீர்க் கோளாறு
- பெண்களுக்கான
- மாதவிடாய் பிரச்சனைகள்
- நரம்புத் தளர்ச்சி
- சரவாங்கி
- வாயுக்கோளாறு
- தலைவலி
- கழுத்து வலி
- முகப்பரு, தேமல்
- வெண்கு‘டம்
- வாதம்
- மஞ்சல் காமாலை
- முடி உதிர்வு, உ‘டணம்
- பக்கவாதம்
- நரம்பு வாதம்

எந்தவித பக்கவிளைவுகளும் கிடையாது நம்பி வாரீர் நலமுடன் வாழ்வீர்

## ஆயுர்வேத சிகிச்சை

## Call For Appoinment: 647-858-3355

1101 Victoria Pank Ave, # 3 , Scarborough ON M4B 2K2
Opp. NO FRILLS, ( VICTORIA PARK & ST CLAIR AVE )

# இவ்வார ராசிபலன்

**23-04-2021 வெள்ளி தொடக்கம் 29-04-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** போட்டி, பொறாமைகள் மறையக்கூடிய மகத்தான வாரம். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். சொத்து சேர்க்கை உண்டு. உழைப்பில் கவனம் தேவை. கோரிக்கை நிறைவேறும். மனை வாங்கும் யோகம் உண்டு. பொருளாதார வளம் மேம்படும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும்.
வழிபடவேண்டியதெய்வம்: சந்திரபகவான். அதிர்ஷ்ட எண் – 1, 8, 2, 5 அதிர்ஷ்ட நிறம் : ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள் : N, A;




**ரிஷபம்:** ஊக்கத்தோடு செயல்பட்டு உயர்வுகளை சந்திக்கக்கூடிய உன்னதமான வாரம்.. வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும்.தொட்டது துலங்கும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். ஜீவராசிகளுக்கு உணவு அளித்தால் யோக பலன் கூடும். வழிபடவேண்டியதெய்வம்: பிரம்மசக்தி அம்மன். அதிர்ஷ்ட எண் - 5, அதிர்ஷ்ட நிறம் : ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள் – O, M.




**மிதுனம்:** புதிய பாதையில் அடியெடுத்து வைக்கக்கூடிய அற்புதமான வாரம். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெருமைகள் சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பணத் தேவை அதிகரிக்கும். எதிர்பார்த்த வி'யம் தாமதமாகும். புகழ் கூடும் அந்தஸ்து உயரும். உறவினர் ஒன்றுமை ஏற்படும். பொறுப்புகள் சிறப்பு சேர்க்கும். தனவரவு உண்டு. மனகசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். வழிபடவேண்டியதெய்வம்: ஜலகண்டேஸ்வரர்.
அதிர்ஷ்ட எண் : 8, 2, 5, 0 அதிர்ஷ்ட நிறம் : கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள் – Y, D.




**கடகம்:** மகிழ்ச்சியான நிகழ்ச்சியும், மனம் எதிர்பார்த்த வளர்ச்சியும் கிடைக்கக்கூடிய வாரம்.. முகப் பொலிவு கூடும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். சுறுசுறுப்பு பெருகும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாய்வழி உறவில் கவனம் தேவை. பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். அலைபேசியால் அலைச்சல் அதிகமாகும். கலவரமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். மத வழிபாடு மாற்றம் தரும். வழிபடவேண்டியதெய்வம்: கணபதி. அதிர்ஷ்ட எண் : 7, 4, 5, 2 அதிர்ஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள் – F, N




**சிம்மம்:** பிரயாணத்தின் மூலமாக பிரபல்யம் கிடைக்கக்கூடிய பெருமையான வாரம்.. தனவரவு பெருகும். விபரீத எண்ணம் விலகும். பேச்சில் நிதானம் தேவை. புதிய நட்பு உருவாகும். பழைய கடன் தீரும். உதவும் குணம் அதிகரிக்கும். சாதகமான சூழ்நிலைகள் உருவாகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். உடல் நிலையில் கவனம் தேவை. உறவினர் வருகை உண்டு. வணிகத்தொழில் வளம் கூடும். பழைய பாக்கி வசூலாகும். வழிபடவேண்டிய தெய்வம்: மருதகாளியம்மன். அதிர்ஷ்ட எண்: 9,2,1,6 அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D, S





**கன்னி:** ஆரோக்கியத்தில் திருப்தி கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். உற்சாகம் அலை மோதும். பணக்கட்டுப்பாடு அவசியம். மாற்றத்தை விரும்புவீர்கள். தோற்றம் தெளிவு கூடும். ஏற்றங்கள் அமையும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும். உத்தியோக இடமாற்றம் உண்டு. ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும்.
வழிபடவேண்டியதெய்வம்: கைலாசநாதப் பெருமாள். அதிர்ஷ்ட எண் : 3, 0, 7, 1 அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள் – U, L




**துலாம்:** உறவுப் பெண்களால் உதவி கிடைக்கக்கூடிய உத்தமமான வாரம். தேக ஆரோக்கியம் கூடும். உத்தியோக உயர்வு உண்டு. மன அமைதி கூடும். பணவரவு உண்டு. பயணத்தடை ஏற்படும். கூட்டுத் தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். தொழில் மேன்மை உண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். கல்வியில் கவனம் தேவை. இடமாற்றம் உண்டு. தடுமாற்றம் ஏற்படும். எதிர்ப்புகள் விலகும். வழிபடவேண்டிய தெய்வம்: உச்சிபிள்ளையார்
அதிர்ஷ்ட எண்: 4,5,3,0 அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள் – R, A




**விருச்சிகம்:** மனஅழுத்தமும் ரணவேதனையும் விலகக்கூடிய மகத்தான வாரம். விரக்திகள் மறையும். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புத வாய்ப்பு கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்பு கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும்.
கல்வி ஈடுபாடு அதிகரிக்கும். பணப்பிரச்சனை தீரும். வழிபடவேண்டிய தெய்வம்: துர்காதேவி. அதிர்ஷ்ட எண்: 8, 1, 7, 6 அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள் – F, Y




**தனுசு:** முத்தாய்ப்பான முன்னேற்றங்களை சந்திக்கக்கூடிய வாரம். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவுப் போகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஜலகண்டேஸ்வரர்
அதிர்ஷ்ட எண் - 4, 1, 7, 8 அதிர்ஷ்ட நிறம் - காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள் – L, J.




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

'ராஜயோகம்'


Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377





**மகரம்:** விருப்பங்கள் நிறைவேறி திருப்பங்கள் நடக்கக்கூடிய வாரம். எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பெயர், புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். பொதுப் பணிகளில் ஆர்வம் ஏற்படும். திருமணத் தடைகள் நீங்கும். புதுத் தொழிலை துவங்கும் வாய்ப்பு உள்ளது. வெளியூர் பயணம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். எண்ணிய காரியம் கை கூடும். புண்ணியஸ்தலம் செல்வீர்கள்.
வழிபடவேண்டியதெய்வம்: தேவி செல்வநாயகி.
அதிர்ஷ்ட எண்: 9, 4, 0, 7 அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F, R





**கும்பம்:** நலமும் வளமும் நாடி வரக்கூடிய நன்மையான வாரம்.. கடன் சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பணநடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். அணிமணிகள் சேரும். பெண்களுக்கு யோகம் கூடும். பணப்புழக்கம் சரளமாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: கஜமுக கணபதி.
அதிர்ஷ்ட எண் - 4,, 2, 1, 0 அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள் – F, K




**மீனம்:** ஆன்மிக எண்ணங்கள் அதிகரிக்கக் கூடிய அற்புதமான வாரம்.. வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். ஜீவராசிகளுக்கு உணவு அளித்தால் யோக பலன் கூடும். வழிபடவேண்டியதெய்வம்: வடிவுடைஅம்மன்
அதிர்ஷ்ட எண் - 5, அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள் – O, M.

----------------------------------------

- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்



# சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும் #42



"நான் நல்லா இருக்கனும் என்று விரும்புகிற நாலு பேரில் இவனும் ஒருவன்" என்று எப்போதும் சிவாஜி அவர்களால் பெருமையாக குறிப்பிட்டு சொல்லபடுகிறவர்களுள் தொழிலதிபர் ஜி.உமாபதி (ராஜராஜ சோழன் தயாரிப்பாளர்) அகில இந்திய சிவாஜி ரசிகர் மன்றம், நிறுவிய தயாரிப்பாளர் - காங்கிரஸ் நிர்வாகி - காந்தியவாதி - எழுத்தாளர் சின்ன அண்ணாமலை, சேலம் செல்லமுத்து ஆகியோர் சிவாஜி ஐயாவின் நட்பு உலகில் முக்கிய இடம் வகித்தார்கள்.

தனியே சினிமாவில் அவர் சாதித்தது பற்றியும் - நடித்த காட்சிகள் பற்றியும் எழுதுவதோடு - அவருடைய குன்றாத வளர்ச்சிக்கும், புகழுக்கும் உறுதுணையாகவிருந்தவர்கள் பற்றியும் குறிப்பிட்டேயாகவேண்டும்.

பொது வாழ்வில் ஒரு ஆணின் உயர்வுக்கும் - வெற்றிக்கும் பக்க பலமாகவும், ஆதரவாகவும் இருந்து ஒரு அமைச்சருக்குரிய ஆற்றலுடன் வழிநடத்தக் கூடிய இருவரின் பங்கு அதிமுக்கியம் வாய்ந்தது. யார் அந்த இருவர்? நல்ல நண்பன் ஒருவர் அடுத்தவர் வாழ்க்கைத் துணை அல்லது உயிர் காதலியாவர்!

இந்த இருவரையும் சரிவரப் பெற்ற அதிர்'டசாலி நமது நடிகர் திலகம் அவர்கள். தனது வாழ்நாளில் பெற்ற விருதுகளிலெல்லாம் அதிஉயர் விருதாக அவர் கருதுவது மகாலட்சுமி போன்ற அவருடைய இல்லத்தரசியாகும்!

"ராஜாமணி எனும் அன்னை முகத்தில் நலம் பெற விளங்கும் குங்குமம்", என்று "குங்குமம்" திரைப்படத்தில் இடம் பெற்ற பாடலின் ஒரு வரியை ..இணைத்திருப்பார் கவியரசு. ஆம், சிவாஜி ஐயாவின் அன்னை ராஜாமணி அம்மையாரின் நெற்றித் திலகம் போன்றே, துணைவியார் கமலா அம்மாவின் நெற்றி திலகமும் எந்நேரமும் ஒளி வீசிக் கொண்டேயிருக்கும்.



இது தெய்வத்தின் வரப்பிரசாதம். அவரது கலைப்பயணம் தங்குதடையின்றி வெற்றிப்பாதையில் மேலோங்கிச் செல்வதற்கு துணைவியாரின் பங்கு எவ்வளவு முக்கியம் வாய்ந்தது என்பதை உணர்ந்தவர்களுள் நானும் ஒருவன்!

அதுபோன்றுதான் அவரது நம்பிக்கைக்குரிய நட்பும் அமைந்தது. "முகநக நட்பது நட்பன்று, நெஞ்சத்து அகநக நட்பது நட்பு" என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்ககொப்ப பல நல்ல நண்பர்களை பெற்றவர் சிவாஜி அவர்கள். அதிலும் குறிப்பாக அவரது நீண்டநாள் நண்பர் சேலம் செல்லமுத்து அதிமுக்கியம் வாய்ந்தவர். ஒரு பிளா'பேக், அப்போது அருகில் தூய கதராடை அணிந்து அமர்ந்திருந்த ஒருவரை அழைக்கிறார் நடிகர் திலகம், "இவனைத் தெரிகிறதா?... என்று செழியனைப் பார்த்து கேட்கிறார். அறிமுகப்படுத்தப்பட்டவரைப் பற்றி கோவை செழியன் சொல்ல யோசித்தபோது, தயங்காமல் நடிகர் திலகம் "இவன் என் பால்ய கால நண்பன்... செல்லமுத்து. சேலத்தில் இருக்கிறான்...! நடிகர் திலகம் முடிக்க முன்னரே கோவை செழியன் புரிந்துகொண்டு, "ஊட்டி வரை உறவு" படத்தின் போது ஏற்காட்டில் செல்லமுத்துவைச் சந்தித்த நிகழ்வை சொல்லி நினைவுகூர்ந்தார்.

இவ்வுரையாடலைத் தொடர்ந்து சிவாஜி அவர்கள் கூறியதை படித்ததும் என் நெஞ்சம் இப்போதும் புல்லரிக்கிறது! அந்த நட்பின் ஆழத்தை நீங்களும் அறியவேண்டும். "இவனுக்கும், எனக்கும் ஒரு ஒப்பந்தம். என்ன தெரியுமா..? எல்லோரும் ஆவலுடன் சிவாஜியின் முகத்தை நோக்க... "நான் முந்திக் கொண்டால் அவன் எடுத்துப் போடவேண்டும், அவன் முந்திக் கொண்டால் நான் எடுத்த போடவேண்டும்!"

நடிகர் திலகம் இவ்வாறு கூறியதும், இருவர் கண்களிலும் நீர் திரை. இதுதானய்யா நெஞ்சத் தகநக நட்பு!

நடிகர் திலகம் யாருக்கும் அனாவசியமாக கடிதம் எழுதி கொண்டிருப்பதில்லை. 1962 இல் அமெரிக்க வெள்ளை மாளிகை அழைப்பை ஏற்று கலைத்தூதுவராகப் பயணம் சென்றார்.. 26.4.1962 திகதியிட்டு சிக்காகோ நகரிலிருந்து உயிர் நண்பன் செல்லமுத்துவை நினைத்து இரண்டு வரியில் தபாலட்டையில் எழுதுகிறார்...! "நண்பா! என் பயணம் நல்ல வெற்றி. நீயும், கனகும், ஜெயசீலனும் என்றும் என் நினைவில். உன் குடும்பத்திற்கு என் வாழ்த்து. உன் பிரியமுள்ள கணேசன்". அக்கரைச்சீமைக்குப் போனாலும் தன் உயிர் நண்பனை நினைத்து கடிதம் எழுதுகிறார் என்றால் அந்த நட்பு எத்தகையது என்பதை நாம் இதயத்தால் உணர்ந்து கொள்ள வேண்டும். அது மாத்திரமல்ல, தோழனையும் அழைத்து வர முடியவில்லையே என்ற ஆதங்கமும் அவருக்குண்டு!.

பிசிராந்தையாரும், கோப்பெருஞ் சோழனும் போன்று, பாரிவள்ளலும், கபிலரும் போன்று நட்புக்கு இலக்கணமாக வாழ்ந்தவர்கள் சிவாஜியும் செல்லமுத்துவும்.

நடிகர்திலகத்தின் நெஞ்சில் நீக்கமற நிறைந்துவிட்ட நண்பர் செல்ல முத்துவின் வாயிலாக இருவருக்குமிடையேயுள்ள நட்பின் நினைவலைகளை மீட்டுவது தான் இங்கு பொருத்தமாக இருக்கும். "பராசக்தி" படம் தயாராகிக் கொண்டிருந்த சமயம். 1951 என நினைக்கிறேன், "கண்கள்" நாடகத்தில் நடிக்க எஸ்வி சகஸ்கரநாமம் குழுவினருடன் சிவாஜி சேலம் வந்து, சேலம் அருகேயுள்ள சின்ன திருப்பதியில் தங்கியிருந்தார். வேட்டைப் பிரியரான அவர், "நான் வேட்டைக்குப் போக வேண்டும் இந்த ஊரில் வேட்டையில் ஆர்வம் உள்ளவர்கள் யார்..? என்று கேட்டிருக்கிறார். நண்பர்கள் என்னை அவரிடம் அழைத்துப்போய் அறிமுகம் செய்து வைத்தனர். அப்போது ஒரு புது துப்பாக்கி வாங்கி வந்திருதார். "இந்த துப்பாக்கியால் முதன்முதலாக எங்கே போய் சுடலாம் என்று கேட்கிறார். "ஒகேனக்கல் போகலாம்" என்றேன்.



ஒரு வண்டியை எடுத்துக்கொண்டு ஒகேனக்கல் புறப்பட்டோம். அங்கே அவர் சுட்டது ஒரு காக்கையை. அதன்பின் பல்வேறு சமயங்களில் வேட்டைக்காரனாக மாறியதன் அடையாளமாக அவரது வீட்டில் காட்சிப்பொருளாக சிறுத்தை, புலி, காட்டெருமையின் தலை, கொம்புகள் உள்ள மான் தலை என பல காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அதன் பிறகு அங்கேயே அவருடன் இருந்து விட்டு மாலையில் சேலம் திரும்பினோம்.



அந்தச் சமயத்திலிருந்து எங்கள் நட்பு வளர ஆரம்பித்தது. அதன் பிறகு அவர் சேலத்திற்கு வரும்போதெல்லாம் என்னை பார்க்காமல் இருந்ததில்லை. சிவாஜி சேலத்திற்கு வந்தால் கோயம்புத்தூர் லாட்ஜில் 21ஆம் நம்பர் அறையில் தான் தங்குவார். அவருக்கு உணவு என் வீட்டில் இருந்து தான் போகும். வெளியே சாப்பிட மாட்டார்.

"இல்லற ஜோதி" இல் நடிக்க வந்த போதும் அதே அறையில்தான் தங்கினார். தினமும் சூட்டிங் முடிந்து மாலையில் திரும்பும் போது அவரும் அப்படத்தின் கதை வசனகர்த்தா கலைஞர் மு கருணாநிதியும் சேர்ந்தே வருவார்கள். மாலையில் என் வீட்டிலிருந்து போகும் சிற்றுண்டியை இருவரும் சாப்பிடுவார்கள். நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு கலைஞர் மாடர்ன் தியேட்டர் ரிகர்சல்

(தொடர்ச்சி 25ம் பக்கம்)

# அன்பின் தொனி - 608

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம் - ஜெபத்தின் வல்லமை.**

**நீ ஆண்டவருக்கு முன்பாகவும், யாக்கோபுடைய தேவனுக்கு முன்பாகவும் அதிரு**

இஸ்ரவேல் எகிப்திலும், யாக்கோபின் குடும்பம் அந்நிய பாஷைக்காரரான ஜனத்திலுமிருந்து புறப்பட்டபோது, யூதா அவருக்குப் பரிசுத்த ஸ்தானமும், இஸ்ரவேல் அவருக்கு ராஜ்யமுமாயிற்று. கடல் கண்டு விலகி ஓடிற்று, யோர்தான் பின்னிட்டுத் திரும்பினது. மலைகள் ஆட்டுக் கடாக்களைப் போலவும், குன்றுகள் ஆட்டுக் குட்டிகளைப் போலவும் துள்ளினது. கடலே, நீ விலகியோடுகிறதற்கும், யோர்தானே, நீ பின்னிட்டுத் திரும்புகிறதற்கும், மலைகளே, நீங்கள் ஆட்டுக் கடாக்களைப்போலவும், குன்றுகளே, நீங்கள் ஆட்டுக்குட்டிகளைப் போலவும் துள்ளுகிறதற்கும், உங்களுக்கு என்ன வந்தது? பூமியே, நீ ஆண்டவருக்கு முன்பாகவும், யாக்கோபுடைய தேவனுக்கு முன்பாகவும் அதிரு. அவர் கன்மலையைத் தண்ணீர்த் தடாகமாகவும், கற்பாறையை நீரூற்றுகளாகவும் மாற்றுகிறார். - **சங்கீதம் 114: 1-8**

**கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார்**

எங்களுக்கு அல்ல, கர்த்தாவே, எங்களுக்கு அல்ல, உமது கிருபையினிமித்தமும், உமது சத்தியத்தினிமித்தமும், உம்முடைய நாமத்திற்கே மகிமை வரப்பண்ணும். அவர்களுடைய தேவன் இப்பொழுது எங்கே என்று புறஜாதிகள் சொல்வானேன்? நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார், தமக்குச் சித்தமானயாவையும் செய்கிறார். அவர்களுடைய விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும், மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது. அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது, அவைகளுக்குக் கண்களிருந்தும் காணாது. அவைகளுக்குக் காதுகளிருந்தும்கேளாது, அவைகளுக்கு மூக்கிருந்தும் முகராது. அவைகளுக்குக் கைகளிருந்தும் தொடாது, அவைகளுக்குக் கால்களிருந்தும் நடவாது, தங்கள் தொண்டையால் சத்தமிடவும் மாட்டாது. அவைகளைப் பண்ணுகிறவர்களும், அவைகளை நம்புகிறவர்கள் யாவரும், அவைகளைப்போலவே இருக்கிறார்கள். இஸ்ரவேலே, கர்த்தரை நம்பு, அவரே அவர்களுக்குத் துணையும் அவர்களுக்குக் கேடகமுமாயிருக்கிறார். ஆரோன் குடும்பத்தாரே, கர்த்தரை நம்புங்கள், அவரே அவர்களுக்குத் துணையும் அவர்களுக்குக் கேடகமுமாயிருக்கிறார். கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே, கர்த்தரை நம்புங்கள், அவரே அவர்களுக்குத் துணையும் அவர்களுக்குக் கேடகமுமாயிருக்கிறார். கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார், இஸ்ரவேல் குடும்பத்தாரை ஆசீர்வதிப்பார், அவர் ஆரோன் குடும்பத்தாரை ஆசீர்வதிப்பார். கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியோரையும் சிறியோரையும் ஆசீர்வதிப்பார். கர்த்தர் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் வர்த்திக்கப்பண்ணுவார். வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தராலே நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். வானங்கள் கர்த்தருடைய வைகள், பூமியையோ மனுபுத்திரருக்குக் கொடுத்தார். மரித்தவர்களும் மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள். நாமோ, இதுமுதல் என்றென்றைக்கும் கர்த்தரை ஸ்தோத்திரிப்போம். அல்லேலூயா. - **சங்கீதம் 115: 1- 18**

**கர்த்தர் கிருபையும் நீதியுமுள்ளவர், நம்முடைய தேவன் மனஉருக்கமானவர்.**

கர்த்தர் என் சத்தத்தையும் என் விண்ணப்பத்தையும் கேட்டதினால், அவரில் அன்புகூருகிறேன். அவர் தமது செவியை எனக்குச் சாய்த்தபடியால், நான் உயிரோடிருக்குமளவும் அவரைத் தொழுதுகொள்ளுவேன். மரணக் கட்டுகள் என்னைச் சுற்றிக்கொண்டது, பாதாள இடுக்கண்கள் என்னைப் பிடித்தது, இக்கட்டையும் சஞ்சலத்தையும் அடைந்தேன். அப்பொழுது நான் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு: கர்த்தாவே, என் ஆத்துமாவை விடுவியும் என்று கெஞ்சினேன். கர்த்தர் கிருபையும் நீதியுமுள்ளவர், நம்முடைய தேவன் மனஉருக்கமானவர். கர்த்தர் கபடற்றவர்களைக் காக்கிறார், நான் மெலிந்துபோனேன், அவர் என்னை இரட்சித்தார். என் ஆத்துமாவே, கர்த்தர் உனக்கு நன்மை செய்தபடியால், நீ உன் இளைப்பாறுதலுக்குத் திரும்பு. என் ஆத்துமாவை மரணத்துக்கும், என் கண்ணைக் கண்ணீருக்கும், என் காலை இடறுதலுக்கும் தப்புவித்தீர். நான் கர்த்தருக்கு முன்பாக ஜீவனுள்ளோர் தேசத்திலே நடப்பேன். விசுவாசித்தேன், ஆகையால் பேசுகிறேன், நான் மிகுதியும் வருத்தப்பட்டேன். எந்த மனுஷனும் பொய்யன் என்று என் மனக்கலக்கத்திலே சொன்னேன். கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக் காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன். நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன். கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது. கர்த்தாவே, நான் உமது அடியேன், நான் உமது அடியாளின் புத்திரனும், உமது ஊழியக்காரனுமாயிருக் கிறேன், என் கட்டுகளை அவிழ்த்துவிட்டீர். நான் உமக்கு ஸ்தோத்திரபலியைச் செலுத்தி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன். நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும், கர்த்தருடைய ஆலயத்தின் பிராகாரங்களிலும், எருசலேமே உன் நடுவிலும் நிறைவேற்றுவேன். அல்லேலூயா. - **சங்கீதம் 116: 1- 19**

ஜாதிகளே, எல்லோரும் கர்த்தரைத் துதியுங்கள், ஜனங்களே, எல்லாரும் அவரைப் போற்றுங்கள். அவர் நம்மேல் வைத்த கிருபை பெரியது, கர்த்தரின் உண்மை என்றென்றைக்குமுள்ளது. அல்லேலூயா. - **சங்கீதம் 117: 1-2**

**கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன் அவர் எனக்குச் செவிகொடுத்தார்.**

என் நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன், அவர் எனக்குச் செவிகொடுத்தார். கர்த்தாவே, பொய் உதடுகளுக்கும் கபடநாவுக்கும் என் ஆத்துமாவைத் தப்புவியும். கபடநாவே, உனக்கு என்ன கிடைக்கும்? உனக்கு என்ன செய்யப்படும்? பலவானுடைய கூர்மையான அம்புகளும், சூரைச்செடிகளை எரிக்கும் தழலுமே கிடைக்கும். ஐயோ! நான் மேசேக்கிலே சஞ்சரித்தது போதும், கேதாரின் கூடாரங்களண்டையிலே குடியிருந்ததும் போதும்! சமாதானத்தைப் பகைக்கிறவர்களிடத்தில் என் ஆத்துமா குடியிருந்ததும் போதும்! நான் சமாதானத்தை நாடுகிகிறேன், அவர் களோ, நான் பேசும் போது யுத்தத்துக்கு எத்தனப்படுகிறார்கள். - **சங்கீதம் 120: 1-7** *தொடரும்...*

# கல்கியின்
# பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் குடந்தைப் பயணம்... *(அத்தியாயம் #8)*

'வானவன் புகழுரையா வாயுண்டோ மாகதர்கோன்
பெயரெழுதா மார்புண்டோ - வானவன்
கோடிதாங்கி நில்லாத கொம்புண்டோ - உண்டோ
அடிதாங்கி நில்லா அரசு'

கிரகங்களும், நட்சத்திரங்களும் வருங்கால நிகழ்ச்சியைச் சொல்லுகின்றன. இவை உன் விடயத்தில் என்ன சொல்கின்றன என்று கொஞ்சம் பார்த்துச் சொல்:லுகிறேன். நீ நன்றாக உயர்ந்து செல்லப் போகிறாய்' ------- 'என்ன சோதிடரே நான் உங்கள் வீட்டிற்கு குனிந்தல்லவா வந்தேன் இன்னும் உயர்ந்தால் என்பாடு பெரும்பாடுதான் நான் தஞ்சாவூர் போய் சக்கரவர்த்தியைத் தரிசிக்கப் போகிறேன் இது நடக்குமா?' 'தம்பி சக்கரவர்த்தியைக் கானுவதற்கு சோதிடம் தேவையில்லை. சக்கரவர்த்தியை ஆளுபவர்கள் பெரிய பழுவேட்டரையர், சின்னப்பழுவேட்டரையர் இவர்களைக் கேட்டால் போதும் நீ காஞ்சியிலிருந்து ஆதித்தகரிகாலன் சார்பாக வந்திருக்கிறாய். அவர் சாதகம் என்னிடம் இல்லை அதனால் சரியாக சொல்ல முடியவில்லை'. 'சரி சரி சோழப் பேரரசுக்க பெரும் ஆபத்து வரப் போகிறது என்று கதைக்கிறார்களே! அடுத்து பட்டத்திற்கு வரப் போவது யார் என்று சொல்லுங்கள். இளவரசர் மதுராந்தகரின் யோகம் எப்படி? இந்த சோழ ராட்சியம் பெண்ணரசிற்கு அடிமையாக உள்ளதாகக் கதைக்கிறார்கள். இதற்கெல்லாம் விடை தாருங்கள்' என்றான். சோதிடர் ஆரம்பித்தார், 'ராஜ ஜோதிடத்தில் சோழ தேசத்திற்கு ஆபத்துத்தான். மதுராந்தகர் ஜோதிடம் ஓர் பெண்ணின் ஜாதகத்தை ஒத்துப் போகிறது அதைவிட பிறரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டுள்ளது. பழுவேட்டரையர் மணம் புரிந்த இளைய ராணியின் ஆதிக்கத்தைப்பற்றி சோழ தேசத்தவர் என்ன கதைக்கிறார்கள்'. வந்தியத்தேவன் சோதிடரைப் பார்த்து 'சோதிடரே சக்கரவர்த்தியின் திருக்குமாரி குந்தவைதான் இங்கு பெண்ணரசு செலுத்துகிறாளாமே' என்று கேட்க உடனே சோதிடர் வந்தியத்தேவனின் முகத்தை உற்றுப் பார்த்துத் தெரிந்து கொண்டார் இங்கு வந்ததும், அவன் கண்ட பெண் குந்தவை என்பது அவனுக்குத் தெரியாது போல் அவன் முகத்தின் அறிகுறி சொல்கிறதே! என்று.

'குந்தவைதான் பெண்ணரசு நடத்துகிறாள் என்பது முற்றிலும் தவறு. மாறாகப் பழுவேட்டரையர்கள் அரசை ஆளுகிறார்கள் என்றே சொல்லலாம். சோழப் பேரரசு வளர்ந்து கொண்டே போகும். உனது விருப்பங்களும் நிச்சயமாகக் கை கூடும்' என்று கூறிமுடித்தார். மீண்டும் வந்தியத்தேவன் 'ஈழத்தில் யுத்தம் புரியப் போயிருக்கும் அருள்மொழிவர்மனைப் பற்றிக் கூறுங்கள்' என்றான். சக்கரவர்த்தி சுந்தரசோழ மன்னனின் கடைசி மகன் அருள்மொழிவர்மனைப் பற்றிக் கேட்கிறாயா? 'எதற்கும் நிலைகலங்காத, திட சித்தம் படைத்த, தியாகம், ஒழுக்கம் முதலிய குணங்களைக் கொண்டவரும், வீர தீர அரசரும் கல்வியறிவும், உலகறிவும் நிரம்பியிருக்கும் கம்பீர தோற்றம் கொண்ட புன்னகைப் பொலிவுடன் களை வதனம் கொண்டவரும், யாவரிற்கும் முன்னோடியாகவும், அதிகாரத்தின் இருப்பிடமாக சூரியனைப் போல் பிரகாசிக்கும் ஒளிமயமான இளவரசன், பொன்னியின் செல்வன் இதை நான் மட்டும் சொல்லவில்லை சோழநாட்டில் யாரைக் கேட்டாலும் அருள்மொழிவர்மனை இவ்வாறாகத்தான் சொல்வார்கள். உன் கிரகமும் உச்சத்திற்கு வருகிறது என்று அறிந்து சொல்கிறேன்' என்றார். வந்தியத்தேவன் 5 கழஞ்சு (ஒரு செடியின் விதையினைக் குறிக்கும் பழந்தமிழர் தங்கத்தை அளக்கும் அலகாகப் பயன்படுத்துவர்.) பொன் எடுத்து சோதிடரிடம் கொடுத்துவிட்டு விடைபெற்றான். பின்னர் தஞ்சாவூர் செல்வதற்காக அரிசலாற்றங்கரைப் பக்கமாக தன் குதிரையைச் செலுத்தினான்.

இவ்வாறாக அரசலாற்றங்கரை நோக்கி வந்துகொண்டிருக்கையில் அவன் கடந்து வரும் கிராமங்கள் எத்தனை அழகு. பசுமை கொஞ்சும் வயல்களும், இஞ்சி மஞ்சள் கொல்லைகளும், கரும்பு வாழைத் தோட்டங்கள், தென்னை கமுகுத்தோப்புகள் பச்சைப் பசேல் என்று பரந்து கிடந்தன. வாவிகள், ஓடைகள், குளங்கள், வாய்க்கால்கள் தண்ணீர் நிரம்பி குளிர்மை சேர்த்தது. அல்லியும், குவளையும் காடாகப் பூத்திருக்க செந்தாமரை, வெண்டாமரை மலர்ந்திருந்தன. இப்படியான பசுமை பொருந்திய கிராமங்களும் மனநிறைவு கொண்ட மனிதர்களும், சிறிய சிறிய ஆலயங்களும் கண்ணிற்கு விருந்துபடைக்க குதிரையில் சில் என்று அடிக்கும் குளிர்காற்றில் மெய்மறந்து மகிழ்ந்தபடி அவன் பயணம் அரிசிலாற்றங்கரை நோக்கித் தொடர்ந்தது.

இதே வேளை இளையபிராட்டி குந்தவையும், இளவரசி வானதியும் குடந்தை சோதிடர் வீட்டிலிருந்து ரதத்தில் அரிசிலாற்றங்கரை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் குடந்தைக்குப் போகுமுன் படகிலிருந்து கரையிறங்கி குந்தவை தன் தோழிகளிடம் விடைபெற்றாள். அப்பொழுது அந்தத் தோழிகள் ஏமாற்றத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். குந்தவையும், வானதியும் திரும்பிவரும் வரை இவர்கள் என்ன செய்தார்கள் என்று பார்ப்போம். தாரகை, வாரிணி, நிரவதி, செந்திரு, மந்தாகினி ஆகிய குந்தவையின் தோழிகள் ஏரிக்கரையில் கூட்டம் போட்டுக் கொண்டனர். கூட்டத்தின் பேசுபொருள் வானதியின் மயக்கம் அது என்ன மயக்கம்? இளவரசர் அருள்மொழிவர்மன் ஈழநாட்டிற்குப் புறப்படும் போது விளக்கை ஏந்தி வந்த வானதி அங்கே மயக்கம் போட்டு விழுந்தாள். அவளை இளவரசர் ஈழம் போகுமுன் பார்த்து சுகம் விசாரித்தார். அதுதான் வானதியயின் மயக்கம் 'அவள் உண்மையில் மயக்கம் போடவில்லை அது பாசாங்கு' என்றாள் நிரவதி. 'இல்லை இல்லை இளவரசரை தன்னிடம் இழுத்துக் கொள்ளப் பார்க்கிறாள். குந்தவையும் அருள்மொழிவர்மரும் ஏமாந்துவிட்டடார்கள்.' என்றாள் தாரகை. 'போடி போடி இளவரசர் மேன்மையான குணம் கொண்டவர். இவரைப் போல் ஈரேழு பதினாறு உலகத்திலும் வேறு யார் குணசாலியாக இருக்க முடியும்? இனி இந்த வானதியை நாம் ஒரு கை பார்த்து விடவேண்டும்' என்று எல்லோரும்
திட்டமிட்டனர். 'சரி சரி குந்தவை தேவி வரும் நேரமாகிறது. நாம் அவர் சொன்னதைச் செய்வோம்' என்றாள் வாரிணி. எல்லோரும் சேர்ந்து அதைச் செய்து முடித்தார்கள். அப்பொழுது குந்தவையும், வானதியும் அங்கு வந்து சேர்ந்தார்கள். அதே கணம் அரசலாற்றுப் பக்கம் பயணம் செய்த வந்தியத்தேவனுக்கு பெண்களின் சிரிப்பொலியும், வளையல் சத்தமும் கேட்டது. அடர்த்தியான மரங்களிற்கிடையே அவர்களின் குரலொலியும் கேட்க அவன் இனிய ஒலி வந்த திசையை உற்று நோக்கினான். அதே வேளை கல கல என்ற சிரிப்பொலி திடீரென்று நிற்க, 'ஐயோ! ஐயோ முதலை முதலை' என்று அபாயக் குரல் கேட்டு திகைத்துப் போய் குரல் வந்த திசை நோக்கி தன் குதிரையைத் தட்டிவிட்டான். குதிரை பாய்ந்து அந்தப் பக்கம் சென்றது. மரங்களிற்கிடையே பெண்களின் முகங்கள் பீதியுடன் காணப்பட்டன. அதிலும் தான் சோதிடர் வீட்டில் பார்த்த அதே இரண்டு பெண்கள் இது என்ன அதிசயம்! என்று வியந்தபடி அக்கம் பக்கம் நோக்கினான். முதலை ஒன்று வாயைப் பிளந்தபடி அவர்களுக்கருகில் நின்றது. இது என்ன இந்தப் பயங்கரமான பிராணி அவர்களை நோக்குகின்றதே என்ற கலக்கத்துடன் உறுதி குன்றாமல் தன் வேலை அந்த முதலை மேல் குறிபார்த்து வீசி எறிந்தான். அந்த வேல் முதலை மேல் பாய்ந்து செங்குத்தாக நின்றது. தன் உறை வாளை உருவிக் கொண்டு அதனைக் கொல்லப் பாய்ந்து சென்றான்.




அப்பொழுது அங்கு நின்ற பெண்கள் கல கல என மீண்டும் சிரித்தார்கள். அவர்கள் சிரிப்பு பரிகாசச் சிரிப்பாகத் தோன்ற வந்தியத்தேவன் பிரமித்து நின்றான். அப்பொழுது குந்தவை, 'பெண்களே சும்மா இருங்கள் எதற்காக இப்பொழுது சிரிக்கிறீர்கள்' என்றபடி 'ஐயா தங்களிற்கு மிக்க வந்தனம். வீண் சிரமம் வேண்டாம்' என்றாள். வந்தியத்தேவன் அவள் தேன் சொட்டும் குரலின் இனிமையில் சொக்கி நின்றான். குந்தவை மேலும் தன் பேச்சைத் தொடர்ந்தாள். 'ஐயா குடந்தையில் நீங்கள் அவசரப்பட்டு சோதிடர் வீட்டிற்குள் வந்ததற்காக வருத்தம் தெரிவித்தீர்கள். அதற்கு மறுமொழி சொல்லாமலே நாங்கள் வந்துவிட்டோம். இதிலிருந்து சோழ நாட்டுப் பெண்கள் மரியாதை அறியாதவர்கள் என்று கருத்து உங்களிற்கு ஏற்பட்டிருக்கலாம். அப்படி நீங்கள் எண்ணிக்கொள்ள வேண்டாம். என்னுடன் வந்த பெண்ணிற்கு திடீரென்று மயக்கம் வந்தபடியால் என் மனம் சிறிது கலக்கமாக இருந்தது. ஆகையினால் தங்களிற்கு மறுமொழி சொல்லவில்லை' என்றாள். இப்படிக் குந்தவை பேசிக் கொண்டிருக்கையில் வந்தியத்தேவனோ இறக்கை கட்டி வானில் பறந்து கொண்டிருந்தான். அத்தனை சுகம் அவனுக்கு. 'என்ன இது அத்தனை வீரம் கொண்ட நான் ஒரு வார்த்தை சொல்ல முடியவில்லையே? என்னைச் சுற்றி எல்லாம் ஸ்தம்பித்து நிற்கிறதே! இந்த முதலை ஏன் அசையாமல் கிடக்கிறது' என்று விழித்துக் கொண்டான். அவன் உள்ளத்தில் பதிந்த மங்கை குந்தவை மீண்டும் தொடர்ந்தாள், 'இந்த அபலைப் பெண்களைக் காப்பாற்றவே இந்தக் காரியம் செய்தீர்கள் இவ்வளவு வேகமாகக் குறி தவறாமல் வேலை எறியக் கூடிய வீரர்களைக் காண்பது அரிது.' என்றாள். மீண்டும் பெண்கள் சிரித்தார்கள். வந்தியத்தேவனுக்கு அவமானத்தால் கோபம் உச்சத்தைத் தொட முதலை மேல் உள்ள தன் வேலை எடுத்துக் கொண்டு 'இவர்கள் ஆண்களாக இருந்தால் பரலோகம் போயிருப்பார்கள் என்ன செய்வது பெண்களாயிற்றே' தன் உள்ளத்தைக் கவர்ந்த பெண்ணைக்
கூடத் திரும்பிப் பார்க்காது பாய்ந்து சென்று குதிரை மீது ஏறினான். குதிரையின் தலைக்கயிற்றினால் சுள்ளென்று அடிக்க குதிரையும் சாலை வழி விண் வேகத்தில் பறந்தது.

*தொடரும்...*

---

Jenita.Jaffna@gmail.com
**தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை, மாதினி நிமலன**

---

*(24ம் பக்கத் தொடர்ச்சி)*

## சிவாஜி கணேசனும் தமிழ் சினிமாவும்

ஹாலுக்கு போய் விடுவார். அந்த 21ம் நம்பர் அறையை எங்கள் வாழ்நாளில் மறக்க முடியவில்லை. அந்த அளவிற்கு இருவரும் ஒன்று இருந்தோம். 1976ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்கு பிறகு அந்த ரூமில் அவர் தங்குவதில்லை. காரணம் அந்த மாதத்தில் தான் என் புதிய வீட்டின் கிரகப்பிரவேசம். அப்போது வீட்டில் அவருக்கென ஒரு அறையை கட்டினேன். அன்றிலிருந்து சேலம் வரும் போதெல்லாம் நடிகர் திலகம் என் வீட்டில் அந்த அறையில் தான் தங்குவார் என்பதில் எனக்குப் பெருமை. எவ்வளவு வசதி வாய்ப்புகள் வந்தாலும் சிவாஜி எளிமையை விரும்புபவர் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு!

சென்னை பெசன்ட் ரோட்டில் இப்போது சிவாஜி பிலிம்ஸ் இருக்கும் இல்லத்தில் அன்று சிவாஜி குடியிருந்தார். சிவாஜியின் அன்னை ராஜாமணி அம்மையார் எங்களைச் சுற்றிலும் உட்கார வைத்து தன் கையினால் உணவு பரிமாறியது இந்த ஜென்மத்தில் இனிமேல் யாரும் அந்த மாதிரி ருசியாக சமைக்க முடியாது. அந்த மாதிரி சாப்பிடவும் முடியாது. "என்ன புள்ளைங்க நீங்க.. சரியா சாப்பிடுறதில்லை... என்று சொல்லிக்கொண்டே எங்களுக்கு மூக்கு முட்டும் அளவிற்கு பரிமாறி வருவார். அந்த வீட்டு மாடியில் ஒரு கூரைக் கொட்டகை அங்கேயே எங்களுடன் சிவாஜியும் படுத்துக்கொள்வார். நீண்ட நேரம் அரட்டை. எப்படி, எப்போது தூங்கினோம் என்பதே தெரியாது. அப்போது நாங்கள் நிறைய சினிமா பார்ப்போம். ஒரு நாளைக்கு மூன்று படங்கள் கூட பார்ப்பதுண்டு. இரண்டு படங்களை பார்த்துவிட்டு புகாரியில் டிபன் சாப்பிட்டுவிட்டு மீண்டும் ஒரு படத்தைப் பார்ப்போம். அப்போது அனேகமாக நாங்கள் இரவில் தான் காரில் பயணம் செய்வோம். மாதத்தில் இருபது நாட்கள் அவருடன் இருப்பேன். சாகுல்ஹமீது என்ற டிரைவர் இருந்தார். அவர் மணிக்கு 75 மைலுக்குக் குறைவாக காரை ஓட்ட மாட்டார். சேலத்தில் மதியம் இரண்டரை மணிக்கு புறப்பட்டு 210 மைல்களை 3 மணி நேரத்தில் கடந்து மாலை ஐந்தரை மணிக்கு சென்னைக்கு வந்து விடுவோம். அதற்குப் பிறகு மாலைக்காட்சி சினிமாவுக்குப் போவோம் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!.

ஒவ்வொரு வருடமும் பொங்கல் சமயத்தில் ஓய்வு எடுப்பதற்காக சூரக்கோட்டை சென்று ஒரு வாரம் இருப்பார். புறப்படும் முன் எனக்கு போன் பண்ணுவார். நானும் புறப்படுவேன். சூரக்கோட்டையில் அவரது பண்ணையில் கிணற்றுக்கு அருகில் அப்போது ஒரு கூரைக் கொட்டகை. அதில் கயிற்றுக் கட்டிலில் நாங்கள் படுத்துக் கொண்டு நீண்ட நேரம் அகில உலக சமாச்சாரங்களை பேசுவோம். தமா'க பேசி மகிழ்வோம். பொங்கல் திருநாளை சூரக்கோட்டையில் கொண்டாடுவதில் அவருக்கு அவ்வளவு மகிழ்ச்சி!. ஒவ்வொரு ஆண்டும் பொங்கலுக்கும் சூரக்கோட்டை போக தவறமாட்டார்.

அருமை நண்பர் சேலம் செல்லமுத்து விற்கும் சிவாஜி ஐயாவிற்குமிடையே உள்ள நட்பின் வலிமை பற்றி சில நினைவுகளை பதிவு செய்துள்ளேன்.( கட்டுரையின் நீளம் கருதி பல சுவாரசியமான சம்பவங்களை குறிப்பிட முடியவில்லை) அதே போன்று நடிகர் திலகத்தின் பால் நெருங்கிய விருப்பம் கொண்ட எனது நண்பர் ஒருவர் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். சுமார் கால் நூற்றாண்டு முன் அறிமுகமான ரொரென்டோ நண்பர் இவர். இடையில் சில ஆண்டுகளாக அவரைப் பற்றி தகவல் எதுவும் அறிய முடியவில்லை. இத்தொடர் மூலமாவது அவரைப் பற்றி அறிய விழைகிறேன். அன்புள்ள நண்பரே எங்கிருந்தாலும் என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள். நண்பரின் பெயர் ஸ்ரீகாந்தன். கவிஞர் கந்தவனம் ஐயா அவர்கள் பதுளையோ மாத்தளை நகரிலேயோ ஆசிரியராக பணிபுரிந்த வேளை, அவருடைய மாணவனாகப் பயின்றவன் என்று என்னிடம் கூறியுள்ளார். கனடாவிற்கு வருவதற்கு முன்பு இலங்கை அரசின் குடிவரவு - குடிஅகல்வு திணைக்களத்தில் ஆபீஸராக பணிபுரிந்தவர் ஸ்ரீ அவர்கள். சிறந்த கவிஞருமாவார். இலக்கிய ரசனை மிகுந்தவர். வாரம் ஒருமுறையாவது தொலைபேசியில் அழைத்து இலக்கியம் பேசி மகிழ்வார். பாரதியிடம் மிகுந்த பற்று கொண்டவர். ஒரு முறை புதுச்சேரி சென்று பாரதி உலாவிய இடங்களில் தான் உலாவந்து, நினைவகத்தில் பாரதி உட்கார்ந்து இளைப்பாறிய சாய்வு நாற்காலியில் தானும் சிறிது நேரம் இளைப்பாறியதை அனுபவித்து உரையாடிய தமிழன்பன் எங்கே போனாரோ? " பைலட் பிரேம்நாத்" படப்பிடிப்பிற்காக நடிகர் திலகமும் ஏனைய கலைஞர்களும் கொழும்பு விமான நிலையம் வந்திறங்கிய போது, சிவாஜியிடத்திலுள்ள பிரியத்தினால் தானே அவருடைய கடவுச்சீட்டில் வருகைக்கான முத்திரையை பதிவு செய்வேன் என்று அவ்விதமே சிவாஜி ஐயா அவர்களை வரவேற்று அவருடைய கடவுச்சீட்டு புத்தகத்தில் அரசு முத்திரையில் பதிவு செய்ததை பலதடவை என்னுடன் பகிர்ந்து மகிழ்ச்சி அடைந்தவர். இப்போது நீங்கள் எங்கு வாழ்கிறீர்கள்? ரொரென்டோ நகரை விட்டு வேறு இடம் சென்று விட்டீர்களா? எனது அன்புக்குரிய கலை இலக்கிய தோழரே என்றென்றும் எனது நல்வாழ்த்துக்கள்.

*நினைவுகளும் காட்சிகளும் தொடரும். வீணைமைந்தன்*

# ஈழத்துத் திருக்கோவில்கள் 943



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## ரம்பொட ஆஞ்சநேயசுவாமிகள் ஆலயம், ரம்பொட. மலையகம்

"கண்டிலன் உலகம் மூன்றும் காலினாற் கடந்துகொண்ட
புண்டரீகக் கண் ஆழிப்புரவலன் பொலன்கொள் சோதிக்
குண்டலவதனம் என்றால் கூறலாம் தகைமைத்து ஒன்றோ
பண்டைநூல் கதிரோன் சொல்ல படித்தவன் படிவம் அம்மா."

அதிர்வுகள் ஒவ்வொருவருடைய உடல், உளத் தன்மையினால் உருவாக்கப்படுகின்றது. இவ்வாறே ஆலயங்களிலே நடைபெறுகின்ற கும்பாபிஷேகக் கிரிகைகள், மற்றும் மந்திரவொலிகள் போன்றவற்றினால் ஆலயங்களிலும் மிக உயர்நிவைலயிலான அதிர்வுகள் காணப்படுகின்றன. ஆலயத்திற்குச் செல்லும் ஒருவருடையகுறைந்த அதிர்வும், ஆலயங்களிலே காணப்படுகின்ற உயர் அதிர்வும் ஒன்றிணையும் வாய்ப்பு ஏற்படுகின்றது. இதனால் மிகமிக உயர்நிலைகொண்ட (Resultant vibration) அதிர்வுகள் ஆலயத்திலுள்ள பக்தனைச் சூழ உருவாக்கப்படுகின்றது. இவ்வாறாக ஆலயத்தினுள் ஏற்படும் அதிர்வுகளினால் பக்தனின் உடலும் உள்ளமும் தூய்மையடைகின்றது. மனதை ஒருநிலைப்படுத்த இவ்வாறான அதிர்வுகள் பெருந்துணை புரிகின்றன. இவ்வாறான நிலையில் ரம்பொட ஆஞ்சநேயர் ஆலயத்திலுள்ள தியான மண்டபத்தில் அமர்ந்து தியானம் செய்பவர்கள், மனதை ஒருநிலைப்படுத்தித் தியானம் செய்வதோடு முற்றுமுழுதான பலனையும் பெற முடிகின்றது. ஆஞ்சநேயர் சிறந்த ராமபக்தர். எங்கெல்லாம் இராமநாமமோ, இராமாயண கதாகாலட்சேபமோ நிகழ்ந்தால், அங்கெல்லாம் ஆனந்தம் நிரம்பிய கண்களுடன் கூப்பிய கரங்களுடன் அரூபியாக, அருகில்நின்று செவி மடுக்கிறார் அருள்தரும் ஆஞ்சநேயர் எனப் புராணங்களிலே கூறப்பட்டுள்ளது.

இந்துமதத்திலே இறைவன் அனைத்தையும் அறிவான் என்ற கொள்கை பின்பற்றப்பட்டபோதிலும், ஸ்ரீ ஆஞ்சநேய வழிபாட்டில் மன்றாடிக் கேட்டு, பயன்பெறும் சம்பிரதாயம் கடைப்பிடிக்கப்படுகின்றது. ஒவ்வொருவரும் பிரார்த்தனை செய்து தாம் நினைப்பதை அடைவதென்பது சுலபமல்ல. அதற்குரிய பக்குவத்தை ஒரு சிலரே பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களையே குரு என்றழைக்கின்றோம். எனவேதான் பக்குவப்பட்ட குருவின்மூலம் ஆண்டவனை அடைவது சுலபம் என இந்து மதத்திலே குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான பிரார்த்தனை முறை, இறைவனிடம் மன்றாடிக் கேட்கும் முறை ஏனைய மதங்களிலும் காணப்படுகின்றது. இவ்வழிபாட்டு முறை மூலம் மக்கள் மனதிலிருக்கும் பாரம் குறைவதோடு, தமக்காக வேண்ட, தமது குறைகளைச் சொல்லி நிவர்த்தி காண ஓரிடம் இருப்பதாக எண்ணி மன ஆறுதல் அடைவர். ஸ்ரீ ராமபிரான், சீதாப்பிராட்டி ஆகியோரின் முழு அன்புக்கும் பாத்திரமானவராக ஆஞ்சநேயர் விளங்குகின்றார். இவர் விந்தியமலையில் தவமிருந்து பல வரங்களைப் பெற்றவர். ஸ்ரீ ராமபிரானுக்குத் தொண்டாற்றி அனைவராலும் வணங்கப்படும் பெரும்பேறு பெற்றவர். ஈழத்தில் ஆஞ்சநேயர் என்ற பெயரோடு வழிபாடு செய்து வருகின்றனர். ஆஞ்சநேயரின் சிறப்பியல்புகளுள் அவரின் பேரறிவு சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. நால்வேதங்கள், ஆறு வேதாங்கங்கள், அறுபத்துநான்குகலைகள், ஐந்திரவியாகரணம், என்னும் நான்குதுறைகளையும் கற்றவர். அனுமாரின் அறிவுமாட்சி கற்றவர் வியக்குந் தன்மையுடையது. அறிவுத்துறை முற்றிய மாமுனியால் வித்தகன் என்றும், பிரமன் வாயால் மேதாவியாகுக என்ற வாழ்த்தும், இராமபிரானின் திருவாயால் "யார்கொல் இச் சொல்லின் செல்வன்" என்ற புகழும் பெற்றவராக ஆஞ்சநேயர் போற்றப்படுகின்றார். தேவர்கள், மூவர்கள், முனிவர்கள் ஆகியோர் அருளிய வாழ்த்துக்கள், வரங்களினால் மரணமில்லாப் பெருவாழ்வு பெற்றவராக, பக்தர்கள் மனதிலே ஆஞ்சநேயசுவாமி குடிகொண்டுள்ளார்.

அனுமார், வீர அனுமார், ஆஞ்சநேயர், சிறிய திருவடி எனச் சமயநோக்கில் போற்றப்படும் இவர், வைணவதிருக்கோயில்களில் பரிவார தெய்வமாக எழுந்தருளியுள்ளார். வைணவதிருக்கோயில்களில் பரிவாரதெய்வமாக விளங்கும் இவர் தனியறையில் அமர்ந்து அடியார்களின் துதியைப்பெற்று அருள் வழங்குகின்றார். பிறவி காரணமாக அமைந்த உடம்பை சிற்றுருவமாகச் சுருக்குதலும், வானுயர வளர்த்து விசுவரூபம் எடுத்தலும், மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட பேராற்றல்களாகக் காணப்படுகின்றன. இவ்வாற்றலைப் பெற்றவராக ஆஞ்சநேய சுவாமி விளங்குகின்றார் ஸ்ரீ ஆஞ்சநேய வழிபாட்டால் எதையும் அறிந்து கொள்ளும் சூட்சும புத்தி, பலவீனம் விலகி உடல்பலம், ஆன்மபலவிருத்தி, புகழ் கௌரவம் அடைதல், கொள்கையில் இலட்சியத்தில் உறுதிப்பாடு, அஞ்சா நெஞ்சம், தேக ஆரோக்கியம், விழிப்புணர்வு, வாக்கு வன்மை ஆகியன ஒருங்கே அமையப்பெற்று, நல்வாழ்வு பெறலாம் என, ஸ்ரீ ஆஞ்சநேயர் சுலோகத்திலே கூறப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஓரிடத்திற்குச் செல்ல வேண்டும். முகவரி கையிலுள்ளது. ஆயினும் போகும் வழி தெரியவில்லை. இந்நிலையில் வழி தெரிந்த ஒருவரின் துணையோடு, அன்றி அவர் வழிகாட்டலோடு செல்வோமாயின், குறிப்பிட்ட இடத்தை மிகச் சுலபமாக அடைய முடியும். இறைவனை நோக்கிய பயணமும் இவ்வாறு தான் காணப்படுகின்றது. இறைவன் இருக்கின்றான் என்பதை ஏற்றுக் கொள்ளும் மக்களுக்கு, அவனைச் சென்றடையும் பாதை சரியாகத் தெரிவதில்லை. இப்பாதையைக் காட்டக் கூடியவர்களாக அமைபவர்களைக் குரு என்றோ, சுவாமி என்றோ அழைப்பது வழக்கம். இவ்வாறானவர்களின் வழிகாட்டலோடு சரியான பாதையில் சென்றால் நாம் நினைத்ததை அடைவது சுலபமாகிவிடும். குரு நிலையிலிருந்து மக்களை நல்வழியில் அழைத்துச் செல்பவராக, ஸ்ரீ ஆஞ்சநேயசுவாமிகள் விளங்குகின்றார்.

மேற்கூறிய சிறப்புக்களைத் கொண்ட ரம்பொட ஆஞ்சநேயர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் பத்து நாட்களுக்கு நடைபெறும். ஆஞ்சநேயரின் திருவுருவச் சிலையைத் தாங்கிய ரதம் ஊர்வலமாகச் சீதையம்மன் கோவிலுக்குச் செல்லும். அங்கு சிறப்பான பூசைகள் நிகழும். ஒவ்வொரு வருடமும் மார்கழி அமாவாசையன்று, ஆஞ்சநேயருடைய ஜெயந்திவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. ஆஞ்சநேயரை வழிபட்டால் நற்புத்தி, சரீரபலம், கீர்த்தி, அஞ்சாமை, பயமின்மை, நோயின்மை, வாக்குச்சாதுரியம் ஆகிய நன்மைகள் கிடைக்கும். இத்தகைய சிறப்புக்களை அருளும் ஆஞ்சநேய சுவாமிகளுடைய திருக்கோவில், மலையகப்பகுதியில் ரம்பொட பிரதேசத்தில் அமைந்து காணப்படுகின்றது.

*வளரும்...*

---

# பறந்துபோய் இலக்கை அடைய முயற்சி செய்பவர்களுக்கு:

**ஜீவன் முக்தி (பகுதி) 113**



சன்யாஸம் என்று முடிவு எடுத்தவர்களுக்கும், அவர்கள் தங்கள் உணர்வை சூக்சுமமாக்க ஒன்பது மாதங்கள் செய்ய வேண்டிய தியானங்களையும், ஈஸ்வரன் அளிக்கின்றார்.

ஸ்தூலத்தை விட்டு சூக்சுமத்திற்கும், சூக்சுமத்தை விட்டுவிட்டு பரத்திற்கும் பரத்தை விட்டு, ஒவ்வொன்றையும் விட்டுவிட்டுத் தியானிக்க இறுதியில் சிவநிலை அடையப்படும்.

முதலில் ஸ்தூல ரீதியாக உடலால் அனுபவிப்பதை விடுதல்.

இரண்டாவதாக கனவில் இன்னொரு துணை தேவைப்படகடகூடாது. தேவைப்படுகிறாற்போன்று எண்ணம் வந்தால்கூட, அதில் விழிப்புணர்வை எடுத்துவந்து விழித்துக்கொள்வது. மூன்றாவது சூட்சுமத்தில் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்வது. பரநிலையில் தூய்மை ஆக்கிக்கொள்வது... ரொம்ப ஆழமான சத்தியம். தான் ஆண்' நான் பெண்' என்ற கருத்தையே மறந்து விடுவது. இப்படி நடக்கும் போதுதான் நிஜமாகவே ஒரு ஆண் முழு ஆணாகின்றார். ஒரு பெண் முழுப் பெண்ணாகின்றாள்.

நடந்துபோய் இலக்கை அடைய முயற்சி செய்பவர்களுக்கு:
அருமையான நுட்பம் ஒன்றின் உதவியோடு தொடங்கலாம்.....

முதல்படி:
ஒரு ருசியான இனிப்பான நாக்கில் ஒடுத்து வைத்து, ஆழந்து கண்களை மூடி, அந்த நேரத்தில், நாக்கில் ஏற்படுகிற ஆனந்தத்தைத் தியானியுங்கள். சுவையைப் புரிந்துகொண்ட பிறகு...அந்த பொருள் இல்லாமலேயே, அந்த சுகத்தை மட்டும் தியானித்தால் என்னவாகும்?
அந்தபொருள் இல்லாமலேயே, நாக்கிலே ருசி உணரப்படும்.

இரண்டாவது படி:
அதற்குப் பிறகு அந்தப்பொருளைப் பற்றி நினைவைக்கூட எடுத்து வராமல், சுகத்தை மட்டும் கொண்டு வருதல்.
முதலில் இனிப்பை நாக்கில் வைத்து. ருசியைத் தியானிப்பது. ஆழமான விழிப்புணர்வோடு உணர்வுபூர்வமாக இனிப்பை வைக்காமல், இனிப்பை வைப்பது போன்று பாவனை மட்டும் செய்து, அதே ருசியை, சுவையை ஏற்படுத்துவது.

மூன்றாவது படி:
அதற்குப்பிறகு இந்த இனிப்பை மனதால் கூட நினைக்காமல், நாவில் வைக்காமல் ருசியை ருசித்தல் தன்மையை மட்டும் ஏற்படுத்துவது.
அப்போது என்ன ஆகும்? இனிப்பு இல்லாமலேயே ருசிக்கின்ற தன்மை, நாக்கிற்குள் மலர்ந்துவிடும். அதைத்தான் அமிர்தம் என்று சொல்வது. இனிப்பு இல்லாமல் ருசிக்கின்ற தன்மை வந்தால், அமிர்த நிலைக்குப் போய்விடும்.
இப்படி ஒவ்வொரு இந்திரியத்தோடும். அந்தந்த இந்திரிய சுகத்தைச் சூக்சுமமாக வைத்துத் தியானம் செய்தல். நன்றாக ஆழ்ந்து புரிந்து கொள்ளுங்கள்.
இதுதான் உதாரணம். இதற்கு யோகத்தில் பிரத்யாகாரம்' என்று பெயர். உணர்வை உள்வாங்குதல்.
இதுபோல், ஒவ்வொரு இந்திரியத்தோடும் செய்து பார்த்து உங்களால் உங்களுடைய உணர்வை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர முடியும் என்று ஈஸ்வரன் சொல்கிறார்.
முதலில் ஒரு நுட்பத்தைக் கொடுத்தோம். அது என்னவென்றால், உடலரீதியாக, ஸ்தூலரீதியாக எந்த விதமான இன்னொரு உடலைத் தேடும் செயலிலும் இறங்காமல் இருப்பது. அது சூக்சும நிலையில் கனவில் கூட இறங்காமல் இருப்பது...பரநிலையில் 'தான் ஆண், தான் பெண்' என்பதையே மறந்துவிடுவது இந்த விளக்கம். இந்த சத்தியம் சன்யாசிகள் கடைப்பிடிக்க வேண்டியது.
அடுத்ததாக விளக்கினேன் அல்லவா....
இனிப்பை வைத்துப்பார்த்துச் சுவையை நாக்கில் உணர்வது.
இரண்டாவது, இனிப்பை வைக்காமல், வைத்தது போன்று பாவனைசெய்து, அந்தச் சுவையை உணர்வது மூன்றாவது. இனிப்பையே நினைக்காமல் நேரடியாகச் சுவை உணர்வை உருவாக்குவது இந்தத் தியானமுறை கிரஹஸ்தர்கள் செய்ய வேண்டியது.

படிப்படியாக அவர்கள், தங்களை சூக்சும நிலைக்குள் எடுத்து வருவது.
இவர்கள் நேரடியாக உணர்வையே மாற்றுவது.
ஒரே நுட்பத்தை இருவருக்கும், இரு வேறுவிதமாக ஈசன் வகுத்து அளித்து இருக்கின்றார். முதல் முறையில் சன்யாசிகள் முயற்சி செய்து பார்ப்பதற்கு பூர்ணாபிஷேகம், இந்த இரண்டாவது முறையில் முயற்சி செய்து பார்ப்பது கிரஹஸ்தம் என்று பெயர். இரண்டிலுமே இவர்கள் ஒரே உச்ச நிலையைத்தான் இறுதியில் அடைகிறார்கள்.
பூர்ணாபிஷேகம் வழியாக போகிறவர்கள், ஒன்பது மாதத்தில் சீக்கிரமாக அடைந்து முடித்துவிடுகிறார்கள். நேரத்தை வீணடிப்பதில்லை.
கிரஹஸ்தர்கள் அனுபவித்து, அனுபவித்து சூக்சுமமாக மாற்றிக்கொள்கிறார்கள். கொஞ்சம் நேரம் எடுத்துச் சுற்றி வருகிறார்கள். ஆனால் அவர்களும் அனுபூதிக்காகத்தான் வந்து சேருகிறார்கள். சிலபேர் நடந்து போகிறார்கள். சிலபேர் பறந்து போகிறார்கள். ஆனால், பறந்து போகத் தெரியாவர்கள், பறந்து போக முயற்சி செய்யக்கூடாது.
அது இருப்பதை விட்டு விட்டுப் பறப்பதைப் பிடிப்பதற்குச் சமம். கீழேதான் விழுவார்கள்.
நாம் நடந்து போகப் பிறந்தவர்களா?
இல்லை பறந்து போகப் பிறந்தவர்களா? என்பது, ஒன்பது மாத சுய ஆராய்ச்சி மூலமாக யார் வேண்டுமானாலும் கண்டுபிடித்துவிட முடியும்.
இந்த உடம்பை நடந்து போவதற்காக உருவாக்கினோமா அல்லது பறந்து போவதற்காக உருவாக்கினோமா என்று முதலில் கண்டுபிடித்துவிட வேண்டும்.
கண்டுபிடித்துவிட்டு, நடந்து போக உருவாக்கியவர்கள் என்றால், நடந்து போகவேண்டும். பறந்து போக உருவாக்கியவர்கள் என்றால், பறந்து போக வேண்டும். முதலில் குறிக்கோளைத் தெளிவாக்க வேண்டும்.

குறிக்கோளைத் தெளிவாக்கினாலே எதற்காக இந்த உடலை எடுத்தோம், என்பது புரிந்து விடும். நாம் இந்த உடலை எதற்கு உருவாக்கினோம் என்று கண்டுபிடித்து விட்டு, அதன்படி செய்வதுதான், வாழ்க்கையில் முழுமை அடைவதற்கான ஒரே வழி. பறக்க வேண்டியவர்கள் நடக்கவும் கூடாது. நடக்க வேண்டியவர்கள் பறக்கவும் கூடாது.
பறக்க வேண்டியவர்களுக்கான முறை இங்கு தெளிவாக விளக்கப்பட்டுவிட்டது. நடக்க வேண்டியவர்களுக்கான முறையும் தெளிவாக விளக்கப்பட்டுவிட்டது.
யாருக்குக் கிரஹஸ்தம், யாருக்கு சன்யாஸம் என்று இதுவரைக்கும், இந்த அளவிற்குத் தெளிவாக பிரபஞ்சத்திலே, ஆன்ம உலகிலே விளக்கப்படவே இல்லை. இது விளக்கப்படாததனால்தான் இவ்வளவு குழப்பங்கள். முதல் முறையாக மிகத் தெளிவாக ஈசனால் விளக்கப்பட்டு இருக்கிறது.

இந்த விளக்கத்தை உள்வாங்கி, யாருக்கு எந்த வாழ்க்கையோ, அவர்கள் பிராரப்தத்தைக் கடந்து சத்தியத்திற்குள், இங்கு விளக்குகின்ற சிவத்தன்மைக்குள் நுழைவீர்களாக! என்றும் உங்களின் விதியை வெல்லும் வீரியம் விழிப்படைவதாக! என்றும் ஆசீர்வதிக்கும் ஈசனின் ஆசிர்வாதம் எல்லோருக்கும் மலரட்டும்.

விதியை வெல்லும் ஜீவன் முக்தவாழ்விற்குள், சுய பரிசோதனைக்குள் நுளையுங்கள்.

----------

அன்று பெங்களூரில் தியான சத்சங்கம். நாங்கள் சென்ற வாகனம் கோளாறாகிவிட்டதால் ஆஸ்ரமத்திற்கு திரும்பி வர, பக்தர் ஒருவர் தன்னுடைய காண்டஸா காரில் வரும்படி கேட்டுக் கொண்டார்.

எனவே கண்டஸாகாரில் ஏறி உட்கார்ந்தபடி அங்கிருந்த பக்தர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டிருந்தோம். காரின் பக்கவாட்டில் இருந்து கையை எடுப்பதற்குள் காரின் கதவு சாத்தப்பட்டது. கதவிடுக்கில் சிக்கிய கட்டைவிரல் 'சதக்' என நசுங்க, வலியும், எரிச்சலும் அந்த இடத்தில் அதிகரித்துக் கோண்டே போனது. கொஞ்ச நேரத்திலேயே அந்த எரிச்சலும், வலியும் மறைந்து போனது.. அடுத்தடுத்த வேலைகளைப் பாரக்க ஆரம்பித்து விட்டோம். என்று ஆஸ்ரம பிரம்மச்சாரிகளிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னோம். வலியை கூட பரவசமாக்கும் சக்தி விழிப்புணர்விற்கு உண்டு.

*பரமஹம்ஸ நித்தியானந்தர் சுவாமிகள் வழங்கிய அமுத மொழிகள்*

மேலதிக தொடர்புகளுக்கு: (416) 439-2080

# Carefirst Family Health Team


## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com




# PRECONSTRUCTION HOUSES & TOWNHOUSES!

RE/MAX



Four Sixteen Whitby Condos

Old Colony Estates
Falconcrest Homes

Hillsborough
Andrin Homes

Anchor Woods

Anchor Woods By Andrin Homes
Andrin Homes

Hometown Sharon Village

Blue Sky

Universal City Condos 4

U.C. Homes
Tribute Communities

Cornell Rouge Homes
Forest Hill Homes Ltd.

On the Mark Towns
Stateview Homes

Angus Glen South Village Homes

Victory Green Homes

Nao Towns
Stateview Homes

**Bala Logendralingam**
REALTOR®

EXECUTIVE Award
100% Award

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222

647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான
மரக்கறி வகைகள்
மற்றும் பழவகைகளுக்கு
மொன்றியலில்
புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519







25 வெள்ளி விழா 2021
UTHAYAN உதயன்




உதயம் 1307 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 23, 2021

# ஸ்காபுறோ நகரப் பிரதேசங்களில் உடனடி தடுப்பூசி வழங்கும் நிலையங்கள் இயங்கத் தொடங்கியுள்ளன

ஸ்காபரோ பகுதியில் உள்ள அதிக நோய்த்தொற்று உள்ளதாக அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களான **M1G** மற்றும் **M1J** தபால் குறியீட்டினையுடைய பிரதேசகங்களில் வசிக்கும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஸ்காபரோ சுகாதார கட்டமைப்பு தடுப்பூசி வழங்குவதற்கென உடனடி சிகிச்சை மையங்களை நடத்தவுள்ளது. இங்கு தடுப்பூசி போட்டுக்கொள்ள வருபவர்கள் தங்களது வதிவிட முகவரியை உறுதிப்படுத்துவதற்கான ஆதாரங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

சென்டானியல் கல்லூரியில் அஸ்ட்ராஜெனகா தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி எதிர்வரும் ஏப்ரல் 22, 23, 24 ஆம் திகதிகளில் சென்டானியல் கல்லூரியில் நடைபெறவுள்ள தடுப்பூசி சிகிச்சை மையத்தில் ஸ்காபரோவில் வசிக்கக்கூடிய 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கப்படும். நீங்கள் முன்பதிவுக்காக சிகிச்சை மையங்களைத் தேர்வுசெய்யும்போது, கொடுக்கப்பட்ட பட்டியலிலிருந்து "சென்டானியல் கல்லூரி" என்பதைத் தேர்வு செய்யவும்.


40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி

ஒன்ராறியோ மாநிலமானது அஸ்ட்ராஜெனெகா கோவிட் -19 தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கான வயதெல்லையை அதிகரித்துள்ளது. எனவே, அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியை வழங்கக்கூடிய ஸ்கார்பாரோவில் உள்ள மருந்தகங்களைத் தெரிவுசெய்து இப்போதே 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் போட்டுக்கொள்ளக்கூடியதும், 24-7 காலவரையறையின்றி செயற்படக்கூடியதுமான அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுங்கள்.

கீழேயுள்ள இணைப்பில் நீங்கள் பதிவுசெய்துகொள்வதன்மூலம், **Shopper's Drug Mart** மருந்தகங்களில் உங்களுக்கான தடுப்பூசி மருந்தினைப் பெற்றுக்கொள்ளலாம். ஸ்காபாரோ ரூஜ் பகுதியில் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியை வழங்கும் மருந்தகங்களைக் கண்டறிந்து உங்களுக்கான முன்பதிவையும் செய்துகொள்ளுங்கள்.

*விஜய் தணிகாசலம், ஒன்ராரியோ மாகாண சட்டமன்ற உறுப்பினர்.*
*ஸ்காபரோ - றூஜ் பார்க்*

# கொரோனா தொற்றுக் காலத்திலும் கனடாவின் 20 பெருஞ் செல்வந்தர்கள் மேலும் செல்வத்தைக் குவித்துள்ளனர்





கொரோனா தொற்றுநோயால் மில்லியன் கணக்கான கனேடியர்கள் வேலை இழந்தாலும், அவர்கள் குடும்பங்கள் தாங்கொன்னா துயரங்களில் ஆழ்ந்து போயிருந்தாலும், கனடாவில் உள்ள முதல் 20 பில்லியனர்கள் என அழைக்கப்பெறும் பெருஞ் செல்வந்தர்கள் கனேடிய வரலாற்றில் மிகவும் பொருளாதார ரீதியாக மற்றவர்களுக்கு பேரழிவு தந்த ஆறு மாதங்களில் சராசரியாக தலா 2 பில்லியன் டாலர் செல்வத்தை குவித்துள்ளனர் என கனடாவின் பொருளாதாரத் துறை சஞ்சிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த பெருஞ்செல்வந்தர்களுள் மிக அதிகமான இலாபம், தாம்சன் குடும்ப செல்வத்திற்கு (8.8 பில்லியன் டாலர் அதிகரிப்பு என மதிப்பிடப்பட்டுள்ளது), அதைத் தொடர்ந்து ஹாப்பிபியின் டோபி லுட்கே (6 6.6 பில்லியன் அதிகரிப்பு) – அமேசான் மற்றும் ஆப்பிள் போன்ற தொழில்நுட்ப நிறுவனங்களிடையே எல்லைக்கு தெற்கே மிகப்பெரிய லாபங்களை பிரதிபலிக்கிறது. வெஸ்டன் குடும்பம் மூன்றாவது இடத்தைப் பிடித்தது, லுலுலேமன் நிறுவனர் சிப் வில்சன் கிட்டத்தட்ட 3 பில்லியன் டாலர் லாபத்தைக் கண்டார்.

*(உள்ளே விபரமான செய்தி 17ம் பக்கத்தில்)*

# கியுபாவில் கெஸ்ரோ இல்லாத தலைமைத்துவம் உருவாகின்றது



உலகில் எத்தனையோ ஆண்டுகளாக அமெரிக்கா போன்ற நாடுகளின் நடவடிக்கைகளை முறியடித்து கம்யூனிச கொள்கைகளை பின்பற்றி ஆட்சி நடத்தி மக்களின் நல்வாழ்விற்காக தன்னை அர்ப்பணித்த கியுபாவின் பிடல் கெஸ்ரோ அவர்களுக்கு பின்னர் கடந்த 11 ஆண்டுகளாக கியூபாவை வழி நடத்திய ராவுல் காஸ்ட்ரோவிடமிருந்து கியூபா கம்யுனிஸ்ட் கட்சியின் அடுத்த முதன்மை செயலாளராக பொறுப்பை ஏற்றுள்ள மிகுவேல் டயஸ் கனேல் நியமிக்கப்படவுள்ளார். இதன் மூலம் கெஸ்ரோ என்னும் பெயர் கொண்ட இரண்டு சகோதரர்கள் வழி நடத்திய நேர்த்தியான ஒரு நாடான கியூபாவை தலைமை தாங்கி நடத்தும் பொறுப்பை புதியவர் ஒருவர் ஏற்றுள்ள சகாப்தம் தற்போது கியூபாவில் உருவாகியுள்ளது. *(உள்ளே விபரமான செய்தி 8ம் பக்கத்தில்)*

# துறைமுக நகரம்: ஒரே நாடு ஒரே சட்டம்?

## – யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



கொழும்பு துறைமுகத்துக்கு அருகே சீனாவால்கட்டப்பட்டு வரும் நிதிநகரம் தொடர்பில் சர்ச்சைகள் எழுந்திருக்கின்றன.

இப்பட்டினம் மகிந்த ராஜபக்சவின் காலத்தில் கட்டப்பட்ட தொடங்கியது. கொழும்பின் இதயமான ஒரு பகுதியில் கடலை மூடி இந்நகரம் உருவாக்கப்பட்டது. ஏறக்குறைய 216 ஹெக்டேர் நிலப்பரப்பு இவ்வாறு உருவாக்கப்பட்டது. இதில் 116 ஹெக்டேர் நிலப்பரப்பு சீன கொம்பனிக்கு உரித்தாக இருக்கும். சுமார் 90 ஹெக்டேர் நிலப்பரப்பு இலங்கை அரசாங்கத்தின் உரித்தாக இருக்கும். சீன கொம்பனிக்கு உரித்தாக உள்ள நிலப்பரப்பில் சுமார் 20 ஹெக்டேர் நிலப்பரப்பு முழுக்க முழுக்க அந்த கொம்பனிக்கே சொந்தமாக மாற்றப்பட்டுவிடும். அது இலங்கைத் தீவின் சட்ட திட்டங்களுக்கு உட்படாது. சீன கொம்பனியே கடந்த தேர்தல்களின் போது ராஜபக்சக்கள் இது பெருமளவு நிதி உதவிகளைவழங்கியதாக ஒரு குற்றச்சாட்டு உண்டு.

*(உள்ளே விபரமான கட்டுரை 6ம் பக்கத்தில்)*




# உரும்பிராயில் இயங்கும் இரசாயன உரக் கலப்பற்ற வீட்டுத் தோட்ட முகவர் நிலையத்திற்கு கனடாவின் TORONTO VOICE OF HUMANITY அமைப்பு வழங்கிய ஆதரவு




யாழ்ப்பாணம் உரும்பிராயில் இயங்கும் இரசாயன உரக் கலப்பில்லாத வீட்டுத் தோட்ட முகவர் நிலையத்திற்கு கனடாவின் **TORONTO VOICE OF HUMANITY** அமைப்பு வழங்கிய ஆதரவின் மூலம் யாழ்ப்பாணம் திருநெல்வேலி மற்றும் உரும்பிராய் ஆகிய பகுதிகளில் வாழும் வருமானம் குறைந்த நான்கு குடும்பங்களுக்கு இரசாயன உரக் கலப்பற்ற காய்கறிக் கன்றுகள் வழங்கப்பெற்றன.

*(உள்ளே விபரமான செய்தி 18ம் பக்கத்தில்)*